கோகுலம்

GOKULAM

ஆகஸ்ட் '91 ரூ. 3/-




PARRY'S PAGE

இ தோ மே ஜி க்

ஹலோ, நண்பர்களே! எங்கள் கைகளிலே தொப்பி களும், மந்திரக் கோல்களும். ஏன் தெரியுமா? என்ன, மேஜிக் என்றா சொன்னீர்கள்? நீங்கள் கெட்டிக்காரர் கள் தாம்! காராமில்க், காஃபிபைட், ட்ரை-மீ நாம் அனைவரும் மேஜிக் நிபுணர்கள் ஆகிவிட் டோம். எங்கள் மேஜிக்கை நீங்கள் காணமுடியாவிட்டாலும், நீங்கள் கற்றுக் கொள்ள சில தந்திரங்கள் சொல்லித் தரு வோம்... உங்கள் நண்பர்கள் ஆச் சரியப் படு வார்கள்.








Pic. 1



பின்க்ளிப் பிடி



ஓரடி நீளமும், ஈரடி அகலமும் உள்ள ஒரு காகிதத்தை மடித்து, இரண்டு பேப்பர் கிளிப்புகளை இதுபோல இணையுங்கள். பிறகு, நீ மந்திரவாளி! சிதறிய கிளிப்புகள் இரண்டும் ஒன்றாய் வரும்.



இதைச்செய்கையில், பேப்பரின் இரு முனைகளை யும் சடக்கென இழுத்தால் கிளிப்புகள் இரண்டும் மேலெழும்பி, கீழே வரும்போது ஒன்றாயிணைந்து வரும். பி.கு. இதை நண்பர்களுக்குச் செய்து காட்டுமுன்பு, இருமுறை பழகுதல் நல்லது.



திடீர் திகில்

உங்கள் இடது கையை முன் னால் நீட்டுங்கள். உங்கள் கை உங்களை நோக்கி இருக் கும்படி, கையை வலதுபுறம் நோக்கி வைக்கவும். கட்டை விரலும், (படத் தில் காட்டியபடி) உங்களை நோக்கி வளைந்திருக்கட்டும். உங்கள் வலது கையை, காட்டியுள்ள அதற்கெதிராக வைத்து, வலது கட்டு விரலால் இணைப்பை மறையுங்கள். இப்போது, வலது கையை இடது கட்டுவிரல் வழியாக நகர்த்துங்கள். ஐயோ! இடது கட்டை விரல் நுனியை வெட்டுவது போலவே இருக்கும். (உங்கள் முன் நிற்கும் நண்பர்களுக்கு இது எப்படித் தோன்றும் எனக் காட் டும் படம்-2) சீக்கிரம் பழைய நிலைக்கே வாருங்கள், யாரேனும் பயந்து அலறுவார்கள்.



Pic. 2



சரி நண்பர்களே! இப்போது இவ்வளவுதான். இன்னும் ஏராளமான டிரிக்குகள் உள்ளன. ஆனால் இங்கே இடம் தானில்லை. இதையெல்லாம் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் காட்டி மகிழ்வீர்கள் என நம்புகிறோம்.

எங்களுக்கு எழுதுங்கள். உங்கள் நண்பர்களான காஃபிபைட், காராமில்க், ட்ரை-மீ மற்றும் நாளும் உங்கள் கடிதத்திற்காக காத்திருப்போம். டாட்டா!

கோகுலம்

1991 ஆகஸ்ட் மாத இதழ்
மலர் : 9 இதழ்:7





அருமைச் சிறுவர் சிறுமியரே!

உங்கள் அனைவருக்கும் சுதந்திர தின வாழ்த்துக்கள்.

உலகத்தின் மிகப் பெரிய ஜனநாயக நாட்டில் நாம் வாழ்கிறோம் என்பதை எண்ணி நாமெல்லாம் பெருமைப்பட வேண்டும். இந்த உன்னதமான நிலைக்கு நமது நாட்டைக் கொண்டு வர, சிறையிலே வாடியும், பலவிதக் கொடுமைகளுக்கு ஆளாகியும் உயிர்நீத்த எண்ணற்ற தியாகிகளின் புனிதமான தியாகங்களை நாம் இந்த நல்ல நாளில் நினைவு கூறுவோம். அவர்களுக்கு இருந்த தியாக உணர்வு, தேசப்பற்று, அநீதிகளை எதிர்க்கும் துடிப்பு, ஒற்றுமை உணர்வு நமக்கு வர வேண்டும் என்று இறைவனை வேண்டிக் கொள்வோம். விலை கொடுத்து வாங்க முடியாத இந்த உணர்வுகளால்தான் நம் நாட்டை உயர்த்த முடியும். இந்த உணர்வுகள் நமக்கு ஏற்பட தேசத் தியாகிகளின் வீர வரலாறுகள் பெருமளவுக்கு உதவும். இதைக் கருத்தில் கொண்டே கோகுலத்தில் தியாகிகளின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் அவ்வப்பொழுது தரப்படுகின்றன.

பெரியவர்களால் மட்டுமே தியாகம் செய்ய முடியும் என்று பலரும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இது தவறு என்பதை நமது இந்திய நாட்டின் சுதந்திரப் போராட்ட வரலாறு காட்டுகிறது. எத்தனை வீரச் சிறுவர் சிறுமியர்கள் சுதந்திரப் போராட்டத்தில் தங்கள் உயிரைத் தியாகம் செய்திருக்கிறார்கள் என்பதை அறியும் போது உடல் சிலிர்க்கிறது. இப்படி நமது சுதந்திரத்திற்காக உயிர்த் தியாகம் செய்து மறைந்த சின்னஞ்சிறு தியாகிகள் பற்றிய தொடர் ஒன்று வெகு விரைவில் கோகுலத்தில் இடம்பெறப் போகிறது.

கோகுலத்தில் தங்கள் பெயர் வர வேண்டும் என்பதற்காகப் பலரும் ஏற்கெனவே வெளிவந்த கதைகளை எழுதி அனுப்பி விடுகிறார்கள். ஆசிரியர் கண்ணுக்குத் தப்பினாலும், ஆயிரக்கணக்கான வாசகர்களின் பார்வையிலிருந்து இவை தப்ப முடியாது என்பதை இவர்கள் உணர வேண்டும். விழிப்போடு இருந்து இவற்றைச் சுட்டிக்காட்டும் உங்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். கோகுலம் வாசகர்கள் சாதாரண மாணவர்களா என்ன?

இடமில்லாத காரணத்தால் இந்த இதழில் 'சிறுவர் சங்கச் செய்திகள்' இடம் பெறவில்லை. அடுத்த இதழில் வரும்.

அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்,
[signature]
(கௌரவ ஆசிரியர்)





உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் - பாரதியார்.



எவ்வளவு உண்மை?

அரசன் ஒருவன் இளவரசனைக் கல்வி கற்க ஓர் ஆசிரியரிடம் அனுப்பி வைத்தான். ஒருநாள் இளவரசன் தனது ஆசிரியரிடம் ''அமைதி பெறுவது எதில் உள்ளது? என்று கேட்டான். ''வாய் மூடி இருப்பதில் தான் உண்மையான அமைதி இருக்கிறது'' என்று ஆசிரியர் பதிலளித்தார். அது முதல் இளவரசன் வாய் திறப்பதே இல்லை.

இளவரசன் மௌனமாகி விட்டதை எண்ணி அரசன் கவலையுற்றான். என்னவெல்லாமோ மருத்துவம் செய்தும் இளவரசன் பேசவேயில்லை.

ஒருநாள் மன்னரும் அவனது உறவினர்களும் ஓர் ஊருக்குப் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தனர். வழியில் ஒரு பறவை, மரத்தில் அழகாகக் கூவிக் கொண்டிருந்தது. மன்னன் தமது ஏவலர்களிடம் அப் பறவையைப் பிடித்து வருமாறு உத்தரவிட்டான். காவலர்கள் பறவையைப் பிடித்து வந்து கொடுத்தனர். பறவை பிடிபட்டதை அறிந்த இளவரசன் பறவையைப் பார்த்து, ''நீ வாய் திறந்த காரணத்தாலன்றோ கூண்டிற்குள் அடைபட்டாய்'' என்று வருத்தத்தோடு கூறினான். இளவரசன் கூறியதைச் செவியுற்ற காவலர்களில் ஒருவன் விரைந்து சென்று, 'அரசே! இளவரசர் பறவையோடு பேசுகிறார். அவரால் பேச முடியும் என்பது உறுதி. வேண்டும் என்றுதான் அவர் மௌனமாக இருக்கிறார்'' என்றான்.

அரசன், இளவரசன் வேண்டுமென்றே மௌனமாக இருப்பதை அறிந்து சினங்கொண்டு பிரம்படி தருமாறு ஆணையிட்டான். அடியைப் பெற்றுக் கொண்ட இளவரசன், ''நம் ஆசிரியர் உரைத்தது எவ்வளவு உண்மை? நாம் வாய் திறந்ததாலன்றோ இப்படி அடிபடுகின்றோம்'' என்று மனம் நொந்து கூறிக் கொண்டான். மன்னனின் மனம் நெகிழ்ந்தது.

- ஆர். ஆமினா பீவி, நீடூர்.

எட்டு வயதில் பிளாக் பெல்ட்!




"**க**ராத்தே"யில் பிளாக் பெல்ட் வாங்குவதென்பது மிகவும் கடினமான செயல். அந்த அளவு உடல் வலிமை பெற, ஒரு குறிப்பிட்ட வயதாவது ஆகியிருக்க வேண்டும்.

கராத்தே குறித்த இந்தப் பொதுவான கருத்தைச் சிதற அடித்திருக்கும் ஓரிரு உலக சாதனையாளர்களுள் குறிப்பிடத்தக்கவன் எட்டே வயதான ராகவன்! எட்டாவது வயதில் "பிளாக் பெல்ட்" வாங்கியிருப்பவன். சண்டிகரைச் சேர்ந்தவன் ராகவன். இளம் பொறியாளர் பல்ஜித் கபூர் - கிரண் தம்பதியரின் ஒரே மகன். இவனை ஓர் உலக சாதனையாளனாக்க வேண்டும் என்ற இலட்சியத் துடிப்பில் இவன் தாய் கிரண், தான் பார்த்து வந்த தலைமையாசிரியைப் பதவியை ராஜினாமா செய்தார். தன் முழுக் கவனத்தையும் மகனை வளர்ப்பதில் காட்டினார்.

ராகவனுக்கு 3 வயதாக இருக்கும் போது, செயின் ஜான் பள்ளியில் சேர்க்கப் பட்டான். கோடை விடுமுறையில் டெல்லியிலுள்ள உறவினர் வீட்டிற்கு ராகவன் சென்றிருந்த போது, அங்கு வீடியோவில் புரூஸ்லி நடித்த என்டர் - த - டிராகன் படத்தை ராகவன் பார்த்து உணர்ச்சி வசப் பட்டதன் விளைவு உடனே தெரிந்தது. ஊர் திரும்பியதும் அந்த ஆண்டு பள்ளியில் பாஸானதற்கு "என்ன பரிசு வேண்டும்?" என்று பெற்றோர் கேட்க... "என்னைக் கராத்தே வகுப்பில் சேர்த்து விடுங்கள் போதும்" என்றான் ராகவன்.

பெற்றோர்கள் முதலில் திகைத்தாலும் மகனின் ஆர்வத்தைத் தட்டிக் கழிக்க விரும்பாமல் அவனது 4 வது வயதில், பிரபல கராத்தே மாஸ்டர் பிளாக் பெல்ட் டி. ராகவ்விடம் அனுப்பி வைத்தார்கள். சிறுவனது ஆர்வத்தைக் கணக்கிட்ட கராத்தே மாஸ்டர், வருங்காலத்தில் அவனைச் சிறந்த கராத்தே வீரனாக ஆக்க முடியும் என்பதை உணர்ந்து கொண்டார். தீவிரப் பயிற்சியளித்ததன் மூலமாக 5 வது வயதில் ஒயிட் பெல்ட் வாங்கினான். அதன் பின்னர் படிப்படியாக யெல்லோ பெல்ட் ஆரஞ்ச் பெல்ட், கிரீன் பெல்ட், பர்பல் (I) (புளு) பெல்ட், பர்பல் II பெல்ட் மற்றும் மூன்று முறை பிரௌன் பெல்ட் வாங்கி முடிக்கும் போது அவனுக்கு ஏழு வயதே பூர்த்தியாகியிருந்தது! இதற்குள் அவன் எத்தனை சோதனைகளை மேற்கொண்டு வெற்றி பெற்றான் என்பது பெரிய விஷய மாகும்.

அடுத்து அவன் அடைய வேண்டிய இலக்கு, பிளாக் பெல்ட். இப்பட்டத்தை அடைவதென்பது சாதாரண



காரியமல்ல. இதில் ஜெயிப்பதற்காக மூன்று அரிய செயல்களைச் செய்து முடிக்க வேண்டும். முதலாவது, கராத்தே சம்பந்தமான ஓர் டெக்னிக் ரிப்போர்ட்டை சமர்ப்பிக்க வேண்டும். அடுத்து, நாலைந்து குழுக் களைச் சேர்ந்த கராத்தே வீரர்களைத் தனியாகச் சமாளித்து ஜெயித்து காட்ட வேண்டும். இவைகளை வெற்றிகரமாக முடித்த பிறகு, தொடர்ந்து 6 தினங்களுக்கு நடுவர்கள் முன்னிலையில் 6 மணி நேர சண்டைப் பயிற்சி செய்து காட்ட வேண்டும். இதில் கோட்டை விட்டவர்கள் எண்ணிக்கை எண்ணிலடங்காது. ஆனால், இந்தக் கடினமான சோதனையில் கூட ராகவன் தன் வயதை விட 3 மடங்கு அதிகமான மூத்த 30 இளைஞர்களைத் தன் தனித் திறமையால் ஜெயித்துக் காட்டி பிளாக் பெல்ட்டைத் தட்டி வந்தான் என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

இவனது இச்சாதனை கின்னஸுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கராத்தே வீரன் ராகவன் கராத்தேயில் மட்டுமல்லாது படிப்பிலும் முதல் மாண வன்தான் என்பது திகைக்க வைக்கும் உண்மை! கராத்தே தவிர கிரிக்கெட், பேட்மிட்டன் மற்றும் கேரமிலும் ஈடுபாடு உண்டு. தனது மகனைப் பற்றி அவனது பெற்றோர்கள் பெருமிதத்துடன் கருத்துத் தெரிவிக்கையில்...

''எங்களது மகன் வருங்காலத்தில் என்ஜினியராக வேண்டும் என்பது எங்களது அவா. எனினும்அவன் சொந்த முயற்சி யால் சிறு வயதில் பிளாக் பெல்ட் வாங்கி நம் இந்திய நாட்டிற்கே பெருமை சேர்த் துள்ளான். அவனது படிப்பிற்கு இடையூறு இல்லாத வகையில் வாய்ப்புக் கிடைக்கும் போது அவனை வெளிநாடுகளுக்கும் அனுப்ப திட்ட மிட்டுள்ளோம்'' என் றார்கள்.

கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடிக்க உள்ள எட்டு வயது ராகவனைப் பாராட்டி, மேலும் சிறந்து வளர வாழ்த்துவோம்!

- சத்தி. ஏ. ஜே. ஜப்பார்.



பான்வாயேஜ் தெரியுமா?

★ வெளிநாடு செல்லும் நண்பர்களை வாழ்த்தும் போது பான் வாயேஜ் (Bon voyage) என்று சொல்கிறோம். இந்த வார்த்தை எப்படி வந்தது என்று தெரியுமா? 'நன்மை மிக்க' என்ற வார்த்தையை லத்தீன் மொழியில் பான் (Bon) என்கின்றனர். இத்துடன் கடற்பயணம் (Voyage) என்ற ஆங்கில வார்த்தையையும் சேர்த்து 'பான் வாயேஜ் - நன்மைமிக்க கடற்பயணம்' என்று வாழ்த்துகின்றனர். விமானப் பயண மாக இருந்தாலும் பான் வாயேஜ்தான்!

- தா. ஷேக் உசேன், செஞ்சி.



உங்க ஊரில் இருக்கா?

கோபி அன்று ஒரே பரபரப்பாகக் காணப்பட்டான். காரணம், சென்னையிலுள்ள அவன் மாமா வீட்டிற்குப் போகிறான். மாங்கொம்பு கிராமத்தில் 5 ஆம் வகுப்புப் படிக்கும் கோபி முதல் முறையாகச் சென்னைக்குப் போகிறான்.

அவனை அழைத்துக் கொண்டு போக அவன் மாமா வந்திருந்தார். காலையிலிருந்து கோபி தன் நண்பர்களிடமும் அக்கம் பக்கத்து வீடுகளிலும், ஏன் அந்த ஊரில் மூன்று வீதிகளிலிருக்கும் 62 வீடுகளிலும் சென்று தான் பட்டணம் பார்க்கப் போகும் செய்தியை ஒலிபரப்பி விட்டு வந்திருந்தான்.

கோபியின் அப்பா ஒரு விவசாயி. அவர்களுக்குகு 5 ஏக்கர் நிலமும், ஒரு பெரிய தோட்டமும் இருந்தது. கோபியும் படிக்கும் நேரம் தவிர மற்ற நேரங்களில் அப்பாவுக்கு விவசாய வேலைகளில் உதவியாக இருப்பான். இந்த விடுமுறைக்குத்தான், மாமாவின் கட்டாயத்தின் பேரில் கோபியை சென்னைக்கு அனுப்பச் சம்மதித்தார் அவன் அப்பா.

கோபியின் அப்பா. மாலை 6 மணிக்குத் தங்களுடைய இரட்டை மாட்டு வண்டியைப் பூட்டினார். கோபியையும் மாமாவையும் திருச்சி பஸ் நிலையத்தில் கொண்டு போய் பஸ் ஏற்றி விட்டு வந்தார்.

பஸ்ஸில் ஏறி உட்கார்நத கோபி, ''ஏன் மாமா பட்டணத்திலே நம்ம மாரியம்மன் கோயில் மாதிரி கோயில் எல்லாம் இருக்குமா? என்றான். ''ஓ... நிறையக் கோவில்கள். அம்மன், சிவன், முருகன், லக்ஷ்மி இப்படி ஒவ்வொரு சாமிக்கும் தனித்தனியா பெரிய பெரிய கோவில்கள் இருக்கும்'' என்றார் மாமா.

''மாமா, மெட்ராஸ்ல டீ.வி. பொட்டியில் வீட்டிலேயே இருந்தபடி நிறையப் படம் போட்டுப் பார்க்கலாமே உண்மையாவா?'' என்று அடுத்த கேள்வியைக் கேட்டான். ''ஆமாப்பா.அதுக்குப் பேரு வீடியோ. அதிலே படம் போட்டு வீட்டுலேயே பார்க்கலாம்'' என்றார் மாமா. சிறிது நேரம் மௌனமாக ஏதோ சிந்தித்தபடி வந்த கோபி திடீரென்று ''மாமா சென்னையிலே கடல் இருக்கு. அது நிறையத் தண்ணியா இருக்கும்னு எங்க ஊரு சோமு சொன்னானே...?'' என்று கேட்டான். ''ஆமாம் கோபி. நாம் மெட்ராசுக்குப் போனதும்

தேவி நாச்சியப்பன்

உன்னைக் கூட்டிக்கிட்டுப் போய் எல்லா இடத்தையும் சுற்றிக் காண்பிக்கிறேன்'' என்றார் மாமா.


நாளை காணப் போகும் சென்னையைப் பற்றிக் கற்பனை செய்தபடி தூங்கிப் போனான் கோபி.

''கோபி, கோபி. மெட்ராஸ் வந்தாச்சு'' என்று எழுப்பினார் மாமா. கோபி எழுந்து கொண்டான். பொழுது விடிந்திருந்தது. பஸ்ஸை விட்டு இறங்கி தேனாம்பேட்டையில் உள்ள மாமா வீட்டிற்கு ஆட்டோவைப் பிடித்து வந்து சேர்ந்தனர்.

மாமா வீட்டிற்கு வந்தவுடன் மாமியும், மாமாவின் மகன் பாலுவும் கோபியை அன்புடன் வரவேற்றனர். குளித்துப் பலகாரம் சாப்பிட்டான் கோபி. ''பயண அலுப்புத் தீரக் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்'' என்று மாமா சொன்னார். இருந்தாலும் கோபி மாங்கொம்பு கிராமத்தில் காணாத அதிசயங்களைப் பட்டணத்தில் காணும் ஆவலால் தூங்கவே இல்லை.

அவன் மாமா தேனாம்பேட்டையில் உள்ள ஒரு வீட்டின் மாடியில் குடியிருந்தார். அந்தப் பகுதியில் நிறைய மாடி வீடுகள், அடுத்தடுத்துத் தொடர்ந்து பல வீடுகள் வரிசை பிடித்தது போல் இருந்தன. மெயின் ரோட்டை ஒட்டி இருந்ததால் தொடர்ந்து பஸ், கார், மோட்டார் சைக்கிள் என்று வண்டிகள் வேகமாகச் சென்று கொண்டேயிருந்தன. நிறையக் கடைகள் இருந்தன.

கோபிக்கு இவற்றை எல்லாம் பார்க்கப் பார்க்க ஆச்சர்யமாக இருந்தது. மாங்கொம்பில் திருவிழா



நாட்களில் கூட இவ்வளவு மக்கள் கூட்டம் இருக்காது. அவர்கள் ஊரி லிருந்து அரை கிலோ மீட்டர் தொலைவில்தான் பஸ் ஓடும். அதுவும் ஒரு நாளில் மூன்று பஸ்தான் அந்த வழியாப் போகும். கடைக்குப் போக வேண்டுமென்றால் ஐந்து கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிற மணப்பாறைக்குத்தான் போகணும்.

மாமா வீட்டு பால்கனியில் நின்று கோபி வேடிக்கை பார்த்துக் கொண்டி ருந்தான். நிறையப் பேர் குடம், வாளி போன்றவற்றைத் தூக்கிக் கொண்டு வந்தார்கள். பாலுவும் இரண்டு பெரிய வாளிகள், நாலு பிளாஸ்டிக் குடம், எவர்சில்வர் குடம் எல்லாவற்றையும் தூக்கிக் கொண்டு போய் வாசலில் வைத்தான். கோபி அவனிடம் சென்று, ''எங்கே ஊருணிக்கிப் போறியா?'' என்று கேட்டான். ''ஊருணியா? அப்படீன்னா...'' என்று கேட்டான் பாலு. ''அதான் குடி தண்ணி எடுக்கற குளம்'' என்றான் கோபி. ''அதெல்லாம் இங்கில்லை. இப்பக் கொஞ்ச நேரத்தில் ஒரு தண்ணி லாரி வரும். அதில் காசு கொடுத்து வாங்குவோம்'' என்றான் பாலு.

''தண்ணியக் காசு கொடுத்து வாங்குவீர்களா? இங்கதான் கடல் இருக்கு. நிறையத் தண்ணீர் இருக் குன்னு சொல்றாங்களே. நாமே போய் எடுத்துக் கொண்டு வர முடியாதா?'' என்று அப்பாவி கோபி கேட்டான்.

''ஹா.. ஹா...'' என்று சிரிப்பை அடக்க முடியாது சிரித்த பாலு,"கடல் தண்ணீர் உப்புக் கரிக்கும். அதைக் குடிக்க முடியாது", என்று விளக்கி னான்.



பாக்கெட்டில் பால் வந்ததும், தள்ளுவண்டியில் காய்கறி வந்ததும், அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

மாமி, மாமா, பாலுவோடு கரு மாரியம்மன் கோவில், வடபழனி, அஷ்டலக்ஷ்மி கோவில், கடற்கரை, லைட்ஹவுஸ், வண்டலூர் உயிரியல் பூங்கா, காந்தி மண்டபம், அடையாறு பார்க் என்று ஒவ்வொரு இடத்திற்கும் சென்று பார்த்து வந்தான் கோபி. ஒவ்வொன்றும் அவனுக்கு மிகவும் மகிழ்ச்சியாகவும், பிரமிப்பாகவும் இருந்தது

பகலெல்லாம் பட்டணத்தைச் சுற்றிப் பார்ப்பதும், மாலையில் டீ.வி. பெட்டியில் வண்ண வண்ண நிகழ்ச்சி களைக் காண்பதும் கோபிக்கு மிகவும் பிடித்தது. அவர்கள் ஊர் பஞ்சாயத்து போர்டு கட்டடத்தில் கறுப்பு வெள்ளை டீ.வி.தான். அதுவும் சினிமா பார்க்க மட்டும் ஞாயிற்றுக் கிழமைதான் போடுவார்கள். தினமும் டீ.வி. பார்ப்பதில் கோபிக்கு ஒரே குஷி.

மரம் வளர்ப்பு பற்றிய செய்திப் பிரிவுப் படம் ஒரு நாள் டீ.வி.யில் ஒளிபரப்பானது. அதைப் பார்த்த வுடன் கோபி மாமாவிடம், ''மாமா ஏன் இந்தத் தெருவிலே யார் வீட்டி லும் அதிகமான மரம், செடி, கொடி கள் எதையும் காணுமே! வெளியிலே போகும் போது கூட பல வீடுகள்ல பார்த்தேன். செடிகள் அதிகமா இல்லையே?'' என்றான்.

''கோபி, இங்கே மக்கள் தொகை அதிகம். எல்லா இடத்திலேயும் வீடுகள், கடைகள் கட்டிடறதுனா லேயும் தண்ணீர் பிரச்னையினாலே யும் மரங்கள் வளர்ப்பதைப் பற்றி யாரும் சிந்திக்கறதில்லை. அதனால தான் இந்த மாதிரி மரம் வளர்க்க ணும்னு அடிக்கடி டீ.வி.யில் பிரச்சாரப் படம் போடறாங்க. மேலும், இப்போதெல்லாம் "பிளாட் சிஸ்டம்" முறையிலே அடுக்கு மாடி வீடுகள் கட்டறாங்க. அதில், மாடியில் வசிப்பவர்கள் ஆசைப்பட்டாலும் மண் பகுதி இல்லாத காரணத்தால் செடி வளர்க்க முடியாது'' என்று

எந்த நாட்டுப் பிரஜை?



★ விமானத்தில் பறக்கும் போது ஒரு பெண்மணிக்குக் குழந்தை பிறந்தால், அக் குழந்தை பிறக்கும் போது அந்த விமானம் எந்த நாட்டின் மீது பறந்து செல்கின்றதோ அந் நாட்டின் பிரஜையாகக் கருதப்படும்.

- சி. பன்னீர் செல்வன், செங்கல்பட்டு.

விளக்கினார் மாமா.

''ஏன் மாமா, பால்கனிப் பகுதியிலேயே வெயில்படற இடத்துல சின்னச் சின்ன செடிகளைத் தொட்டில வளர்க்கலாமே?'' என்றான் கோபி.

''ஆமாப்பா. சிலர் வளர்க்கறாங்க. எதிர்வரிசை வீடுகள்ல சிலதுல மாடில செடி இருக்கு'' என்றார்மாமா

''அது என்ன செடி மாமா?''.

''அது குரோட்டன்ஸ் செடி. அதில் சில அழகான வண்ண வண்ணப் பூக்கள் பூக்கும். ஆனால், அதைத் தலையில் வைத்துக் கொள்ள முடியாது. பெரும்பாலும் அந்தச் செடிகள் காய்ப்பதும் இல்லை. அவை அழகுக்காக வளர்க்கப்படும் செடிகள்'' என்றார் மாமா.

அன்று முதல் கோபி மரங்களைப் பற்றி அதிகமாக சிந்தித்தான். தன்னுடைய இந்தச் சிந்தனைக்குக் காரணமாக இருந்த மாமாவீட்டுப் பால்கனியை ஒரு குட்டித் தோட்டமாக மாற்றவும் விரும்பினான். அடுத்த விடுமுறைக்கு வரும் போது மாமா வீட்டில் பயனுள்ள பழச் செடிகள், காய்கறிச் செடிகளை மண் தொட்டியில் வைத்து வளர்க்க வேண்டும் என்றும் நினைத்துக் கொண்டான்.

அன்று அந்தக் காலனியில் உள்ள தனது நண்பர்களை, சிறுவர் சிறுமியர்களை கோபிக்கு அறிமுகம் செய்து வைத்தான் பாலு. கோபி, கிராமத்திலிருந்து வந்திருப்பதை அறிந்ததும் அவர்கள் பல கேள்விகள் கேட்டனர்.

''உங்க கிராமத்தில கடல் இருக்கா?''

''உயிரியல் பூங்கா இருக்கா?''

''டீ.வி. நிலையம் இருக்கா?''

''கல்லூரி இருக்கா?''

அவர்கள் கேட்ட கேள்விகள் எல்லாவற்றிற்கும் ''இல்லை'' ''இல்லை'' என்று பதில் கூறிய போது, கோபி மிகவும் நாணமடைந்தான். சட்டென்று அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

''மரங்களினால் ஏற்படும் பயன்களைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

''மரம், செடிகள் எல்லாம் இருக்கறதுனால் நல்ல காற்று கிடைக்கும். மழை வரும். உடல் ஆரோக்கியத்துக்கு உதவும்'' என்றான் ஒரு சிறுவன். ''ஆமாம் ஆமாம்'' என்று ஒத்துப் பாடினர் மற்றவர்கள்.

''அப்படியானால் உங்கள் யாருடைய வீட்டிலாவது மரம் இருக்கிறதா?''

''இல்லையே!'' என்று கூறினர் அனைவரும். ஒரு துடுக்குச் சிறுவன் ''பூங்காக்களில்தான் மரம் இருக்கும். ரோட்டின் ஓரங்களில் மரம் இருக்கப் பாடுபடுகிறோம். வீடுகளில் எங்கேயாவது மரம் இருக்குமா?'' என்று கேட்டான் கோபியை மடக்கி விட்ட நினைப்பில்.

''இவ்வளவு கேட்கிறியே... உங்க வீட்டுல மட்டும் மரம் இருக்கா?''

''இருக்கு, கொல்லைப் பக்கத்துத் தோட்டத்துல இருபத்தெட்டு மரம் இருக்கு. முன் பக்கம் பன்னிரண்டு இருக்கு. இவை தவிர வாழை மரம் வேற.''

தங்கள் கேள்விகளால் இதுவரை கோபியை நாணமடைய வைத்த அந்தப் பட்டணத்துச் சிறுவர்கள், இப்பொழுது வியப்பால் வாயைப் பிளந்தனர். கோபி பெருமையோடு அவர்களை ஏறிட்டுப் பார்த்தான்.



கள் நூலகம்

ராமாயணப் பாடல்களைத் தந்திருப்பது குழந்தை இலக்கியத்திற்குப் புதுமை. 42 ஆண்டுகளுக்கும் மேலாகக் குழந்தை களுக்காக எழுதிக் குவித்து வரும் தங்கமணி கோகுலம் வாசகர்களுக்குப் புதியவரல்ல. குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் பாராட்டுப் பெற்ற இந்த அனுபவமிக்க படைப்பா ளிக்குப் பெருமை சேர்க்கும் படைப்பு புத்தகம் இது. பரிசளிக்க ஏற்றது.

மாலத்தீவு மர்மம் - வேணுசீனிவாசன் பக். 94 ரூ. 12/- வானதி பதிப்பகம், சென்னை - 17.

விலங்குகளையும் பறவைகளையும் விரும்பாத குழந்தைகளே இல்லை. இதே போல் மர்மம் நிறைந்த துப்பறியும் கதைகளை விரும்பாத குழந்தைகளும் இருக்க முடியாது. இந்த இரண்டையும் இணைத்து உருவாக்கப்பட்ட சுவையான நாவல்தான் மாலத்தீவு மர்மம்.

விலங்கியல் பேராசிரியர், கடற்படை அதிகாரி, ரகு, ரமா ஆகியோர் கடலில் ஏற்பட்ட விபத்து காரணமாக, மாலத்தீவுக்கு வருகின்றனர். அங்கே, இந்திய அரசுக்கு எதிராகப் போராடும் பயங்கரவாதிகள் இருப்பதைக் கண்டு, பல இன்னல்கள் போராட்டங்களுக்கு ஈடுகொடுத்து பயங்கர வாதிகள் பிடிபடக் காரணமாகி, பரிசும் புகழும் பெறுகின்றனர். இடையிடையே கடல்வாழ் விலங்கிகளைப் பற்றிப் பல சுவையான அறிவியல் தகவல்கள் தரப் படுகின்றன. துளியும் சுவை குன்றாது நாவல் விறுவிறுப்பாக ஓடுகிறது. லதாவின் படங்கள் நூலை மேலும் அழகு செய் கின்றன. குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் நடத்தப்பட்ட எல்லப்பா ரங்கம் மாள் அறக்கட்டளையின் அழ. வள்ளி யப்பா நினைவுப் போட்டியில் பரிசு பெற்ற நாவல், போட்டி நடத்தியவர் களுக்கும் நூலை வெளியிட் டவர்களுக்கும் பெருமை சேர்க்கக்கூடியது.

சேற்றில் பொன் - தங்கமணி பக். 136, ரூ. 13/- பூவழகி பதிப்பகம், 29/2 சீனிவாசப் பெருமாள் சன்னதித் தெரு, இராயப் பேட்டை, சென்னை - 14.

சேரி மக்களுக்கு உண்மையாகத் தொண்டு செய்யும் உத்தமர் சிங்கார வேலர், அவரை எதிர்த்து ஒழிக்கப் பார்க்கும் முனியாண்டி, சிங்கார வேலைர் -சேரிக் குழந்தைகளுக்கிடையே ந டை பெ று ம் பாசப் பிரிவினைகள் இவற்றைச் சுற்றிச் சொகுசு நடைபோடுகிறது நாவல். இடை யிடையே பொருத்தமான இடங்களில் கம்ப

சின்னத்தம்பியின் பெரிய உள்ளம் - பக். 68 ரூ. 12/- வானதி பதிப்பகம், சென்னை - 17. வானதி திருநாவுக்கரசு,

புகழ்பெற்ற பதிப்பாளராகிய வானதி திருநாவுக்கரசு தொடக்க காலத்தில் ஒரு குழந்தை எழுத்தாளராக இருந்தவர் என்பது குழந்தை இலக்கியத்திற்குப் பெருமை சேர்ப்பது. இந்தத் தொகுப்பில் மணியான ஆறு சிறுகதைகள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒன்றை ஒன்று மிஞ்சும் புதுமைக் கதைக்களம் கொண்டது. மெக்கேனிக்கல் மனம் கொண்ட ரவியைப் புரிந்து கொள்ள முடியாது அவனை விரட்டி விடும் தாய், காணாமல் போகும் வைர நெக்லசைக் கண்டுபிடித்துக் கொடுக்கும் வேலைக்காரச் சிறுவன், நகை ஆசை கொண்ட சாந்தா, உடல்நலமின்றிப் படுத்திருக்கும் அண்ண னுக்காகத் தானும் பட்டாசு விடாது இருக் கும் மாணிக்கம், புல்லாங்குழல் இசையால் மான்களை மயக்கி வைக்கும் சிறுவன் இப்படி ஒவ்வொரு கதை .யும் ஒன்றை ஒன்று மிஞ்சும்படி உள்ளது. வினுவின் படங்கள் நூலுக்கு மெருகூட்டுகின்றன. பெருமை தரும் படைப்பு.

சூரியனைப் பற்றிய அறிவியல் உண்மைகள் - ஆசிரியர் குழு - பக். 112, ரூ. 11.50 மணிமேகலைப் பிரசுரம், சென்னை - 17,

புராண காலக் கதையிலிருந்து தொடங்கி அண்மைக் காலக் கண்டுபிடிப்பு வரை சூரியனைப் பற்றி விரிவாக எழுதப் பட்டுள்ள அருமையான அறிவியல் நூல். மிக எளிய நடையில் எல்லோரும் புரிந்து கொள்ளும் வகையில் எழுதப்பட்டுள்ளது. ஹாலிவால் நட்சத்திரத்திற்கு அருகே சென்று படம் பிடித்த வீஹா திட்டம் I, II குறித்த தகவல்கள், இந்த நூலின் ஆசிரியர் குழுவினர் எந்த அளவுக்கு மிக அண்மைக் கால ஆய்வுத் தகவல்களை நூலில் சேர்க்கப் பாடுபட்டுள்ளனர் என்பதை அறியப் போதுமானவை. பயனுள்ள படைப்பு. விளக்கப் படங்கள் சிலவற்றையும் சேர்த் திருந்தால் சூரியன் குறித்த குட்டிக் கலைக் களஞ்சியம் என்றே கூறலாம்.

டேய்! குப்பைத் தொட்டி!

பள்ளி விட்டு ரமேஷ் மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தான். அவன் பின்னால் அவன் வகுப்பைச் சேர்ந்த பிரபுவும் அவனது நண்பர் கூட்டமும் வந்து கொண்டிருந்தது. காரணம் அவன் ஏழை. மேலும் அவன் அவனை விட நன்றாகப் படிப்பது. தினமும் பள்ளி விட்டுச் செல்லும் போது ரமேஷைக் குப்பைத் தொட்டி என்று கேலி செய்து கொண்டே போவான். அவனுக்கு உறு துணையாக அவனது நண்பர்கள்.

இன்றும் கேலி ஆரம்பமாகியது. ''சட்டையைப் பாருங்கடா எந்தக் குப்பைத் தொட்டியிலிருந்து பொறுக்கினானோ தெரியலே'' என்று பிரபு கூற, அவன் நண்பர்கள் 'கொல்' லெனச் சிரித்தனர். ரமேஷுக்குக் கண்களில் நீர் தளும்பியது. இப்படியே கேலி தொடர்ந்து பிரபு மெதுவாகத் தனது பேனாவை எடுத்து ரமேஷின் சட்டையில் இங்க் அடித்தான். அவன் நண்பர்களும் தங்கள் பேனாவை எடுத்து அவன் சட்டை முழுவதிலும் இங்க் அடித்தனர். ரமேஷ் அவர்கள் செயலுக்காக மிகவும் வருத்தமடைந் தான். ஆனாலும் ஒன்றும் பேசாமல் சென்று விட்டான்.

அடுத்த நாள் காலை பிரபுவும் அவன் நண்பர்களும் பள்ளிக்கு வந்து கொண்டிருந்தனர். அன்று பள்ளித் தேர்வு. முதல் நாள் இரவு பெய்த மழையால் சாலையின் இருபுறமும் நீர் தேங்கியிருந்தது. திடீரென்று மிக வேகமாக வந்த பேருந்து ஒன்று தேங்கியிருந்த நீரை வாரியிறைக்க

இரா. சுரேஷ்குமார்



சாலையின் ஓரத்தில் வந்து கொண்டிருந்த பிரபுவின் வெள்ளைச் சட்டை முழுவதும் சேறு படிந்தது. நண்பர்கள் எல்லாம் சிரித்தனர். பிரபுவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ''டேய், வாங்கடா! வீட்டுக்குப் போய் சட்டையை மாற்றி வந்து விடுகிறேன்'' என்று பிரபு அழைக்க, அவனது நண்பர்களோ ''அய்யய்யோ! நேரமாகி விட்டது! இன்று தேர்வு வேறு. நாங்கள் போகிறோம் நீ மட்டும் போய் மாற்றிக் கொண்டு வா!'' என்று சென்று விட்டனர்.

பிரபு மட்டும் தனியாய் சாலையில் நின்று கொண்டிருந்தான். அப்பொழுது ''பிரபு! ஏன் இங்கு நின்று கொண்டிருக்கிறாய்?'' என்ற குரல் கேட்டுத் திரும்பினான். ரமேஷ் பையுடன் நின்றிருந்தான். பிரபு தயங்கியவாறே நடந்ததைக் கூறினான். அவனுக்கு ரமேஷுடன் பேசவே பிடிக்கவில்லை. சிறிது நேரம் சிந்தித்த ரமேஷ் ''என் மாமா என் பிறந்த நாளுக்காக சட்டை எடுத்துக் கொடுத்தார். நம்ப யூனிபாரம் சட்டையேதான். அதை நான் இன்னும் உபயோகிக்கவில்லை. அது இப்ப உனக்கு உதவும் அதைப் போட்டுக் கொள். நீ வீட்டுக்குச் சென்று உடை மாற்றி வர, தாமதமாகும். தேர்வுக்கு சரியான நேரத்தில் போக முடியாது'' என்று கூறியவாறே அருகிலிருந்த தன் வீட்டினுள் அழைத்துச் சென்று தன் புத்தம் புது சட்டையை எடுத்துக் கொடுத்தான். பிரபு சட்டையை வாங்காமல் ரமேஷையே பார்த்துக் கொண்டிருந்தான். ''ஏன் இந்த ஏழையின் சட்டையைப் போட்டுக் கொள்ளப் பிடிக்கவில்லையா?'' என்ற ரமேஷின் குரல் கேட்டு, நிமிர்ந்த பிரபு, ரமேஷின் கைகளைப் பிடித்துக் கொண்டு ''நான் செய்த கேலியையெல்லாம் மறந்து விட்டு வலிய வந்து உதவி செய்யும் உன்னை நண்பனாகக் கருதாது, ஆபத்தில் விட்டுச் செல்பவர்களை நண்பர்களாகக் கருதிய என்னை மன்னித்து விடு'' என்று நாத் தழுதழுக்க கூறினான். பின் இருவரும் கைகோர்த்துச் சிரித்தவாறே பள்ளிக்குச் சென்றனர்.

சுதந்திரம் என்பது என்ன?

–6 பேர் பேட்டி

''சுதந்திரம் என்றால் என்ன?''

''உன்னுடைய கை எவ்வளவு தூரம் வேண்டுமென்றாலும் நீ ள லா ம்; ஆனால் அது அடுத்தவர் மூக்கை இடிக்கும் அளவுக்குப் போய் விடக் கூடாது.''

– இது சுதந்திரத்தைப் பற்றிச் சொல்லப்படும் ஒரு விளக்கம்.

பிறருக்கு எந்தவிதமான பாதிப்பையும் உண்டாக்காத வகையில் ஒருவர் தன் உரிமைகளை அனுப விப்பதுதான் சுதந்திரம்.

இதுப் பற்றிச் சில தம்பி தங்கைகள் தங்களது அனுபவத்தைச் சொல்கிறார்கள் :

ராஜேஷ் : அப்பாவோட, தெருவில நடந்து போய்க்கிட்டிருந்தேன். தெருவிலே போற, வர்ர பெரியவங்க சிலபேர் சாலையிலேயயே எச்சில் துப்புறதைப் பார்த்திருக்கேன். வெத்தலைப் பாக்குப் போடற வழக்கம் இருக்கறவங்க மட்டுமில்லாம, சும்மா வெறும், வாயை மெல்லறவங்க கூட எச்சில் துப்பறதைப் பார்த்திருக்கேன். வாயிலே ஊர்ற உமிழ் நீரை வெளில துப்பிடணும் போலிருக்குன்னு நினைச்சுக்குவேன். நானும் அந்த மாதிரிப் பண்ண ஆரம்பிச்சேன். அதே பழக்கம் அப்பா கூடப் போன போதும் வந்திருச்சு. ''என்னடா பண்றே?''ன்னு அப்பா கேட்டார். ''எச்சில் துப்பறேன்'' அப்படின்னேன். ''அது தப்புடா, துப்பக்கூடாது'' என்றார் அப்பா. 'என்னடா இது அநியாயம்! எச்சில் துப்பற சுதந்திரத்தைக் கூட இவர் தரமாட்டேங்கறாரே'ன்னு நினைச்சுக்கிட்டேன். அதைப் புரிஞ்சுக்கிட்டோ என்னவோ, ''இப்படி எச்சில் துப்பறது தப்பான்னு நீ யோசிக்கறே. நீ துப்பறதனால சில விஷக்கிரிமிகள் பரவரது. அந்த எச்சிலிலே உட்கார்ர ஈ, கிரிமிகளைச் சுமந்துகிட்டு பக்கத்துப் பழக்கடை பழத்துமேல உட்கார்ரது. யாரேனும் ஒருத்தர் அந்தப் பழத்தை வாங்கி சாப்பிட்டார்னா, ஈ, மூலமா பழத்துக்கு வந்த கிருமி, அவர் வாய் மூலமா வயித்துக்குப் போய் அவர் உடல் நலத்தைக் கெடுக்குது. இப்படி அவரோட ஆரோக்யத்தைக் கெடுக்கறதுக்கு உனக்கு என்ன உரிமை இருக்கு? அதேமாதிரி உன் உடல் நலத்தைக் கெடுக்கறதுக்கும் மத்தவங்களுக்கு உரிமை இல்லை. அதனால யாருமே - வெத்தலை-பாக்கு போடறவங்க கூட சாலையிலே எச்சில் துப்பக் கூடாது. ரொம்ப அவசியம்னா தெரு ஓரத்திலே இருக்கற குப்பைத் தொட்டில வேணா துப்பலாம்'' அப்படீன்னார். நான் எச்சில் துப்பரதை ஏன் அப்பா கண்டித்தார்ங்கறதை நான் புரிஞ்சிக்கிட்டேன். இன்னொருத்தருடைய உடல் நலம் நாம் அனுபவிக்கற சுதந்திரத்தால கெடறது முறையில்லையே ''ன்னு தெரிஞ்சுகிட்டு அன்னியிலேருந்து அந்தப் பழக்கத்தைக் கைவிட்டேன். மற்றவர்களுடைய நலன்களைப் பாதிக்கக் கூடிய எதையும் செய்



நாம அனுபவிக்கிற சுதந்திரம் மற்றவங்களைப் பாதிக்கக் கூடாதுங்கறது தான் சுதந்திரத்தின் இலக்கணம் - எச். குமார்.



மற்றவங்க உடமையைப் பாழாக்கிற உரிமையைச் சுதந்திரம் நமக்கு வழங்கலே! - பி. விஜயலட்சுமி

வதை சுதந்திரம் நமக்கு வழங்கவில்லை என்பதையும் அறிந்து கொண்டேன்.

பி. விஜயலட்சுமி : தேர்தல் சமயத்ல சுவர்கள்ல கட்சிகளோட பிரசார வாசகங்கள், படங்கள் எழுதியிருக்கறதைப் பார்த்தப்போ ரெண்டு வருஷத்துக்கு முன்னால நடந்த சம்பவம் ஞாபகத்துக்கு வர்ரது. ஏதோ ஓர் கோயிலுக்கு பெற்றோர்களோடு போயிருந்தோம். அங்கே ஒரு பையன், கோவில் சுவத்திலே கரியால என்னவோ எழுதிக்கிட்டிருந்தான். அது - அவனோட பெயர் போல இருக்கு! அப்பா அவனைக் கூப்பட்டு, ''எம்ப்பா, இப்படி எழுதிக் கோயில் சுவரை அசிங்கப்படுத்தறே?''ன்னு கேட்டார். ''எழுதறது என் உரிமை. அதற்கு எனக்குச் சுதந்திரம் இருக்கு. நீங்க யாரு கேட்கறதுக்கு?''ன்னு எதுத்துக் கேட்டான். அவனை லபக்குனு பிடிச்ச அப்பா, ''இது பொது இடம் தம்பி. இதில் இந்த மாதிரிக் கிறுக்கறதுக்கு உனக்கு உரிமை இல்லே. இப்படி மற்றவங்க உடமையைப் பாழாக்க யாருக்குமே உரிமை கிடையாது''ன்னு சொல்லிட்டுத் தானே அவன் எழுதியிருந்ததை அழிச்சார். ''நீ இந்த மாதிரி எழுதறதை மிச்ச பசங்களும் பார்த்தாங்கன்னா, அவங்களுக்கும் இப்படி எழுத ஆசை வரும். தன் பேர் மட்டுமில்லாம், கன்னாபின்னான்னு என்னெல்லாமோ எழுத ஆரம்பிச்சுடுவாங்க. கோயில்ல சாமி கும்பிடவர்ரவங்களுக்கு மனசு வேதனைப்படும். அவங்க மன நிம்மதியைக் கெடுக்கறதுக்கு யாருக்கும் உரிமை இல்லை. உன்னோட நோட்டுப் புத்தகத்திலே இப்படி எழுது. உங்க வீட்டுக் கூடத்துல, அறைகளில் எழுத யாரும் தடை சொல்ல மாட்டாங்க.'' நீ அனுமதிப்பியான்னு கேட்டு புத்தி சொன்னார். அந்தப் பையன், நல்ல பையன். தன் தவறுக்கு வருந்தி அப்பா கிட்ட கால்ல விழாத குறையா மன்னிப்புக் கேட்டான்!

கே. அரவிந்த் : ஒரு வீட்டுக் காம்பவுண்டுக்கு வெளியே, அந்த வீட்டு மாமரத்துல நிறைய மாங்காய் காய்ச்சிருந்தது. என் கூட வந்த ஃப்ரெண்ட்ஸ்ல ஒருத்தன், ''டேய் சூப்பர் மாங்காடா. கல் எடு. அடிச்சு சாப்பிடலாம்'' அப்படீன்னான். ''வேண்டாண்டா. மரம் நம்ம வீட்டு மரம் இல்லேடா! தப்புடா''ன்னு சொல்லி நான் தடுத்தேன். ''போடா. நீ என்ன சொல்றது நான் என்ன கேட்கறது? என் இஷ்டம். நான் மாங்கா அடிப்பேன். தெருவிலே இருந்து தானே அடிக்கப் போறேன். இதுக்குக் கூடவா எனக்குச் சுதந்திரம் இல்லேன்னு சண்டைக்கு வந்தான். அவன் கூட சண்டை போட எனக்கு மனசில்லே. எதிர்க்கறதுக்கு யாரும் இல்லாததால் அவன் கல்லைப் பொறுக்கி மாங்காயை அடிக்க ஆரம்பிச்சான். திடீர்னு ஒருத்தர் ''யார்ரா அவன் கல்லெறிஞ்சது?'' என்று கேட்டபடி பாய்ந்து வந்து என் ஃப்பிரெண்டை 'கப்'புனு புடிச்சார்! ''நான் உங்களைப் பார்த்துக் கல்லடிக்கலே. மாங்காயை அடிச்சேன்னு'' என் ஃப்பிரண்ட் எதிர்த்துப் பேசினான். ''இந்த மரம் எங்க வீட்டு மரம். அதுல நீ கல்லடிக்கிறது எத்தனை பெரிய தப்புன்னு அவர் கேட்டார்.

''நான் உங்க வீட்டுக்குள்ள வந்து கல்லடிக்கலேயே சார். வெளியே இருந்து தானே அடிச்சேன்? இந்த சுதந்திர நாட்டில் இதுக்குக் கூட எனக்கு உரிமை இல்லையான்னு'' என் ஃப்பிரண்ட் விவாதம் பண்ணினான். அவர் சிரிச்சார். தம்பி சுதந்திரமும் உரிமையும் ஒன்னுக்குள் ஒன்னாக் கலந்தது. நிலா ஒளியும் குளிர்ச்சியும் போல. உன்னுடைய சுதந்திரம் என்னுடைய உரிமையைப் பாதிக்கக் கூடாது. சுதந்திரத்தின் தத்துவமே இதுதான்னார்.''

அன்னிலேருந்து அவன் கல் அடிக்கறது மட்டுமில்லே, வேறே வம்புக்கும் போறதேயில்லே. எனக்கும் சில சமயம் மரத்ல மாங்காயைப் பார்க்கும் போது டெம்ப்டிங்கா இருக்கும்; அந்த வீட்டுக் காரர் கொடுத்த விளக்கம் ஞாபகத்துக்கு வரும். கஷ்டப்பட்டு ஆசையை அடக்கிக்குவேன்!

எச். குமார் : ஏப்ரல் ஒன்னாந்தேதி வந்தாலே ரொம்பவும் உஷாரா இருப்பேன். நான் ஜாக்ரதையா இருக்கறதோட, மிச்சவங்க யார்னா ஏமாறுவாங்களான்னும் கவனிப்பேன். எதுக்கு? எல்லாம் ஏப்ரல்



இன்னொருவரடைய உடல் நலம் நாம் அனுபவிக்கும் சுதந்திரத்தால் கெடறது முறையில்லையே!
- ராஜேஷ்

ஃபூல் குத்தறத்துக்குத்தான்! ஆனால் அனேகமா எல்லா சமயத்லேயும் எல்லாருமே என்னை விட ஜாக்ரதையா இருந்ததால எனக்குச் சந்தர்ப்பமே கெடச்சதில்லே. ஆனா, இந்த வருஷத்திலேருந்து அந்த பழக்கத்தையே விடற ஒரு சம்பவம் நடந்தது. காலைல ஸ்கூலுக்குப் போற போது என் ஃப்ரெண்டும் நானும் தெருவிலே

உன்னுடைய சுதந்திரம் என்னுடைய உரிமையைப் பாதிக்கக் கூடாது
- கே. அரவிந்த்




யாரை ஏப்ரல் முட்டாளாக்கலாம்னு யோசிச்சுக்கிட்டே நடந்தோம். பஸ் ஸ்டாப்பிலே நின்னுக்கிட்டிருந்த போது எங்களுக்கு முதுகு காட்டிக்கிட்டு நின்னுக்கிட்டிருந்த ஒரு பையன் சட்டைல பளிச்னு பேனாவைத் திறந்து இங்க் அடிச்சுட்டான் என் ஃப்ரெண்டு. அப்போ அவனுக்குப் பக்கத்துல நின்னுக்கிட்டிருந்த ஓர் அண்ணன் திரும்பி, ''என்னடா பசங்களா, ஏப்ரல் ஃபூல் விளையாடறீங்களா?'' அப்படீன்னு கோவமா கேட்டார். எங்களுக்கு வெல வெலத்துப் போச்சு. ''இன்னிக்கி ஏப்ரல் ஃபூல் நாள். இதை நாங்க விரும்பற மாதிரிக் கொண்டாட உரிமை இருக்கு''ன்னு என் நண்பன் சொன்னான். ''என்ன உரிமை தம்பி? பாவம் இந்தப் பையன். இப்படி அவன் சட்டையப் பாழாக்கிட்டீங்களே! இவன் பரம ஏழை. இவன் இதுக்காகத் தன் அம்மா, அப்பாகிட்டே எத்தனை அடி வாங்கப் போறானோ? தான் செய்யாத ஒரு தப்புக்கு சட்டைல இங்க் கறை பட்டதுமில்லாமல் அடியும் வாங்கிக்கிற ரெட்டை தண்டனை இவனுக்கு! இவனோட வருத்தம் உங்களுக்கு நிச்சயமா சந்தோஷம் தராது. ஏன்னா, பின்னால என்ன நடக்கப் போறதுன்னு தெரியாம அப்போதைய சந்தோஷத்துக்காக விளையாட்டுத்தனம் பண்ற சின்னப் பசங்க நீங்க... நாம் அனுபவிக்கிற சுதந்திரம் மற்றவங்களுடைய நலனைப் பாதிக்காதபடி இருக்கணும். சுதந்திரத்தின் இலக்கணமே இதுதான். உங்க சுதந்திரத்தால் ஓர் ஏழைப் பையனின் நலன்களைப் பாதிச்சிட்டீங்களே!'' அப்படீன்னார். எங்களுக்கு ரொம்ப வெட்கமா போயிடுச்சு.

ஜே. பாக்கியலட்சுமி : புத்தகங்களுக்கு அட்டை போட்டுக்கிட்டிருந்தேன். துண்டு துண்டாக நிறையப் பேப்பர்கள். அட்டை போட்டப்புறம் அந்தத் துண்டுத் தாள்களைப் பொறுக்கி வீட்டுக்கு வெளில, இங்கிருந்தபடியே போட்டுட்டேன். கொஞ்ச நேரத்துல ஆபீஸ்லேருந்து அப்பா வந்தார். ''இந்த பேப்பர் துண்டு யாரோடது?''ன்னு கேட்டார். அது, நான் போட்ட அதே அட்டைப் பேப்பர் தான் தான்! ''என்னோடதுதாம்ப்பா. நான்தான் அதையெல்லாம் வாசல்ல போட்டுட்டேன். இதுக்குக் கூடவா இந்த சுதந்திர நாட்டில உரிமை இல்லேன்னு'' கேட்டேன். ''இது எங்கே இருந்தது தெரியுமா? நம்ம வீட்டு வாசல்ல!'' அப்படின்னார் அப்பா. ''அதெப்படி? நான்தான் தெருவில வீசிப் போட்டேனே!''ன்னு அவர்கிட்டே சொன்னேன். ''வாசல்ல போட்டா அப்படியே இருக்குமா? நீ நம்ப வீட்டுக்கு வெளில குப்பைத் தொட்டியில போடாம, தெரு

விலே வீசி எறிஞ்சிருக்கே. அது பக்கத்து வீட்டு வாசல்ல போய் விழுந்திருக்கு. அவங்க அதை அப்படியே தள்ளி இந்தப் பக்கம் வீசியிருக்காங்க. அது நம்ம வீட்டு வாசலுக்கு மறுபடி வந்திருக்கு. உன் சுதந்திரம், நீ பக்கத்து வீட்டுல போட்டே. அவங்க மறுபடி நம்ம வீட்டுல தள்ளிட்டாங்க. நம்ம வீட்டுக் குப்பையைப் பக்கத்து வீட்டு வாசலுக்குத் தள்ளி விடறதோ, நடுத் தெருவிலே வீசி எறியறதோ சுதந்திரமே அல்ல. இவை பொது மக்களுக்குத் தொந்திரவு தரும் செயல். சட்டப்படி இதற்காக வழக்குப் போடலாம். அடுத்தவர்களுக்குத் தொந்தி ரவு தரும் எதையும் செய்ய சுதந்திரம் நமக்கு அனுமதி தரவில்லை. அதனால் சுதந்தி ரத்திற்கும் தொந்திரவுக்கும் உள்ள வித்தி யாசத்தை முதலில் தெரிந்து கொள்.''

''நம்ம வீட்ல குப்பைக் கூடை இருக்கு. குப்பையை அதிலே போடு; இல்லேன்னா தெருவிலே குப்பைத் தொட்டி வெச்சிருக்காங்களே.. அதிலேயாவது போடுன்னு சொன்னார். அவர் சொன்னது ரொம்ப கரெக்ட். நான் அப்படிப் பண்ணி யிருக்கக் கூடாதுன்னு நினைச்சுக்கிட்டேன். குப்பை போடறது என்னோட சுதந்திரமான இஷ்டமா இருக்கலாம். அதனால மற்ற வங்க பாதிக்கப்படறது நியாயமில்லை தானே? அன்னியிலிருந்து நான் சாக்லெட் பேப்பரைக் கூட வாசல்ல வீசி எறியற

வீணாகப் போவதைக் கூட உரியவர்களின் அனுமதி இல்லாது எடுத்துக் கொள்வது சுதந்திரம அல்ல - ஏ. விஜி.





குப்பையைப் பக்கத்து வீட்டுல எறிவது சுதந்திரம் அல்ல. பொதுத் தொந்திரவு - கே. பாக்கியலட்சுமி.

தில்லே.

ஏ. விஜி : எனக்கு பூன்னா ரொம்ப ஆசை. நானும் என் அம்மாவும் ஒருநாள் சாயங்காலம் மார்க்கெட்டுக்குப் போனோம். வழியில் ஒரு வீட்டில் அழ கழகா ரோஜாப் பூக்கள் பூத்திருந்தன. அதைப் பார்த்ததுமே எனக்கு அப்படியே எல்லாப் பூவையும் அள்ளிப் பறித்துக் கொண்டு விட வேண்டும் போலிருந்தது. அம்மாவைக் கொஞ்சம் முன்னால் போக விட்டு விட்டு நான் பின்தங்கினேன். ஒரு பொல்லாத அழகு ரோஜா அந்த வீட்டுக் காம்பவுண்டுச் சுவருக்கு மேலே எட்டிப் பார்த்து என்னை 'வா,வா'ன்னு சொல்வது போல கூப்பிட்டது. நைஸா போனேன். சுவருக்கு மேலே எக்கி, கையை நீட்டி அந்தப் பூவைப் பறிக்கப் போனேன் தற்செயலாகத் திரும்பினப்போ என் அம்மா என்னை நோக்கி வந்து கொண்டிருந்தார். ''எதுக்கு அவங்க வீட்டுப் பூவை எடுக்கறே?'' அப்படீன்னு கேட்டாங்க. ''அதான் நிறையப் பூத்திருக்கே, அவங் களோ ஒண்ணு கூடப் பறிக்கலே. அப்ப டியே விட்டிருக்காங்க. சாயங்காலமானா, வாடித்தானே போகும்? அதுக்கு நாமாவது ஒண்ணு பறிச்சுக்கக் கூடாதா? வீணாப் போறதை எடுத்துக்கறதுக்குக் கூட இல்லாத உரிமை சுதந்திரம் என்ன சுதந்திரம்னு கேட்டேன்.

''வீணாப் போறதா இருந்தாக் கூட

மற்றவர்களுடைய பொருளைத் தொடுவது கூடப் பாவம். அந்தப் பாவத்துக்கு சுதந்திரம் என்ற பெயரைச் சூட்டறது கூட அநியாயம். சொந்தக்காரங்களுக்குத் தெரியாம ஒரு பொருளை எடுத்துக்கறது பெரிய குற்றம். 'உனக்கு வேணுன்னா நேரே அவங்ககிட்டேயே போய் ஒரு பூவைக் கேட்டு வாங்கிக்கோ. நீயா கேட்டியானா அவங்க ரொம்பச் சந்தோஷமா குடுப்பாங்க. அதையே, அவங்களுக்குத் தெரியாம நீ எடுக்கறதை அவங்க பார்த்தாங்கன்னு வெச்சுக்கோ, உன்னைத் திட்டு வாங்க. திருட்டுப் பட்டம் வேறு கிடைக்கும். எதுக்கு அனாவசியமா அவங்களோட மனக்கசப்புக்கு ஆளாகணும்?'' அப்படீன்னு அட்வைஸ் பண்ணாங்க. அது மட்டுமில்லாம அந்த வீட்டுக்கார மாமிகிட்ட என்னை அறிமுகப்படுத்தி, என் ஆசையையும் சொன்னாங்க. உடனே அந்த மாமி தானே நிறைய ரோஜாப் பூவைப் பறிச்சுக் குடுத்தாங்க. ''தினமும் வா தரேன்'' அப்படீன்னும் சொன்னாங்க. எனக்கு ரொம்ப சந்தோஷமா இருந்தது. இன்னொருத்தர் பொருளை அது அவங்களுக்குத் தேவையில்லாதது என்றாலும் கூட, அவர்களுடைய அனுமதி இல்லாமல் எடுத்துக் கொள்வது உண்மையான சுதந்திரம் இல்லேன்னு நான் தெரிஞ்சுக்கிட்டேன்.

படங்கள், பேட்டி : பிரபுசங்கர்.


ஐன்ஸ்டீனும் காரோட்டியும்

★ விஞ்ஞானி ஐன்ஸ்டீன் பல்கலைக் கழகங்களின் வேண்டுகோளை ஏற்று அடிக் கடி த

காரோட்டியின் மனதில் திடீரென்று ஒரு மின்னல் கீற்று!

இந்தக் கணக்கு ரொம்ப எளிதானது! நீங்களே என்னைக் கேட்கும்படி ஆயிற்றே என்று வியப்படைகிறேன்! இந்தக் கணக்கு எவ்வளவு எளிதானது என்பதை நிரூபிக்க எனது காரோட்டியை வரவழைத்து இந்தக் கேள்விக்கு உங்கள் எதிரிலேயே விடை தரச் சொல்கிறேன்!'' என்று கூறி வெற்றிகரமாக நடந்தார் கில்லாடி காரோட்டி.

- ஜே. பாபு, கொட்டாரம் போஸ்ட்.


ற்புதச்
சடிகள்

உணவு மூன்று பேருக்கும் போதுமான அளவு இருக்காது. அதனால் அவர்கள் இரவிலும், நீண்ட நேரம் கூடை, முறம் முடைந்து சம்பாதிக்க வேண்டியதாயிற்று.

அந்தக் காலத்தில் விளக்கே கிடையாது. எண்ணெய். தரும் வித்துக்களும் உலகத்தில் இல்லை. அதனால் அவர்கள் விறகுக் கட்டைகளை எரிய விட்டு அதனால் உண்டாகும் வெளிச்சத்தில்தான் வேலை செய்ய வேண்டியிருந்தது. அதனால் கண் ஒளி மங்கி அவர்கள் கஷ்டப்பட வேண்டியிருந்தது.

மேலும் அந்தக் காலத்தில் பருத்திச் செடியே உலகத்தில் இல்லை. விலங்குகளின் தோலை இடுப்பில் கட்டிக் கொண்டிருந்தார்கள். அதனால் இரவில் வேலை செய்யும் போது குளிரால் உடம்பு நடுங்கும்.

ஒருநாள் அவர்கள் இரவில் நெடு நேரம் வேலை செய்து கொண்டிருந்தனர். மங்கிய வெளிச்சத்தில் உற்றுப் பார்த்துப் பார்த்து அவர்களுடைய கண்கள் வீங்கிப் போயின.

''சூரியனைப் போல இரவிலே நிலாவும் நன்றாகப் பிரகாசிக்கக் கூடாதா? அப்படிப் பிரகாசித்தால் நமக்கு நல்ல வெளிச்சமும் கிடைக்கும்; குளிரின் தொல்லையும் இருக்காது'' என்று மகள் கூறினாள்.

''நிலா எல்லா இரவுகளிலும் ஒரே மாதிரியாக முழு வெளிச்சத்தோடு பிரகாசிக்கக் கூடாதா? அதுவும் இல்லையே! நிலாவிடம் சொல்லி நன்றாகப் பிரகாசிக்கும்படி செய்ய வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது'' என்றான் மகன்.

''வெகு தூரத்திலே மேகத்தை முட்டி அதற்கு மேலேயும் உயர்ந்து நிற்கும்படியான ஒரு மலை இருக்கிறதாம். அந்த மலையின் உச்சியிலே வெண்பனிச் சிகரத்திலே ஒரு மகான் இருக்கிறாராம். அவர் நிலா வரும் போதெல்லாம் அதற்குள்ளே புகுந்து விளையாடி விட்டுத் திரும்புவாராம். அவரைக் கண்டு கேட்டுக் கொண்டால் ஒருவேளை அவர் நிலாவை நன்றாகப் பிரகாசிக்கச் செய்யலாம்'' என்றான் கிழவன்.

உடனே மகன், ''அப்பா, அப்படியானால் நான் இன்றே புறப்பட்டு அவரைச் சந்திக்கப் போகிறேன்'' என்று உற்சாகத்தோடு எழுந்தான்.

''மகனே, அந்த மலைமேல் ஏறுவதே மிகவும் கஷ்டம். அதன் உச்சிக்குப் போய்ச் சேருமுன் எத்தனை ஆபத்துக்கள் ஏற்படுமோ! அது சுலபம் அல்லவே.''

''உலகத்திலே மக்கள் நலம் அடைய நான் எவ்விதமான கஷ்டத்தையும் அனுபவிக்கத் தயார். அப்பா, மகிழ்ச்சியோடு என்னை ஆசீர்வாதம் செய்து அனுப்புங்கள்.''




அவன் உற்சாகத்தைக் கண்டு தந்தையும் ஆசீர்வதித்தார்.

மகன் உடனே புறப்பட்டான். எத்தனையோ ஆறுகளை நீந்தி நீந்திக் கடந்தான். வனங்களுக்குள் எல்லாம் துணிச்சலோடு புகுந்து சென்றான். வழியிலே எத்தனையோ உயரமான மலைகள் ஏறி இறங்கி வடக்குத் திசையை நோக்கிப் போய்க் கொண்டேயிருந்தான். கடைசியில் வெள்ளிப் பனிமலை தோன்றிற்று. கால்கள் தேய்ந்தன. பாதத்தில் ரத்தம் பீறிட்டு ஒழுகிற்று. பிறகு கைகளையும் முழங்கால்களையும் தரையில் ஊன்றித் தவழ்ந்து தவழ்ந்து செல்லலானான். கைகளிலும், முழங்கால்களிலும்

தோல் உரிந்து இரத்தம் பெருக்கெடுத்தது. அவன் தன் அரையில் கட்டியிருந்த தோலைக் கிழித்துக் கைகளிலும் முழங்கால்களிலும் கட்டிக் கொண்டு பனிமலை மீது தவழ்ந்து சென்றான். கடுங்குளிர் உடம்பை நடுக்கிற்று. இருப்பினும் அவன் மனம் தளரவே இல்லை.

இப்படி அவன் விடாமுயற்சியோடு சென்றதன் 'பயனாகக் கடைசியில் மலை உச்சியிலிருக்கும் மகானைத் தரிசிக்க முடிந்தது. அவருடைய கண்கள் ஏதோ ஒருவித ஒளியோடு ஜொலித்தன. சிறுவன் அவரை அணுகி வணங்கினான்.





''ஐயா, உலகத்திலே மக்கள் இரவு நேரங்களிலே வெளிச்சமில்லாமல் துன்பப்படுகிறார்கள். சூரியனைப் போலவே நிலாவும் இரவில் நன்றாகப் பிரகாசிக்க நீங்கள்தான் அருள் செய்ய வேண்டும். அதற்காகவே சிரமப்பட்டு வந்திருக்கிறேன்'' என்றான் பையன்.

அந்த மகான் கூர்ந்து கவனித்தார். பையனுடைய முயற்சி அவருக்கு நன்றாகத் தெரிந்தது. ''பையா, உன்னுடைய முயற்சி மிகவும் நல்லதுதான். நான் உனக்காக நிலாவைக் கேட்டுப் பார்க்கிறேன்'' என்று சொல்லி விட்டு நிலாவுக்குள் புகுந்து மறைந்தார்.

கொஞ்ச நேரத்திலே அவர் மலையுச்சிக்குத் திரும்பி வந்தார். ''பையா, நீ விரும்புகிறதைப் போல் அதற்குச் சூரியனைப் போல அவ்வளவு சக்தி இல்லையாம். எல்லா இரவிலுங்கூட ஒரே மாதிரியாக பிரகாசிக்க முடியாதாம். சில இரவுகளில் சமுத்திரத்திற்குப் போய் முகத்தை நன்றாகக் கழுவி சுத்தம் செய்து கொள்ள வேண்டுமாம். இல்லாவிட்டால் அழுக்குப் படிந்து மங்கிப் போகுமாம்'' என்றார் அவர்.

பையனுடைய முகத்திலே விசனம் படர்ந்தது. ''ஐயா, நீங்கள்தான் உலகத்து மக்களுடைய துன்பம் போக ஒரு வழி சொல்ல வேண்டும்'' என்று கெஞ்சினான்.

மகான் சற்று நேரம் யோசனை செய்து பார்த்து விட்டு, ''மக்களுக்கு இரவில் ஒளி கிடைக்க வேண்டுமானால் அதற்கு எண்ணெய் தரும் செடியைப் புதிதாக உலகத்திலே உண்டாக்க வேண்டும். யாராவது ஒரு மனிதன் அவ்விதச் செடியாக மாறுவதற்குத் தயாராக இருந்தால் அந்தச் செடியை உண்டாக்க முடியும். தன்னையே தியாகம் செய்து கொள்ளும் மனிதன் எவனாவது இருக்கிறானா?'' என்றார் மகான்.

உடனே, ''நானே தயாராக இருக்கிறேன். என் வாழ்வு பெரிதல்ல. மக்களுடைய துன்பம் நீங்கினால் போதும்'' என்று ஆர்வத்தோடு பையன் பதில் சொன்னான்.

அவன் ஆர்வத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்த மகான் அவனிடம் ஒரு முத்தைக் கொடுத்தார். ''இந்த முத்தை வாயில் போட்டு விழுங்கினால் நீ எண்ணெய் வித்துச் செடியாக மாறி விடுவாய்'' என்றார் மகான். பையன் கொஞ்சமும் தயக்கமின்றி அந்த முத்தை வாயில் போட்டு விழுங்கினான்.

உடனே அவன் ஆமணக்குச் செடியாக மாறிப் பூத்துக் காய்த்துக் குலுங்கினான்.

வீட்டை விட்டு அந்தப் பையன் புறப்பட்டு வந்து பத்து மாதங்களாயின. அதனால் கிழவனும் அவன் மகளும் கவலையில் மூழ்கினார்கள். ஒரு நாள் மகள் தன் தந்தையைப் பார்த்து, ''நான் போய்ப் பார்த்து முடியுமானால் அவனை அழைத்து வருகிறேன்'' என்றாள்.

தந்தையின் அனுமதி பெற்றுச் சிரமப்பட்டு, பனிமலையின் உச்சிக்குச் சென்று அவளும் மகானைக் கண்டாள்.

''ஐயா, தயவு செய்து சூரியனைப் போலவே நிலாவை நன்றாகப் பிரகாசிக்கச் சொல்லுங்கள். நீங்கள் சொன்னால் அது நடக்கும்'' என்று அவள் பணிவோடு கேட்டாள்.

''மகளே, உன்னைப் போலத்தான் முன்பு ஒரு சிறுவன் கேட்டான். நானும் நிலாவிடம் வேண்டினேன். ஆனால் நிலாவால் அது முடியாது என்று தெரிந்தது'' என்றார் அவர்.

''பிறகு என்ன செய்யலாம், சொல்லுங்கள்'' என்று கண்ணீர் சிந்தினாள் அந்தப் பெண்.

''அதோ பார், செடி! அதன் எண்ணெய் விளக்கு ஏற்ற உதவும். முன்னால் இங்கே வந்த பையன்தான் மக்களின் துன்பத்தைப் போக்க இப்படி ஆமணக்குச் செடியாக மாறியிருக்கிறான்'' என்று மகான் தெரிவித்தார்.

அவள் அந்தச் செடியைக் கட்டியணைத்துக் கொண்டு, ''அண்ணா, நீ நல்ல காரியம் செய்தாய்'' என்று கூறி மகிழ்ந்தாள். பிறகு மகானைப் பார்த்துத் தானும் இப்படி நல்ல காரியம் செய்ய ஆசைப்படுவதாகச் சொன்னாள்.

''நீ பருத்திச் செடியாக மாறத் தயாரா?'' என்று கேட்டார் மகான்.

''தயார்'' என்று உடனே பதில் சொன்னாள் அவள். அவளுடைய உற்சாகத்தைக் கண்டு மகிழ்ந்த மகான் அவளிடமும் ஒரு முத்தைத் தந்தார். அதை விழுங்கும்படி அப் பெண்ணிடம் கூறினார். அவளும் உடனே முத்தை விழுங்கி பருத்திச் செடியாக மாறிப் பூத்துக் காய்த்து விளங்கினாள்.

மகள் புறப்பட்டுச் சென்று பத்து மாதம் ஆகியதைக் கிழவன் அறிந்து, அவனும் வெள்ளிப் பனிமலையை நோக்கி நடந்தான். அவனும் பல துன்பங்களை அனுபவித்தாலும் மனம் தளராமல் மலையின் உச்சியை அடைந்தான். மகானைக் கண்டு வணங்கினான். தன்மகனும் மகளும் அங்கே வந்து மகானை வேண்டியதையும், பிறகு அவர்கள் ஆமணக்கு, பருத்திச் செடிகளாக மகிழ்ச்சியோடு மாறியதையும் மகானிடமிருந்து தெரிந்து கொண்டான்.

''ஐயா, நானும் உலகத்துக்காக ஏதாவது நல்லது செய்ய ஆசைப்படுகிறேன். எனக்கும் ஒரு முததுக் கொடுங்கள்'' என்று கேட்டான். மகான் அவனைப் பார்த்து, ''என்னிடம் இனி முத்து இல்லை. அது அவசியமும் இல்லை. நீ இந்த ஆமணக்கு விதைகளையும் பருத்தி விதைகளையும் எடுத்துச் சென்று உலகத்திலே பல இடங்களில் முளைக்க வை. அவற்றின் உதவியால் மக்களுக்கு விளக்கும், நல்ல ஆடையும் கிடைக்கும்'' என்றார்.

மகான் கூறியவாறே விதைகளோடு அவரை வணங்கி விட்டுத் திரும்பினான் கிழவன். பல இடங்களில் விதைகளைப் போட்டுச் செடிகளை வளர்க்க ஏற்பாடு செய்தான். அன்று முதல் மக்களுக்கு இரவிலே எண்ணெய் விளக்கின் உதவியால் நல்ல வெளிச்சமும் உடம்பைக் குளிரிலிருந்து காப்பாற்றிக் கொள்ளப் பருத்தியின் உதவியால் வெது வெதுப்பான ஆடைகளும் கிடைத்தன.

பாம்புகள் உலகம்

ஆழி

உலகில் 3000 வகைப் பாம்புகள் இருக்கின்றன. ஆனாலும் விஞ்ஞானப் பிரிவின்படி அவற்றை 11 இனங்களாகப் பிரித்திருக்கிறார்கள். 3 விஷமுள்ளவை, 8 விஷமற்றவை. இந்தியாவில் 400 வகைப் பாம்புகள் இருக்கின்றன.

உலகில் மிகவும் பெரிய பாம்பு 'அனகோண்டா' என்னும் 13 மீட்டர் நீள மலைப்பாம்புதான்! எடை 250 பவுண்டு! இதன் இரை: பன்றிகள், மான்கள், ஆடுகள், — சில சமயம் மனிதர்கள்! இது 25 ஆண்டுகள் உயிர் வாழும். சீனர்களுக்கு மிகவும் பிடித்த உணவு மலைப்பாம்பு மாமிசம்!




மிகச் சிறிய பாம்பு 'டைப்லோப்ஸ்' சில செ.மீ. நீளமே இருக்கும்!



ஒரு நாகப்பாம்பு, ஒரு தடவைக்குச் சுமார் 200 முட்டைகள் இடும். அதில் சுமார் 180 முட்டைகளைத் தானே தின்றுவிடும்! மீதியில், 10 அல்லது 12 தான் குட்டியாகும்!




ஒரு நாகப்பாம்பு, 4 நாட்களுக்கு ஒருமுறை 1 க.செ.மீ. விஷத்தை உற்பத்தி செய்கிறது. 100 கிராம் விஷத்தின் விலை ரூ. 65 லட்சம். 100 கிராம் விஷத்திற்கு 39,000 பாம்புகள் தேவை. பாம்பின் விஷம், புற்றுநோய், இருதய நோய், பாரிசவாய்வு முதலியவற்றைக் குணப்படுத்துகிறது!



நாகப்பாம்பு, பிறந்த குட்டியாக இருக்கும் போதே அதற்கு விஷம் உண்டு. நாகப்பாம்பின் நச்சுப் பற்களைப் பிடுங்கிவிட்டாலும் அவை மீண்டும் முளைத்துவிடும்!




ஒரு நாகப்பாம்பு கொத்தும்போது 6 மி.கிராம் விஷம் பாயும்; கட்டுவிரியன் 4 மி.கிராம் விஷம் செலுத்தினாலே மனிதனைக் கொல்லப் போதுமானது. அனலிப் பாம்பு 12 மி.கி. செலுத்தும்! ராஜநாகத்தின் இரை, மற்ற நாகப்பாம்புகள்! ராஜநாகம் யானையைக்கூடக் கொத்திக் கொன்றுவிடும்!




பாம்பு கடிப்பதால் மட்டுமே இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் 15.000 பேர்கள் இறக்கிறார்கள். ஒரு நாகப் பாம்பிடம் அதன் ஆயுளில் சுமார் 4000 மனிதர்களைக் கொல்லக் கூடிய 'விஷம் உற்பத்தியாகிறது! பாம்பின் விஷம் சுமார் 40 ஆண்டுகளுக்கு அதன் வீரியம் குன்றாமல் இருக்கும்!




பாம்பின் விஷத்தை எப்படிச் சேகரிக்கிறார்கள்? பாம்பின் கழுத்தைப் பிடித்துக்கொண்டு, விஷம் சேகரிக்கும் ஜாடியின் வாய்ப்புறத்தில் கட்டப்பட்டிருக்கும் ரப்பரைக் கடிக்கச் செய்கிறார்கள். ரப்பரைப் பாம்பு கடிக்கிறது. அதன் விஷப்பற்கள் ரப்பருக்குள் புகுகின்றன. விஷத்தைப் பாம்பு கக்குகிறது. ஜாடிக்குள் விழுந்த விஷத்தில் உள்ள 80 சதவீத நீரை நீக்கிப் பொடியாக்குகிறார்கள். இந்த விஷப் பொடிதான் மருந்தாகிறது!




ஆப்பிரிக்காவில் உள்ள 'மம்பா' என்னும் நாகம்தான் உலகில் மிகவும் கொடிய விஷம் கொண்டது! அது மனிதனைக் கடித்தால் ஒரே நிமிடத்தில் அவன் மரணம் அடைந்துவிடுவான்!



சாதாரணமாகப் பாம்புகள் ஊர்ந்து செல்லும் வேகம் மணிக்கு 7½ கி.மீ. பாம்புகளில் மிக வேகமாக ஊர்ந்து செல்லக் கூடியது 'மம்பா 'பாம்பு. அதன் வேகம் மணிக்கு 12½ கி.மீ.






பாம்புகளின் கண்களில் இமைகள் இல்லை. கண்கள் திறந்தே இருக்கும். பாம்புக்கு இரவில் தான் கண் நன்றாகத் தெரியும். அதன் கண்களுக்கு அசைந்து கொண்டிருக்கிற உருவம்தான் தெரியும்; அசையாத உருவம் தெரியாது!


பாம்புகளின் ஆயுட்காலம்: மலைப்பாம்பு: 25 ஆண்டுகள், கண்ணாடி விரியன் 22 ஆண்டுகள், நாகப்பாம்பு 13 ஆண்டுகள், நீர்ப்பாம்பு 11 ஆண்டுகள்.

பாம்பின் நாக்கு தொடு உணர்ச்சியை அறிவதுடன், வாசனையையும் அறிகிறது, சூழ்நிலையையும் உணர்ந்து கொள்ளுகிறது. எனவே தான், அது நாக்கை அடிக்கடி வெளியே நீட்டுகிறது!




பாம்புகளின் தாடையில் மூட்டுக்கள் இல்லை. எனவே எவ்வளவு பெரிய இரையானாலும் வாய் விரிந்து கொடுத்து விழுங்கிவிடும்!

பாம்பு, தன் வாயில் அடைத்துக் கொண்ட இரையைத் துப்ப முடியாது! விழுங்குவதைத் தவிர வேறு வழியில்லை!






பாம்புகளில் மிகவும் சாதுவானது மரகத மலைப்பாம்பு. அதை யாராவது தொந்தரவு செய்தால், அது வாயைக் கூடத் திறக்காது! ஓடாது. அப்படியே சுருட்டிக்கொண்டு விடும்! அதனால், இந்தப் பாம்பை எதிரிகள் சுலபமாகக் கொன்றுவிடுகின்றன!



விரியன் பாம்பு, தன் குட்டியுடன் இருக்கும்போது, ஏதாவது ஆபத்து வரும் என்று தெரிந்தால் உடனே தன் குட்டியை வாயில் கௌவிக்கொண்டு ஓடி மறைந்துவிடும்!




கண்ணாடியைப்போல் உடலைக் கொண்ட பாம்பு அமெரிக்காவில் இருக்கிறது. இதை அடித்தால், இரு துண்டாகக் கண்ணாடியைப் போல் ஒடிந்து விடுகிறது. அப்படி ஒடிவதனால் இது இறந்துவிடுவதில்லை! மாறாக, ஒடிந்த பகுதி மீண்டும் வளர்ந்து விடுகிறது!

ஆப்பிரிக்கப் பாலைவனத்தில் உள்ள 'சைட் வைண்டர்' என்னும் பாம்பு மற்றப் பாம்புகளைப் போல் நேராக ஊர்ந்து போவதில்லை; பக்கவாட்டில் எகிறிக் குதித்துச் செல்லுகிறது. இது இரை பிடிப்பதும் விசித்திரம்தான். மணலில் தன் உடலைப் புதைத்துக் கொண்டு, வாலை மட்டும் சிறிது வெளியே நீட்டிக்கொண்டிருக்கும். இதன் வாலை, புழு என்று நினைத்துச் சிறு பிராணிகள் தின்னவரும். இது சட்டென்று பாய்ந்து பிடித்துக் கொள்ளும்!





ஜாவா, மலேஷியா ஆகிய நாடுகளில், 'க்ரிஸோப்லியா ஆர்னாடா' என்னும் பறக்கும் பாம்புகள் இருக்கின்றன. மரத்துக்கு மரம் தாவிப் பறக்கும். அப்படிப் பறக்கும்போது விலாப் பகுதியை பட்டையாக ரிப்பன் மாதிரி அகலப் படுத்திக் கொள்ளும்!




ஆஸ்திரேலியக் காடுகளில், இரட்டைத் தலைப் பாம்புகள் இருக்கின்றன. இரண்டு வாய்களாலும் கடித்தாலும் விஷம்தான்!

அயர்லாந்திலும் நியூஸிலாந்திலும் பாம்புகளே கிடையாது! மடகாஸ்கரில் விஷப் பாம்புகளே கிடையாது. ஆஸ்திரேலியாவில் தான் விஷப் பாம்புகள் அதிகம்.



ஆப்பிரிக்காவில் உள்ள 'செகரட்டரி' பறவையின் முக்கிய இரையே விஷப் பாம்புகள்தான்! அது பாம்பைக் கொத்தி ஆகாயத்தில் வீசி எறிகிறது; கீழே விழுந்து மயக்கமடையும் பாம்பைக் கொன்று தின்னுகிறது!

புலியார் செய்த குழப்பம்!



அந்தக் காட்டின் நடுவே பரந்து விரிந்து தனது விழுதுகளை பூமியில் பதித்து நின்ற ஆலமரத்தடியில் காட்டில் உள்ள எல்லா விலங்குகளும் பறவைகளும் கூடியிருந்தன. ஆலமரத்தின் கீழே நடுநாயகமாக சிம்மாசனம் ஒன்று காணப்பட்டது. அதன் நேரே வலது புறம் யானை, புலி, கரடி, சிறுத்தை, முயல்களும் இடதுபுறம் காகங்கள், மயில்கள், காட்டுக் கோழிகள், நாரைகள், குருவிகள் மற்றும் பல வண்ணப் பறவைகளும் தங்களது அரசனான சிங்கத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தன.

கூட்டத்தில் சிறு சலசலப்பு. சிங்கராஜா மெல்லிய கர்ஜனையுடன் நடந்து வந்து கம்பீரமாக ஆசனத்தில் அமர்ந்தது. உடனே எல்லா விலங்குகளும் பறவைகளும் எழுந்து நின்று மரியாதை செலுத்தின. சிங்கம் அனைவரையும் அமரச் சொன்னது. பின்பு எழுந்து நின்று பேசத் தொடங்கியது.

''இங்கு அமர்ந்திருக்கும் எல்லோரையும் வரவேற்கின்றேன். சென்ற கூட்டத்தில் விளையாட்டுப் போட்டி நடத்த வேண்டும் என முடிவு செய்தோம். நாளை மறுநாள் நடக்க இருக்கும் பலவகையான விளையாட்டுக்களைப் பொறுப்பேற்று நடத்த இருப்பவர்களின் பட்டியல் இதோ.''

யானையார் - பளு தூக்கும் போட்டி
குரங்குகள் - ஹைஜம்ப்"

என்று படிக்க ஆரம்பித்தது. முடிவில் ''ஓட்டப்பந்தயத்திற்குச் சிறுத்தையாரையும் குதிரையாரையும் நடுவர்களாக நியமிக்கிறேன். எல்லோரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்'' என்று தன் பேச்சை முடித்துக் கொண்டது.

பறவைகளும் மிருகங்களும் கலைந்து தத்தம் இருப்பிடங்களுக்குச் செல்ல ஆரம்பித்தன. ஆனால் புலியும், நரியும் மட்டும் தம்மை எதற்கும் நடுவர்களாகத் தேர்வு செய்யவில்லையே என்ற மனக்குறையோடு சிங்கராஜாவிடம் முறையிட்டன.

''உங்களுக்கு என்ன தகுதி இருக்கிறது? ஆடத் தெரியுமா? பாடத் தெரியுமா? குறைந்தது விளையாட்டு என்றால் என்ன என்பதாவது தெரியுமா'' எனக் கேட்டது சிங்கராஜா.

நரியும், புலியும் ஒன்றும் பேசாமல் கோபத்துடன் திரும்பிச் சென்றன. மறுநாள் காலை...

எல்லா விலங்குகளும் விளையாட்டுப் பயிற்சி செய்து கொண்டிருந்தன. குயில்கள் பாடிக் கொண்டிருந்தன. ஆண் மயில்கள் நடனமாடிக் கொண்டிருந்தன. குரங்குகள் மரத்திற்கு மரம் தாவிக் கொண்டும், முயல்கள் நீளம் தாண்டும் போட்டிக்காகப் பயிற்சி செய்து கொண்டும் இருந்தன. நரியும், புலியும் எதிலும் கலந்து கொள்ளாமல் அடுத்த நாள் நடக்கவுள்ள விளையாட்டுப் போட்டிகளை நடத்த விடாமல் செய்ய என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தன.


விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் நாள் வந்தது. மைதானம் முழுவதும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மைதானத்தினுள் விளையாட்டுக்களில் கலந்து கொள்ளும் பறவைகளும் விலங்குகளும் திரண்டிருந்தன. போட்டிகளைக் கண்டு களிக்க நூற்றுக்கணக்கான பறவைகளும் விலங்குகளும் கூடியிருந்தன.

சிங்கராஜா வந்து தனது 'ஸ்பெஷல்' ஆசனத்தில் அமர்ந்ததும் போட்டிகள்

எஸ். ஹரிஹரன்

ஆரம்பமாயின. முதலில் பளுதூக்கும் போட்டி. தலைமை யானையார் போட்டியை ஆரம்பித்து வைத்தார். யானைகள் தயாராக நின்றன. நரியும் புலியும் செய்திருந்த ஏற்பாட்டின்படி





எறும்புகள் அங்கு நின்ற யானைகளின் காதில் புகுந்து கடிக்க அவற்றின் மேல் ஏறின. அவை காதை நெருங்கிய போது யானைகள் தங்கள காதுகளால் ''பட் பட்'' என அடித்துக் கொண்டன. எறும்புகள் பொடிப் பொடியாகிக் கீழே உதிர்ந்து விழுந்தன.

அடுத்து ஓட்டப் போட்டி. சிறுத்தையார் மற்றும் குதிரையார் முன்னிலையில் நடைபெறப் போகிறது.

தங்கள் முதல் திட்டம் பலிக்காதது கண்டு புலியும் நரியும் ஏமாற்ற மடையவில்லை. ஓட்டப் போட்டி நடக்கும் டிராக்கில் அவை ஏற்கெனவே பல இடங்களில் முள்ளைப் புதைத்து வைத்திருந்தன. ஆனால் முன்னை இரவில் அவை புதைத்த போது, ஆந்தையார் பார்த்து மற்ற மிருகங்களிடம் சொல்லி, புதைத்து வைத்திருந்த எல்லா முட்களும் அகற்றப்பட்டன. ஆனால் புலியாருக்கும், நரி

யாருக்கும் இது தெரியாது. ஓட்டப் பந்தயம் இனிதே நடந்து அவைகளின் ஏமாற்றத்தை அதிகப் படுத்தின.


அடுத்து உயரம் தாண்டும் போட்டி. தாண்டி விழும் போது அடிபடாம லிருக்க மணலைக் கொட்டியிருந்தனர். அதில் முள்ளைக் கொண்டு வந்து கொட்டியிருந்தன புலியும் நரியும். இதனை அறியாத குரங்குகள் தாண்டிக் குதிக்க ஆரம்பித்தன. மணலில் புதைத்து வைத்திருந்த முள்ளில் அவை விழுந்தன. முள் குத்தியதால் இரத்தம் கசிந்தது! வலி தாங்காது எல்லாம் அழுது அரற்றின! முதன் முதலாக வெற்றி கிடைத்தது புலிக்கும் நரிக்கும்.

பாட்டுப் போட்டியில் பாட வந்த குயில்கள் 'கரகர'வென சத்தமிட்டன. அவைகளால் பாட முடியவில்லை. ஏனெனில் நரியும், புலியும், 'நன்றாகப் பாட வேண்டுமானால் நெல்லிக்காய்ச் சாறு குடிக்க வேண்டும்' என்று கூறியதால் ஏற்பட்டதன் விளைவு. எல்லா மிருகங்களும் பறவைகளும் சிரித்தன.

நடனப் போட்டியின் போது மயில்கள் நடனமாடிக் கொண்டிருந்த மேடை உடைந்து விழுந்தது. இதுவும் நரியும், புலியும் செய்த சதியே. சில மயில்களுக்குக் கால்கள் உடைந்து விட்டன. உடனே எல்லா மிருகங்களும் பறவைகளும் சோகமாக அழ ஆரம் பித்தன. மகிழ்ச்சியோடு இருந்தவை புலியும், நரியும் மட்டுமே. போட்டி குழப்பத்தில் முடிந்ததைக் கண்டு அவையிரண்டுக்கும் ஒரே கொண்டாட் டம்.

இதனைக் கவனித்து விட்ட மிரு கங்களும் பறவைகளும் இதற்கெல் லாம் காரணம் புலியும், நரியுமே என்று கருதி சிங்கராஜாவிடம் முறையிட்டன. சிங்கராஜாவின் உத்தரவுப்படி இரண் டும் மரத்தில் கட்டப் பட்டன. போட்டி களை மறுபடி நடத்த சிங்கராஜா ஆணையிட்டது. அதன்படி உடனே மறுபடி போட்டிகள் நடந்தன. வெற்றி பெற்றவர்களுக்கு சிங்க ராஜாவே பரிசுகள் வழங்கினார்.

போட்டிகளை நடத்த விடாது குழப் பம் விளைவிக்க முயன்ற குற்றத்திற் காக புலியையும், நரியையும் கூட்டத் தினர் முன்னால் நூறு தோப்புக்கரணம் போடும்படி தண்டனை விதித்தார் சிங்கராஜா.



நானே வருவேன்!

''இந்தா பாருங்க, கேஸ் சிலிண்டர் வருவதாகத் தெரியலே; மண்ணெண்ணெயும் கிடைக்கலே. விறகாவது வாங்கிப் போடுங்க. இல்லாட்டி இன்னிக்குக் குடும்பத்தோட ஓட்டலுக்குப் போக வேண்டியதுதான்.''

அடுப்படியிலிருந்து வந்த தன் மனைவியின் புகார் மொழிகள் வ‍ராண்டாவில் காலைப் பேப்பரைப் புரட்டிக் கொண்டிருந்த சாமுவேல் சாரின் காதுகளில் விழுந்தன.

'விறகுக்கு என்ன செய்வது?' என்ற சிந்தனையோடு தெருவில் தன் பார்வையைச் செலுத்தினார். அவரது வகுப்பில் படிக்கும் தங்கமுத்து கேரியரில் ஒரு சிறிய விறகுக் கட்டுடன் சைக்கிளில் போய்க் கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததுமே, 'நிச்சயம் இவன் வேலாயுதம் சார் வீட்டுக்குத்தான் விறகு கொண்டு போகிறான்' என்ற உறுதியான முடிவுக்கு வந்தார். தன் அனுமானம் சரிதானா என்று அறிந்து கொள்ள விரும்பி எழுந்து வந்து வீதியை நோக்கினார். அவர் ஊகித்தபடியே நான்கைந்து வீடுகள் தள்ளியிருந்த ஆசிரியர் வேலாயுதத்தின் வீட்டு முன் அவன் சைக்கிள் நின்றது.

ஒன்பதாம் வகுப்பு 'ஏ' பிரிவின் வகுப்பாசிரியர்தான் சாமுவேல் சார். அவரிடம்தான் இந்தத் தங்கமுத்து படிக்கிறான். படிப்பில் படு கெட்டி. நிரந்தரமாகப் 'பஸ்ட் ரேங்க்' அவன்தான். அவனுடைய அப்பா ஏதோ விறகுக் கடை வைத்திருப்பதாகக் கேள்வி. போன வருடம் இதே தங்கமுத்து வேலாயுதத்திடம் எட்டாம் வகுப்புப் படித்தவன். இந்த ஆண்டு சாமுவேல் சாரிடம் ஒன்பதாவது படிக்கிறான். அவனைப் பற்றி அவர் மனத்தில் என்றோ ஆழப் பதிந்துவிட்ட அந்த அபிப்பிராயம்' இப்போதும் ஏனோ மெல்லத் தலைதூக்கியது.

'பழைய வகுப்பாசிரியர் வேலாயுதத்திடம் தங்கமுத்துவுக்கு இருக்கும் ஒட்டுதல் நம்மிடம் இல்லையே! அவருடைய வேலைகள் என்றால் அவனே விழுந்து விழுந்து செய்கிறானே! ஒரு வேளை அவரைப் போல நாம் அவனிடம் பாசமாக இல்லையோ? அல்லது அவரது கற்பிக்கும் திறமைதான் அப்படி அவனைக் கவர்ந்து விட்டதோ?' அதே சமயம் அவன் தன்னிடம் காட்டும் பணிவு, மரியாதை ஆகியவற்றையும் சாமுவேல் சாரால் மறக்க முடியவில்லை. அவர் ஏதேனும் வேலைகள் சொன்னால் தங்கமுத்து மறுத்ததே இல்லை. ஆனால், அதைச் செய்து முடிக்கும் முறையிலேதான் அவனிடம் அந்த வித்தியாசத்தைக் காண முடிந்தது அவரால்.

வேலாயுதத்தின் வீட்டு வேலையென்றால் தங்கமுத்துவே ஓடி ஓடிச் செய்வான். ஆனால், சாமுவேல் சாரின் வீட்டு வேலையென்றால் அவனது தம்பி ராமுவை அனுப்பி வைத்து விடுவான்.

நான்கைந்து நாட்களுக்கு முன் நடந்த சம்பவம் அவர் நினைவுக்கு வந்தது.

அன்று சாமுவேல் சார் வீட்டின்

திருசீனிவாசன்

குழாயில் தண்ணீர் வரவில்லை. அத னால் தங்கமுத்துவை அழைத்து, ''குடிப்பதற்கு மட்டும் ஒரு குடம் நீர் கொண்டு வர முடியுமா?'' என்று கேட்டார்.

அவர்கள் விறகுக் கடைக்குள் ஒரு குடிநீர்க் கிணறு இருப்பதும், குழாயில் தண்ணீர் வராத போது ஊரே அதி லிருந்து குடிநீர் எடுத்து வருவதும் அனைவரும் அறிந்த விஷயம். அதிலும் தங்கமுத்துவிடம் சைக்கிள் இருப்ப தாலும் அவன் வேலாயுதம் வீட்டிற்கு அந்த வேலைகளைச் செய்வதைப் பார்த்திருந்ததாலுமே, சாமுவேல் அவ னிடம் அந்தச் சிறு உதவியை எதிர் பார்த்தார்.

அவர் கேட்டுக் கொண்ட அரை மணி நேரத்திற்கெல்லாம் தண்ணீர் வீடு தேடி வந்தது. ஆனால், தங்கமுத்துவின் மூலமாக அல்ல; அவன் தம்பி ராமு வின் மூலமாக. அதைக் கூட சாமு வேல் சார் பெரிதுபடுத்தியிருக்க மாட் டார். ஆனால், அதே சமயம் தங்க முத்துவே வேலாயுதத்தின் வீட்டுக்குத் தண்ணீர்க் குடத்துடன் போய்க் கொண் டிருந்தானே, அதைத்தான் அவரால் புரிந்து கொள்ளவும் முடியவில்லை; மறக்கவும் முடியவில்லை!

'கிணிங்... கிணிங்... கிணிங்!'

சைக்கிள் மணியின் முழக்கம். அதைத் தொடர்ந்து ''சார், விறகு'' என்ற அழைப்புக் குரல்.

சாமுவேல் சார் வாசலுக்கு வந்தார். அங்கே தங்கமுத்துவின் தம்பி ராமு தான் விறகுக் கட்டுடன் நின்றான்.

விறகு தேவை என்று தன் மனைவி சொல்லி வாய் மூடு முன்பே வாசலில்



வந்து நிற்கும் விறகைப் பார்த்து சாமுவேல் சாருக்கு வியப்பு ஒரு பக்கம். இந்த முறையும் கூடத் தான் வராமல் தன் தம்பியை அனுப்பியிருப்பது குறித்துத் தங்கமுத்துவின் மீது வெறுப்பு ஒரு பக்கம். அந்த வெறுப்பில் விறகைத் திருப்பி அனுப்பி விடலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே அவர் மனைவி அங்கே வந்தாள். உடனே பையன், ''அம்மா, நீங்க விறகு இல்லேன்'னு வேலாயுதம் சார் வீட்டில் சொன்னீங்களாம். அந்த அம்மா என் அண்ணன்கிட்டே சொல்லியிருக்காங்க. உடனே அண்ணன் என்னை அனுப்பிச் சான்,'' என்று சொல்லி முடித்தான்.

'பெரிய துரை! அவன் வரக் கூடா தாக்கும்' என்று சாமுவேல் சார் தன் மனத்துக்குள் கருவியவாறு விற குக்குரிய விலையை விசாரித்துப் பணத்தை அவனிடம் கொடுத்தனுப்பி னார். ஆனால் அவர் மனம் மட்டும் செக்குமாடு போல அந்த ஒரு விஷ யத்தையே சுற்றிச் சுற்றி வந்தது.

தங்கமுத்துவுக்குத் தன்னிடம் ஒரு பாசமும் பற்றுதலும் உண்டாக வேண்டும் என்று சில முயற்சிகளைக் கூட மேற்கொண்டார் அவர். ஒருநாள் அவனைப் பார்த்து, ''தங்கமுத்து, உனக்கு எந்தப் பாடத்தில் என்ன சந்தேகம் வந்தாலும் எந்த நேரத்திலும் கூசாமல் என்னிடம் வரலாம். வேறு எந்த உதவிகள் தேவைப்பட்டாலும் கூடத் தயங்காதே!'' என்று அன்பொழுகக் கூறினார். அவனும் ''நன்றி சார்'' என்று தலையாட்டிச் சென்றானே தவிர, ஒரு நாளும் அவரை நாடி வந்ததில்லை. மாறாக வேலாயுதம் சார் வீட்டில் அவன் கிடையாகக் கிடப் பதற்கு மட்டும் காரணம் தெரிய வில்லை அவருக்கு.

ஆண்டிறுதித் தேர்வுகள் முடிந்து முடிவுகளும் ஒட்டப்பட்டு விட்டன. தங்கமுத்து ஒன்பதாம் வகுப்பின் எல்லாச் செக்ஷன்களிலுமாகச் சேர்த்து முதல் மாணவனாகத் தேர்ச்சி பெற்றி ருந்தான். ஆனால்,அவனைப் பள்ளியில் பார்த்த போது ஓரிரு வார்த்தைகள் பாராட்டக்கூட மனமில்லாமல் போய் விட்டது சாமுவேல் சாருக்கு.

'ரிசல்ட்'டை ஒட்டி விட்டு வீட்டுக்கு வந்ததும் சாமுவேல் சார் மனைவியின் முதல் முறையீடு: ''இன்று குழாயில் தண்ணீர் வரவில்லை!'' என்பதுதான்.

''வராவிட்டால் என்ன செய்வது? நானே சைக்கிளில் குடத்தைக் கட்டிக்கிட்டுப் போக வேண்டியது தான்'' என்று அலுத்துக் கொண்டார்.

'இத்தனை நாள் நம் வகுப்பில் படித்ததால் அவனிடம் ரெண்டு உதவி களை எதிர்பார்க்க முடிஞ்சது; இனிமே எதுவும் செய்ய மாட்டான்' என்று தனக்குத்தானே பேசிக் கொண்டி ருக்கும்போதே வாசலில் 'கிணிங்... கிணிங்!' என்ற சைக்கிள் மணியின் ஒலி.

சாமுவேல் சார் யாரென்று பார்ப்ப தற்காக வெளியே வந்தார். கேரியரில் தண்ணீர்ப் பானையோடு வாசலில் சைக்கிளை வைத்துக் காத்துக் கொண்டி ருந்தவன் தங்கமுத்துவேதான்! அவ ரால் தன் கண்களையே நம்ப முடிய வில்லை. அதற்கு மேல் பெரிய அதி சயம் என்னவென்றால், அதே சமயம் அவன் தம்பி ராமு வேலாயுதம் சாரின் வீட்டை நோக்கித் தண்ணீர்க் குடத் துடன் சைக்கிளில் போய்க் கொண்டி ருந்ததுதான்!

'என்ன இன்று தலைகீழாக இருக் கிறதே!' என்று எண்ணிக் கொண்டி ருக்கும்போதே தங்கமுத்து அவரை

சுண்டெலிகளின் இரத்தத்தில், மனித இரத்தத்தின் தன்மை காணப்படுகிறது என்று, கலிபோர்னியாவில் உள்ள ஸ்டான்போர்டு ஆராய்ச்சி யாளர்கள் கண்டு பிடித்து உள்ளனர்!





வணங்கி விட்டு, ''சார், இன்னிக்கி நம்ம ஊர்க் குழாயில் குடிநீர் வர வில்லை என்று தெரிந்தது. அதனால் உங்களுக்கும் வேலாயுதம் சாருக்கும் தண்ணீர் கொண்டு வந்தோம்'' என்று சொல்லிக் கொண்டே குடத்தைத் தூக்கிக் கொண்டு உள்ளே போனான்.

இன்று அவனிடம் தன் மன உறுத்தலைக் கேட்டே தீருவது என்று உறுதியுடன் காத்திருந்த சாமுவேல் சார் அவன் வந்தும் வராததுமாக, ''ஏம்ப்பா தங்கமுத்து, எப்பவும் எங்க வீட்டுக்கு உன் தம்பியைத்தானே அனுப்பி வைப்பே; நீ வேலாயுதம் சார் வீட்டுக்குத்தானே போவே? இன்னிக்கு அந்த வழக்கம் மாறிப் போயிடுச்சே; ஏதாவது காரணமிருக்கா?'' என்று மிகவும் பதமாகக் கேட்டார். அவன் தயங்கினான்.

அவர் மீண்டும் அவனைப் பார்த்து, ''வருத்தப்படாதேப்பா, நீ இதை ஏதோ ஒரு ''கொள்கை'' போல வைத்து நடந்து கொண்டது மாதிரி நான் நினைக்கிறேன். உண்மையை நான் தெரிஞ்சிக்கிடலாமா? இல்லே, உனக்கு என் மீது ஏதாச்சும் வெறுப்பா...?'' என்று கேட்டார்.

''ஐயோ, அதெல்லாம் இல்லே சார்; என் நினைப்பு ரைட்டோ, தப்போ? நீங்க என்னை மன்னிக்கணும்.''

''சும்மா சொல்லுப்பா...'' - சாமுவேல் சார் அவனை ஊக்கப் படுத்தினார்.

''மூன்று காரணங்களை என் மன

சிலே வச்சி உங்க வீட்டுக்கான சிறு சிறு உதவிகளை என் தம்பி மூலமாவே செஞ்சிக்கிட்டிருந்தேன். முதல் காரணம், நான் இயல்பாகவே முயற்சி பண்ணி நல்லாப் படிச்சி பஸ்ட் ரேங்க் வாங்குகிறவன். நான் அடிக்கடி உங்க வீட்டுப் பக்கம் வந்து, உங்களுக்கான உதவிகளைச் செய்யுறதை மத்தவங்க பாத்து, 'இவன் வாத்தியார் வீட்டு வேலைகளைச் செய்வதால் அவர் மார்க்குகளை அள்ளிப் போட்டு இவனைப் 'பஸ்ட் ரேங்க்' வரச் செய்கிறார்' என்ற பழிச் சொல்லைக் கூறினால், உங்கள் மனமும் புண்படும். எனக்கும் வருத்தம் ஏற்படும். ரெண்டாவது காரணம்; 'நாம்தான் தினமும் ஆசிரியர் வீட்டுக்கு எடுபிடி வேலைகளைச் செய்கிறோமே; அவர் பரீட்சைகளில் நம்மைப் பார்த்துக் கொள்வார்' என்ற சபலம் எனக்கு ஏற்படுமானால், என் முயற்சியும் உழைப்பும் தொய்வு பட்டுப் போய் விடும். மூன்றாவது காரணம்: சில சமயம் என் மீது உங்களுக்கு ஏற்படும் பாசம், பச்சாதாபங்கள் காரணமாக நீங்கள் ஒருவேளை உங்கள் நடு நிலையிலிருந்து மாறி, தவறான வழியில் எனக்கு உதவி செய்து விடக் கூடாது. இதுதான் சார்...''

தங்கமுத்து தொடர்ந்து கூறிக் கொண்டே போனான்.

''சார், நான் இப்போ ஒன்பதாம் வகுப்பு பாஸ் பண்ணி உங்க வகுப்பை விட்டுத் தாண்டிட்டேன். இன்றிலிருந்து உங்களுக்கு வேண்டிய உதவிகளை நானே செய்வேன்!''

சாமுவேல் சார் அயர்ந்து போய் நின்று கொண்டிருந்தார்! அவர் கண்களுக்கு தங்கமுத்து சாதாரண ஒன்பதாம் வகுப்பு மாணவனாகத் தோன்றவில்லை. பெரிய தத்துவ ஞானியாகத் தோற்றமளித்தான்.

சிக்கந்தர் கட்டிய மசூதி

டெல்லியில் இருக்கிறது சுல்தான் சிக்கந்தர் கட்டிய ஒரு மசூதி. இதற்கு மோதி மஸ்ஜித் என்று பெயர். இதை சிக்கந்தர் எப்படி கட்டினார் என்பதை அறிந்தால் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள். ஓர் அவரை விதையைக் கொண்டு இவ்வளவு பெரிய மசூதியினை கட்டியிருக்கிறார். எப்படி? அவரை விதை ஒன்றைப் பானையில் போட்டு முளைக்கச் செய்தார். அது வளர்ந்து காய் காய்த்தது. அதன் காய்களை எல்லாம் முற்ற விட்டு, விதைகளாக்கினார். அத்தனை விதைகளையும் மறுபடி ஊன்றினார். அவ்வளவும் செடியாகிப் பலன் தந்தன. இப்படியே அவற்றின் விதைகளையும் மறுபடி மறுபடி ஊன்றி ஊன்றி 1,60,000 ரூபாய் கிடைக்கும்படி மகசூல் செய்து கொண்டே இருந்தார். அதில் கிடைத்த பொருளால் தான் அந்தக் கம்பீரமான மசூதியைக் கட்டி இருக்கிறார்.

— வே. சுமதி, சென்னை — 1.



விண்வெளி வாழ்க்கை


விண்வெளி வீரர்கள், பூமியில் உணவு உண்பதைப் போல் விண்வெளியில் உண்ணமுடியாது. உணவுப் பொருட்களும், திரவப் பொருட்களும் விண்வெளியில் தண்ணீர்ச்சத்தை இழந்து விடுவதால் சாப்பிடும் முன்பு, சிறிது நீர் சேர்த்து, சூடாக்கி உண்பார்கள்.


தூங்கும்போது உள்ளேயே மிதக்கத் தொடங்கிவிடுவார்கள். புவியீர்ப்பு விசை அங்கு கிடையாததால் படுக்கையோடு தங்கள் உடலை 'பெல்ட்'டால் கட்டிக் கொள்வார்கள்.

பொழுது போக்குவதற்கு, விண்வெளிக் கலத்தின் சன்னல் புறத்திலிருந்து மற்றக் கோள்களையும், பூமியையும் வேடிக்கை பார்ப்பார்கள்.

விண்வெளியிலிருந்து பார்த்தால் பூமியிலுள்ள மலைகளும், பள்ளத்தாக்கு களும், நீலக் கடலும் அழகாகத் தெரிகின்ற தாம்! இடியும் மின்னலும் தீபாவளி மத்தாப்புகளைப் போல் வானத்தில் சிதறு கிறதாம்!

தா. ஷேக் ஹுசேன், செஞ்சி,


இந்த இடம் வேண்டாம்னு சொல்றியே, டெஸ்க் சரியா இல்லையா?
ஊஹூம்; முன்னால இருக்கும் பையன் என்னை விட மக்கு சார்!
சிரிப்பு....
உங்க வாத்தியார் சுத்த சைவம்னு எப்படிடா சொல்றே?
பரீட்சை பேப்பரில் கூட முட்டை போட மாட்டார்னா பார்த்துக்கோயேன்!
கால் பந்து இருக்கா?
இல்லை! முழு பந்துதான் இருக்கு!
கிணற்றுக்குள்ள இறங்கி உட்கார்ந்து என்னடா பண்றீங்க?
ஆழமான கதைப் போட்டியாமே. அதான் எழுதறேன்!
குதிரைக்குத் தெரிந்த பாஷை எது?
பரி பாஷை!



மலைக்கோட்டை மர்மம்!

வீர.வசந்தன்

3. குடிசை எரிந்தது!

படகு நடு ஆற்றுக்கு நகர்ந்து கொண்டே இருந்தது.

அப்போது கரையில் யாரோ கேலியாக உரத்துச் சிரிப்பது கேட்டது. அங்கே நாகராஜன் நின்று கொண்டிருந்தான்! அவன் ஆனந்தைப் பார்த்து, ''அடேய், அன்னைக்கு மணிமாறனைக் காப்பாற்ற, பாஞ்சாலவையே எதிர்த்து வீரமா பேசினியே... இப்ப உங்களையே காப்பாத்திக்க முடியலியாக்கும். ஆற்றுல குதிச்சு நீந்தி கரையேறுங்க பார்க்கலாம்'' என்றான் ஏளனமாக.

மரவேரிலிருந்து படகை அவிழ்த்து விட்டது இவன்தான். பழிவாங்க வேண்டும் என்று சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து இந்தச் செயலைச் செய்திருக்கிறான்!

ஆனந்த் அவனைப் பார்த்து, ''நாகராஜா, எங்களுக்கு நீந்தத் தெரியாது, தயவு செய்து விபரீதமா விளையாடாதே'' என்று கத்தினான்.

நாகராஜன் நின்ற இடத்தில் இருந்து அசையவில்லை. தன் கைகளைக் கட்டிக் கொண்டு, ''என் மாட்டுக்கு மட்டும் நீந்தத் தெரியும்னு நினைச்சீங்களாக்கும்... அன்றைக்கு அந்த வாயில்லா ஜீவனை மலை மேல இருந்து தள்ளி விட்டு வேடிக்கை பார்த்தீங்களே... அது நியாம்னா, இப்ப நீங்க ஆற்றோட மூழ்கிச் சாகறதை நான் வேடிக்கை பார்க்கிறதும் நியாயம்தான்'' என்று கேலியாகச் சிரித்தான்.

படகு வெள்ளத்தோடு நகர்ந்து நகர்ந்து போய்க் கொண்டிருந்தது. தனது முட்டாள்தனத்தால் மாட்டையும், வண்டியையும் இழந்து விட்டு, அதற்குப் பிறரைக் காரணம் காட்டும் இந்த மூடனிடம் என்ன பேசுவது?

ஆனந்த் படகில் கிடந்த துடுப்பை எடுத்துத் தன் பலத்தை எல்லாம் திரட்டி நீரைத் துழாவினான். ஆனால் துடுப்புப் போட்டுப் பழக்கமற்ற அவனால் படகின் போக்கைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கைகள் சோர்ந்து களைத்துப் போனான்.

கரையில் நின்று கொண்டிருந்த நாகராஜனின் சிரிப்பு மேலும் வலுவடைந்தது. ''அடேய், அன்னைக்கு, தண்ணியில சிக்கின மாட்டைக் கரை சேர்க்க முடியாம, நான் எப்படித் தவிச்சேன்... யாராவ்து ஒருத்தன் உதவிக்கு வந்தீங்களாடா? இந்த நாகராஜனோட விளையாடறது அவ்வளவு சுலபமில்லேன்னு இப்பவாவது தெரிஞ்சுக்க'' என்று கத்தி விட்டுத் திரும்பி ஓடி மறைந்தான்.

பயத்தில் கலங்கி சத்தமிட்ட தங்கையைத் தேற்றியவாறு ஆனந்த் தன் பலங்கொண்ட மட்டும் நீரைக் கைகளால் அளையலானான். அவன் கைகள்தான் வலித்ததே தவிர, படகு ஆற்றோடு போய்க் கொண்டேயிருந்தது. அந்தக் காட்டாற்றில் நீர்ச் சுழல்கள் வேறு ஆங்காங்கே சுழன்று கொண்டிருந்தன. அதில் அகப்பட்டால் அவ்வளவுதான். விரைவில் ஆனந்தும் தன்னம்பிக்கை இழந்து பீதிவசப் பட்டான்.

அப்போதுதான் சற்றும் எதிர்பாராத அந்தச் சம்பவம் நடந்தது. கரையில் ஒரு மனிதர் வேகமாக ஓடி வருவதை இருவரும் பார்த்தனர். உதவி கேட்டுக் கூச்சலிடுவதற்குள், அவரே மின்னல் வேகத்தில் நீரில் பாய்ந்து வேகமாக அவர்களை நோக்கி நீந்தி வரலானார்!

நிமிட நேரத்தில் படகை அடைந்தவர், தண்ணீரிலிருந்து ஒரு தாவு தாவி உள்ளே குதித்தார். அவர் குதித்த வேகத்தில் கவிழ்ந்து விடுவதைப் போல் படகு ஆடியது. அவசரமாக ஆனந்தின் கையிலிருந்த துடுப்பை, வாங்கிக் கொண்டவர் மாற்றி, மாற்றி நீரைத் துடுப்பால் அளைந்து, நீரின் போக்கிற்கு ஏற்பப் படகை ஓட்டி அதன் வேகத்தைக் கட்டுப்படுத்தி திறமையாகக் கரையை நோக்கிச் செலுத்தினார்!

நடப்பது கனவா, நனவா என்று நிதானிக்க முடியாமல் ஆனந்தும், அஸ்வினியும் திகைத்து நிற்க, கரையை அடைந்தனர். இருவரும் ஒரே பாய்ச்சலாகக் கரையில் குதித்தனர். அவரது கைகளைப் பற்றிக் கொண்டு, ''ஐயா, நல்ல நேரத்துல வந்து எங்களைக் காப்பாற்றினீங்க... ரொம்ப நன்றி'' என்றான் ஆனந்த் கண்கலங்க.

அஸ்வினி தன் நன்றியுணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாதவளாய், ''நீங்க தெய்வம் மாதிரி வந்து காப்பாத்தினீங்க. இந்த நேரத்துல நீங்க மட்டும் வரலேன்னா எங்க கதி அதோகதி ஆகியிருக்கும்'' என்றாள்.

அவர் சிரித்தவாறு படகை இழுத்துச் சென்று ஒரு மரத்து வேரில் கட்டினார். பின், ''நான் யார் என்கிறது இந்த ஊர்ல யாருக்கும் தெரியாது... ஆனால், இந்த ஊர்ல இருக்கிற அத்தனை பேரையும் எனக்குத் தெரியும்'' என்று மர்மமாகப் புன்னகைத்தார்.


''எங்களைக் கூடத் தெரியுமா?'' என்று கேட்டாள் அஸ்வினி.

''ஓ, தெரியுமே. புதுசா அணை கட்ட வந்திருக்கிற என்ஜினியரோட பிள்ளைகள்தானே நீங்கள்? யாராவது பொய் சொல்றதைப் பார்த்தா உங்களுக்குப் பிடிக்காது.. அநியாயம் செய்கிறவர்களை, அது யாராயிருந்தாலும் துணிவா தட்டிக் கேட்பீங்க... அதனால இப்படி ஆபத்து வந்தாலும் கலங்க மாட்டீங்க. என்ன நான் சொல்றது சரிதானே?'' என்று சிரித்தார் அந்த மனிதர்.

ஆனந்த் சட்டென்று நிமிர்ந்து அவரைப் பார்த்தான். தாடியும், மீசையும் அவர் முகத்தில் பாதியை மூடிக் கொண்டிருந்தபோதிலும் அவர், கண்களில் கருணையும், அன்பும் சுடர் விடுவதை அவனால் காண முடிந்தது. பரிவும், பாசமும் அவர் பேச்சில் பிரதிபலித்தன.

''என்னப்பா! அப்படி என் முகத்தைப் பார்க்கிறே? என்று அவர் கேட்டதும் சுயநிலை அடைந்த ஆனந்த், ''ஒண்ணுமில்ல... அன்றைக்கு நான் பாஞ்சாலவை எதிர்த்து வாதாடின போது நீங்க அங்கே இருந்தீங்களா?'' என்று கேட்டான்.

''இல்லே, ஆனா ஊருக்குள்ள நடக்கிற எல்லாக் காரியமும் எனக்குத் தெரியும்.''



''நல்ல பழக்கமோ, கெட்ட பழக்கமோ எங்க வீட்டில் யாருக் குமேடா, காப்பி சாப்பிடற பழக்கமெல்லாம் கிடையாதுடா.''

''பரவாயில்லேடா. நான் கண்ணை மூடிக்கறேன். உள்ளே போய்க் குடித்து விட்டு வா, உங்க அம்மா கூப்பிடறாங்க.''

- தக்கோலம் அ. முஸ்தபா.

''ஐயா, இவ்வளவு பெரிய ஆபத்துல இருந்து எங்களைக் காப்பாற்றினீங்க... இன்னும் நீங்க யார்னு சொல்லலையே? புதிராவே பேசறீங்களே! இப்ப எங்ககூட எங்க வீட்டுக்கு நீங்க கண்டிப்பா வரணும்... எங்க அப்பா அம்மாவிடம் உங்களை அறிமுகம் செய்து வைக்கிறோம்'' என்று அவர் கையைப் பற்றி இழுத்தாள் அஸ்வினி.

அவர் புன்னகையுடன் அவளைப் பார்த்து, ''நான் ஒண்ணும் பெரிதா உங்களுக்கு உதவி செய்திடலேம்மா. நீங்க எனக்குச் செய்கிற உதவிக்கு இது

ரொம்ப சாதாரணம்'' என்றார்.

அவர் என்ன சொல்கிறார் என்று புரியாமல் அண்ணனும், தங்கையும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க, அவர், ''நம்மை அறியாமலே செய்கிற சில காரியங்கள், சில நேரம், பிறருக்குப் பெரிய உதவியாகி விடு கிறது இல்லியா? அதைத்தான் சொன்னேன்..., இப்ப நீங்க ரெண்டு பேரும் பத்திரமா வீட்டுக்குப் போங்க'' என்று புறப்பட எத்தனித்தார்.

''அப்போ நீங்க எங்க வீட்டுக்கு வரப் போறதில்லியா?'' என்று ஏமாற்றத்துடன் கேட்டாள் அஸ்வினி.

''நேரம் வரும் போது நிச்சயமா வருவேம்மா... இப்ப வேண்டாம்... எனக்கு ஏதாவது உதவி செய்ய ணும்னு நீங்க நினைச்சா, என்னைச் சந்திச்சதையே யார்கிட்டேயும் சொல்ல வேண்டாம்... ம். இப்ப வீட்டுக்குப் போங்க'' என்றவாறு இரு வர் கைகளையும் பிடித்துக் குலுக்கி விடைபெற்றுக் கொண்டு மரங்கள் அடர்ந்து வளர்ந்திருந்த வனப் பகு திக்குள் சென்று மறைந்தார் அந்த மர்ம மனிதர்.

அந்த மனிதரின் பேச்சிலும் செய லிலும் ஏதோ மர்மம் மறைந்திருப் பதை இருவரும் உணர்ந்தனர். ''இந்த ஊர்ல எல்லோரையும் எனக்குத் தெரி யும்னு சொன்னாரே? ஒருவேளை மணிமாறனுக்கும் கூட அவரை பற்றித் தெரிஞ்சிருக்கலாம். அவனிடமே கேட் டுப் பார்க்கலாம்'' என்றாள் அஸ்வினி.

சிந்தனைவசப்பட்டவனாய் நின்று கொண்டிருந்த ஆனந்த், ''தன்னைச் சந்திச்சதை யார்கிட்டேயும் சொல்ல வேண்டாம்னு கேட்டுக் கொண்டாரே... இதற்குள் மறந்துட் டியா?'' என்று தங்கையின் முகத்தைப் பார்த்தான்.

இருவரும் மெதுவாக நடந்து மலைப்பாதையை அடைந்தனர். 'ஜல், ஜல்' சத்தம் இலேசாகக் கேட்டது. ஏதோ வண்டி வருகிறது. ஒருவேளை மணிமாறனாக இருக்குமோ? வண்டிச் சத்தம் நெருங்கி பாதையின் திருப்பத் தில் வண்டி தெரிந்தது. மணிமாறனே தான்! அவர்களைப் பார்த்துக் கையை அசைத்தவாறு மணிமாறன் வண்டி ஓட்டி வந்தான். அவர்களருகில் வந்து நிறுத்தியவன், ''ரெண்டு பேரும் இவ்வளவு நேரம் எங்க போயிட் டீங்க? அம்மா அங்கே உங்களைக் காணாம பதறிக்கிட்டிருக்காங்க ...ம், சீக்கிரம் வண்டியிலே ஏறுங்க'' என்றான்.

ஆயிரக்கணக்கான தொழிலா ளர்கள், அணை கட்டுவதற்கு நிர்ண யித்திருந்த இடத்தில் வளர்ந்திருந்த காட்டை வெட்டி அகற்றுவதில் மும் முரமாக ஈடுபட்டிருந்தனர். பெரும் பெரும் மரங்கள் வெட்டப்பட்டு மலை போல் குவிக்கப்பட்டிருந்தன. அவை கிளைகள் வேறு, தண்டு வேறாகச் சிதறிக் கிடந்த காட்சி, பெரும் போர்க்களத்தில், மனிதர்கள் தலை வேறு கை வேறு, கால் வேறாக வெட்டுண்டு சிதறிக் கிடக்கும் சோகக் காட்சியை நினைவுபடுத்தியது. குத்தகை எடுத்தவர்கள் அவற்றைத் தங்கள் வாகனங்களில் ஏற்றிக் கொண்டிருந்தனர்.

கிராமத்தின் தென்புறம் அமைந்தி ருந்த சந்திரகிரி மலைக்கும், வட புறமிருந்த காடவராயன் மலைக்கு மிடையே வெள்ளியாற்றின் குறுக்கே அணை கட்டுவதாக திட்டமிட்டிருந் தனர். மண்ணின் உட்புறம் புதை யுண்டு கிடக்கும் மரத்தின் பகுதிகளை இராட்சத புல்டோசர் இயந்திரங்கள் மண்ணோடு அகழ்ந்து வெளியேற்றிக் கொண்டிருந்தன.

அங்கு வேலை செய்து கொண்டி ருந்த தொழிலாளர்கள் எல்லோரும், ஒப்பந்தக்காரர்களால் வெளியூர்களில் இருந்து அழைத்து வரப்பட்டவர்கள். வந்து சேர்ந்து கொள்ளலாம் என்று ஊர் முழுக்க தண்டோரா அடித்துத் தெரியப்படுத்தியும் சந்திரகிரியைச் சேர்ந்த ஒருவர் கூட வரவில்லை. மாறாக வீட்டுத் திண்ணைகளில் படுத்துக் கொண்டு, நாளெல்லாம் சோம்பேறிகளாக அவர்கள் தூங்கிக் கொண்டிருப்பதைக் காண வேடிக்கை யாக இருந்தது. அவர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதும் புரியாத புதி ராக இருந்தது.


செல்லம்

அணையின் அஸ்திவாரத்தை அமைக்கப் பள்ளம் தோண்டும் வேலையை ஆரம்பிக்கு முன்னர், வேறொரு முக்கியமான வேலை இருந்தது. அதுதான் வெள்ளியாற்றின் போக்கைத் தடுத்துத் திருப்பி விடுவது! அதிலும் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தனர்.

ஆற்றின் குறுக்கே மூங்கில் கழிகளை நெருக்கமாக அடித்து, அதோடு சேர்த்து மணல் மூட்டைகளை அடுக்கி, ஆற்றோட்டத்தைத் தடுத்துக் கொண்டிருந்தனர். அதற்காக பல்லாயிரக்கணக்கான மணல் மூட்டைகள் லாரிகளில் வந்து இறங்கியவா றிருந்தன. இன்னொரு பகுதி தொழிலாளர்கள் அப்படித் தேக்கப்படும் ஆற்றுக்கு வேறு வழியில் வடிகால் அமைப்பதில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த இடத்துக்குச் சற்றுத் தள்ளி நிழலைப் பரப்பியவாறு நின்ற ஒரு பெரிய ஆலமரத்தின் அடியில் ஊர் மக்களோடு நின்று கொண்டிருந்தான் பாஞ்சா. சிந்தனைக் கோடுகள் அவன் முகம் முழுவதும் பரவியிருக்க, அந்த ஜனங்களைப் பார்த்து, ''பாத்தீங்களா, அணை வேலை எவ்வளவு மும்முரமா நடக்குதுன்னு...? அணை கட்டி முடியும் போது இந்த சந்திரகிரி தண்ணியில் மூழ்கிப் போகும்... அப்ப என்ன செய்யப் போறீங்க?'' என்று கேட்டான்.

எல்லோரும் அமைதியா இருக்க, கூட்டத்தில் ஒருவன், ''அதுதான் எல்லோருக்கும் நிலமும், வீடும், உதவிப் பணமும் தர்றதா ஊர் முழுக்க தண்டோரா அடிக்கிறாங்களே. அதை வச்சு விவசாயம் ஆரம்பிச்சா நல்லா இருக்கும்னு தோணுது'' என்றான்.

அதைக் கேட்டதும் பாஞ்சாவின் முகம் இருளடைந்தது. அவன் ஆவேசக் குரலில், ''செய்வீங்கடா. இந்த பாஞ்சா ஏமாந்தவனா இருந்தா நீங்க எதைத்தான் செய்ய மாட்டீங்க? எங்கிட்ட கை நீட்டி வாங்கின கடன் பணத்துக்கு முதல்ல வழியைச் சொல்லுங்க. அப்புறம் விவசாயம் செய்யறதைப் பற்றி யோசிங்க... நிலம், வீடு, உதவிப் பணம் எல்லாம் அவங்க எப்ப தந்து, நீ என்னிக்கிக் கஞ்சி குடிப்பே? வயிறு பசிச்சா இந்த பாஞ்சாக்கிட்டத்தான் வரணும்'' என்று குதித்தான்.



பேசியவனின் முகம் பேயறைந்தது போல ஆயிற்று. ''கோவிச்சுக்காதீங்க அண்ணே, என்னமோ தெரியாம சொல்லிட்டேன்'' என்றான் மன்னிப்புக் கோரும் குரலில். கூட்டத்தில் நின்ற பெரியவர்கள் வெறுமனே இப்படியும், அப்படியும் நெளிந்தனரே தவிர ஒன்றும் பேசவில்லை.

பாஞ்சா மீண்டும் குரலில் அமைதியை வரவழைத்துக் கொண்டு, ''நீங்க எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம்... எனக்கு நீங்க செய்ய வேண்டியது ஒண்ணே ஒண்ணுதான்,



புதியவங்ககிட்ட, எந்தப் பேச்சும், தொடர்பும் வச்சுக்கக் கூடாது. நம் மைப் பற்றி எந்தத் தகவலும் வெளியே போகக் கூடாது. இதை ஊர்க் கட்டுப்பாடா வச்சுக்குங்க'' என்றான்.

மக்கள் மந்தையாகத் தலையசைத் தனர். ஏதோ நினைத்துக் கொண்ட பாஞ்சா, ''அதுசரி, இப்ப மணிமாறன் அந்த என்ஜினியர் வீட்டுப் புள்ளை களுக்கு வண்டி அடிக்கிறானா, இல்லே விட்டுட்டானா?'' என்று கேட்டான்.

''அந்தப் புள்ளைகளுக்கு வண்டி ஓட்டக் கூடாதுன்னு எவ்வளவோ சொல்லியாச்சு. நீங்க சொன்னதாக் கூட கண்டிச்சி சொல்லியும் அவன் கேட்கலே'' என்று புகார் செய்தான் ஒருவன்.

பாஞ்சாவின் முகத்தில் கோபம் தீயாகப் பற்றியெரிந்தது. ''அந்தப் பயலுக்கு அவ்வளவு திமிரா...! நான் சொல்லியும் கேட்க மாட்டேன் என்கிறானா...? இவனுக்காகத்தானே நீங்க எல்லாம் அன்னைக்கு நாகராஜ னுக்கு எதிரா பேசினீங்க...? அப்பவே அவன் வண்டியையும் மாட்டையும் புடுங்கி நாகராஜன்கிட்ட கொடுத் திருக்கணும்... நல்ல சந்தர்ப்பத்தை விட்டாச்சு... இனியும் அவனை இங்கே வச்சிருந்தா நமக்குத்தான் ஆபத்து. எப்ப அவன் நம்மோட ஒத்து ழைக்க மறுக்கிறானோ, அவனை இனி யும் இங்கே இருக்க அனுமதிக்கக் கூடாது. அவனை ஊரை விட்டுத் துரத்தினாத்தான் சரிப்படும்'' என்று பல்லைக் கடித்தான்.

அதன் விளைவு இரண்டு நாட்களில் தெரிந்தது.

அன்று பொழுது இருட்டிய பிறகு வண்டியோடு தன் குடிசைக்குத் திரும்பிய மணிமாறனுக்குப் பகீரென் றது. அவன் குடிசை நெருப்பில் எரிந்து சாம்பலாகிக் கிடக்க, மண் சுவர் மட்டும் கரிப் பிடித்து பரிதாப மாக நின்று கொண்டிருந்தது!

பதறிக் கொண்டு உள்ளே ஓடினான் மணிமாறன். அவனது கந்தல் உடை களும் ஓரிரு பாத்திரங்களும் கூட நெருப்பில் உருத் தெரியாமல் போயி ருந்தன. அவனுக்குத் துக்கம் நெஞ் சுக்குள் குமுறியது. இது எப்படி நேர்ந் தது என்று புரியாமல் திகைத்து நின்ற வன், அக்கம் பக்கத்தில் விசாரிக்க லாம் என்று நினைத்துத் திரும்பிய போது, இருட்டுக்குள்ளிருந்து வெளிப் பட்ட நாகராஜனின் முகம், சுவருக்கு வெளியே தோன்றி, அவனைப் பார்த்துக் கேலியாகச் சிரித்தது.

''என்னடா மணிமாறா, இந்த நாகராஜனோட விளையாடறது அவ்வ ளவு சுலபமில்லேன்னு இப்பத் தெரியுதா...? அன்னைக்கு நான் வண்டியை இழந்து தவிச்சேன். இன் னைக்கு நீ குடிசையை இழந்து தவிக்கறே...! கணக்கு சரியாப் போச்சு'' என்றான் நாகராஜன் ஏளன மாக.

வெளியே ஓடி வந்த மணிமாறன், "அடப்பாவி, இது உன்னுடைய வேலைதானா? உன் வண்டியும், மாடும் வெள்ளத்துல பலியானதற்கு நான்தான் காரணம்னு இன்னுமா நெனச்சுட்டு இருக்கே?" என்று கண்ணீருக்கிடையே கேட்டான்.

நாகராஜன் அதற்குப் பதில் சொல்ல வில்லை. அவன் மணிமாறனை உற்றுப் பார்த்து அதிகாரக் குரலில், "டேய், இது மட்டுமில்ல, நாளை பொழுது விடியறதுக்குள்ள இந்த ஊரை விட்டுப் போயிடணும்... இது நம்ம தலைவருடைய கண்டிப்பான கட்டளை. எங்கேயாவது போய் உன் வண்டியையும், மாட்டையும் வச்சுப் பொழச்சுக்க" என்றான்.

இதுவெல்லாம் பாஞ்சாவின் வேலைதான் என்பது மணிமாற னுக்குப் புரிந்தது. துக்கத்தையும் மீறி ஆத்திரம் அவன் மனதுக்குள் பரவிப் படர ஆரம்பித்தது. "இந்த ஊரை விட்டு நான் எங்கேயும் போக மாட் டேன்... பாஞ்சா என்ன செய்துடு வான்னு பார்க்கிறேன்..." என்று நாகராஜனைப் பார்த்துச் சீறினான்.

நாகராஜன் அவனைப் பரிதாப மாகப் பார்த்தான். "டேய், இந்த ஊரை விட்டு நீ போகாட்டி, உன் குடிசைக்கு ஏற்பட்ட கதிதான் உனக் கும் ஏற்படும். பாஞ்சாவைக் கோபப் படுத்திட்டு, இந்த ஊருக்குள்ள யாரும் வாழ முடியாதுன்னு உனக்குத் தெரியு மில்லை?" என்று எச்சரிக்கும் தொனி யில் கேட்டான்.

மணிமாறனின் கோபம் ஆவேசமாக உருவெடுத்தது. "போடா, பாஞ்சா என்ன செய்துடுவான்.? எங்க அப்பா வைக் கொன்ன மாதிரி என்னையும் கொல்லுவான். அவ்வளவு தானே? அதோப் பாரு, அந்த இடிஞ்ச மண்டபத்துலத்தான், இனி நான் ராவும் பகலும் இருப்பேன்... பாஞ் சாவை எப்ப வேணுமானாலும் அங்கே வரச் சொல்லு" என்று குமுறி விட்டு, தன் வண்டியில் பாய்ந்தேறி மண்டபத்தை நோக்கி அதை ஓட்டி னான்.

சற்று நேரம் திகைத்து நின்ற நாக ராஜன் வண்டியின் பின்னாலேயே ஓடி வந்து, "மணிமாறா, இவ்வளவு நாளும் நாம் இரண்டு பேரும் ஒண்ணாப் பழகினதை நெனச்சு உன் நன்மைக்காகச் சொல்றேன்.. தயவு செஞ்சு இந்த ஊரை விட்டுப் போயிடு. பாஞ்சாவோட விளையா டாதே" என்று இரைந்து கத்தினான்.

வண்டியின் வேகத்தை மட்டுப் படுத்தி, அவனைத் திரும்பிப் பார்த்த மணிமாறன், "பாஞ்சா ஒரு நல்ல பாம்புன்னு எனக்குத் தெரியும்.. நானா வது பாம்புப் புற்றுக்கு வெளியே இருக்கேன். நீ அந்த பாம்போடேயே உறவாடி புற்றுக்குள் ளேயே இருக்கே... அது உன்னைக் கடிக்காம முதல்ல பார்த்துக்கோ" என்றான் சத்தமாக.

நாகராஜனின் கால்கள் தானாக நின்றன. வண்டி அவனை விட்டு விலகிப் போயிற்று. மணிமாறனின் துணிச்சலும், பிடிவாதமும் அவனை வியப்படைய வைத்தன.

பாஞ்சாவின் பகையை இப்படி வளர்த்துக் கொள்கிறானே மணி மாறன். இது எதில் போய் முடியுமோ என்று அவன் கலங்கினான்.

(வளரும்)


மாயமாகும் வைடமின் 'சி'!


எலுமிச்சைப் பழ ரசமோ அல்லது ஆரஞ்சுப் பழ ரசமோ பிழிந்து, நெடுநேரம் குடிக்காமல் வைத்துவிட்டால் அதில் இருக்கும் வைட்டமின் 'சி' மாயமாய் மறைந்துவிடும்!

நாகை. கே. ரவி. கோவை - 18,

அற்புத மேஜை! அதிசயக் கழுதை!


கதை: ஆனந்தி
கார்ட்டூன்: உமாபதி




மாலையில்...
வயிறு நிறைய புல் மேய்ந்தாயா?
புல்லை நன்கு தின்றேன்! வீடு திரும்புகிறேன்!
வீடு திரும்பி ஆட்டைக் கொல்லையில் கட்டினான் அப்துல்...
என்ன வருத்தமாயிருக்கே?
காதரிடம் ஆடு கண்ணீர் விட்டது...
பசிக்கு ஒரு புல்லும் இல்லை! புசிக்க ஒரு இலையும் இல்லை!
அப்துல் அதிர்ச்சி அடைந்தான்...
அப்பா! ஆடு பொய் சொல்லுது! இது கொழு கொழு ஆடு மட்டுமில்லை, கொழுப்பேறிய ஆடு!
காதர், மகனை நம்பாமல்...
உனக்குத் தாண்டா கொழுப்பு! நாள் முழுக்கத் தூங்கி விட்டு வந்திருக்கே! ஆடு மேய்க்கக் கூட லாயக்கில்லை!



அப்துல் வீட்டை விட்டே விரட்டப் பட்டான்...
போ! போ! எங்கயாவது கூலி வேலை செய்து பிழைச்சுக்க! இங்கே உனக்குச் சோறு கிடையாது!
மறுநாள் காதர் இரண்டாவது மகனை அழைத்து...
ரஹீம்! நேற்று நம் ஆடு பட்டினி. இன்னைக்காவது சரியான இடத்துக்கு அழைத்துப் போ!..
ஆட்டை மேய விட்டு ரஹீம் குழல் வாசித்துக் கொண்டிருந்தான்.
கைகள் தேயத் தேய துணி மடிப்பதை விட ஆடு மேய்ப்பது எவ்வளவோ சுலபம்!
மாலையில்..
மேய்ந்தது போதுமா?
காய்ந்த வயிறு நிரம்ப மேய்ந்தேன், வீடு திரும்பு!
ஆடு துள்ளி ஓட..
மெதுவா! மெதுவா! இரண்டு பேரும் சேர்ந்து போகலாம். இல்லாட்டா அப்பா கோபிப்பார்!


ரஹீம் ஆட்டைக் கட்டினான்...
இன்றைக்காவது வயிறார உண்டாயா?
ஆடு பொய்க் கண்ணீர் வடித்தது..
முட்கள் நிறைந்த புதர்களில் பர்கள் நோகக் கடித்தேன்! வயிறும் நிரம்பவில்லை; பசியும் ஆறவில்லை!
காதருக்குக் கோபம்...
ஏன்டா ரஹீம், முள் புதர்களிலா ஆட்டை மேய விடுவது?...
அது பொய் சொல்லுது! நல்லாத்தான் மேய்ஞ்சுது...
காதர் மகனை நம்பாமல்..
எதிர்த்துப் பேசறியா? போடா வெளியே! உருப்படாத பயலே!
மறுநாள் காதர் கடைசி மகனை அழைத்து..
அபு! நீ நல்ல பையன்.. நீயாவது ஆட்டைச் சரியாக மேய்த்து வா!
ஆகட்டும், அப்பா!



அபு ஒரு தோப்புக்குள் ஆட்டை ஓட்டிக் கொண்டு போனான்..
இந்த ஆட்டினால் எவ்வளவு கஷ்டம்?..
ஏய் ஆடு! நிறையக் கிளை-களை ஒடித்துப் போடுகிறேன், சாப்பிடு!
போதுமா? வீட்டுக்குப் போய்க் குறை சொல்லாதே...
குழையும் வயிற்றுப் பசியார தழைகள் தின்றேன் மனமார!
ஆனால் வீடு திரும்பிய பிறகு...
எட்டா உயரக் கிளைகளில் கிட்டா தழைகள் சிரித்தன. எம்பி எம்பிக் குதித்தும் கும்பி நிறையவில்லை!
காதர் கோபம் அடைந்து...
போடா. வெளியே!
இதென்ன ஆடு சொன்னதைக் கேட்டு பிள்ளைகளைத் துரத்திட்டீங்களே!



காதர் மனைவியிடம்...
கவலைப் படாதே! மூனு பேரும் சோம்பேறிகளாகிக் கொண்டிருந் தார்கள். உலக அனுபவம் பெற்று கெட்டிக்காரர்களாகத் திரும்புவார்கள்.
முதல் பிள்ளை அப்துல், கட்டிட வேலை செய்தான். மேஸ்திரி...
நல்லா உழைக் கிறியே! நல்ல பையன் நீ!
இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு..
அம்மாவைப் பார்க்க ஆசையா இருக்கு; போய் வரேன்..
உன்னாலே எனக்கும் நல்ல பேரு..
மேஸ்திரி அப்துலைத் தன் வீட்டுக்கு அழைத்துப் போனான்..
வா, விருந்து சாப்பிட்டு விட்டுப் போகலாம்!
இருவரும் மேஜை முன் அமர்ந்தனர்.
நல்ல உணவைப் படைத்திடு, எங்கள் பசியைப் போக்கிடு!



மறுகணம் மேஜையில் அறுசுவை விருந்து! அப்துல் வியக்க...
முன் காலத்தில் என் தந்தை ஒரு பூதத்துக்கு உதவி செய்தார். அந்தப் பூதம் அவருக்குப் பரிசளித்த மேஜை இது!
அப்துல் புறப்பட்டான்...
இந்தச் சிறு மேஜை உனக்கு என் பரிசு!
போய் வருகிறேன்!
தன் அதிர்ஷ்டத்தை எண்ணி மகிழ்ந்து, ஊர் நோக்கிச் சென்ற அப்துல்...
இராத் தங்க இடம் கிடைக்குமா?
சத்திர முதலாளி...
அறை ஏதும் காலி இல்லை; திண்ணையில் படுக்கலாம். ஆனால் உணவெல்லாம் தீர்ந்து விட்டது!
பாதகமில்லை; இன்னும் சாப்பிடாதவர்களை அழைத்து வாருங்கள்; நான் உணவு படைக்கிறேன்!



அப்துலின் மந்திர மேஜை அனைவருக்-கும் தட்டுத் தட்டாக உணவு வகைகள் அளிக்க..
என்ன ஆச்சர்யம்!
என்ன அழகு!
இன்னும் கொஞ்சம்!
ரொளமாய் இருக்கு!
அப்துல் இரவு தூங்கும் போது சத்திரத்தின் முதலாளி...
மந்திர மேஜையை எடுத்துக் கொண்டு, சாதா மேஜையை வைத்து விடுவோம்!
காலையில்...
அடடா! ரொம்ப நேரம் தூங்கிட்டேன் போலிருக்கே!...
மாறிய மேஜையுடன் பயணமானான் அப்துல்..
சாயந்திரமாவது ஊர் போய்ச் சேர்ந்துடணும்.
அப்துலை வரவேற்ற தந்தை..
வாப்பா, எங்களுக்குச் சதா உன் நினைவு தான்.. என்ன தொழில் கத்துக் கிட்டே 2
கட்டிடக் கலை!
பேஷ்!


நீ திரும்பி வந்ததைக் கொண்டாட இன்று இரவு நண்பர்களுக்கு விருந்து!
அம்மா, நீ சமைக்காதே, எல்லாம் நான் பார்த்துக்கறேன்!
அழைப்பை ஏற்றுப் பலரும் வர, அப்துல்...
நல்ல உணவைப் படைத்திடு; எங்கள் பசியைப் போக்கிடு;
இது என்ன அசட்டுத்தனம்...?
இது மந்திர மேஜை; இப்போ உணவு வந்துடும்..
ஆனால் ஒன்றும் வராது போக..
மந்திர மேஜையைத் திருடிக்கொண்டு சாதா மேஜையை யாரோ என் தலையில் கட்டியிருக்கிறார்கள்!
அப்துல் அவமானமடைந்தான்...
ஹா ஹா ஹா!
ஹா ஹா ஹா!
மந்திர மேஜையாம்; உணவு தருமாம்! ஊரை ஏமாற்றுகிறான்!



அப்துல் மறுபடி கட்டிட வேலைக்குப் போனான்... காதர்
மற்ற ரெண்டு புள்ளைங்களா வந்து உருப்படறாங்களா, பார்க்கலாம்!
ரஹீம் ஒரு கரும்பாலையில் சேர்ந்து...
கடுமையாக உழைத்து வெல்லம் காய்ச்சக் கற்றுக் கொண்டு விட்டேன்!
சில ஆண்டுகள் சென்று...
முதலாளி, என் தாய் தந்தையரைப் பார்க்க ஆசையா இருக்கு...
நீ நல்ல உழைப்பாளி.. உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு...
அதனால் என் கழுதையை உனக்குப் பரிசளிக்கிறேன்!
ஆ! கழுதையா? எனக்கு எதுக்கு?
இது சிரிக்கும் கழுதை, காசு கொடுக்கும்!
மந்த புத்திக் கழுதையே, தங்கக் காசு கொடுத்திடு!
ஹா.. ஹா. ஹா!
அட, என்ன ஆச்சர்யம்!


கழுதையை ஓட்டிக் கொண்டு சந்தோஷமாகச் சென்றான் ரஹீம்
அதோ ஒரு சத்திரம்... இராத் தங்கி விட்டுப் பயணத்தைத் தொடரலாம்...
அப்துல் தங்கிய அதே சத்திரம் என்று அறியாமல்...
இந்தக் கழுதைக்குத் தங்க நல்ல இடம் கொடுங்கள்.. அதன் அருகிலேயே நானும் இருந்து கொள்வேன்..
சத்திர முதலாளி மனைவியிடம்...
வேடிக்கையைக் கேளு! தங்கக் காசு கொடுத்து கழுதைக்குத் தங்க இடம் கேட்கிறான்..
இதில் ஏதோ மர்மம் இருக்கு. மரமேஜை உணவு தரவில்லையா... அது போல்...
பேசிப் பார்க்கிறேன்..
ரஹீம் சட்டைப் பையில் பணம் தேடினான்...
சாப்பாட்டுக்கு, புல்கட்டுக்கு அறைக்கு எல்லாம் சேர்த்து எட்டு பொற்காசுகளா?... மூணு காசு குறையுதே? சரி...


மந்த புத்திக் கழுதையே, தங்கக் காசு கொடுத்திடு!
ஹா..ஹா..ஹா!
என்ன ஆச்சர்யம்!
அன்றிரவு...
கழுதைக்குக் கழுதை
என்ன அதிசயம்
தெரியப் போகிறது
மறு நாள் காலை...
அடடா! எழுந்து ரொம்ப நாழியாகி இருக்கும்! சீக்கிரம் புறப்படறேன்!
கழுதையை ஓட்டிக் கொண்டு போனான் ரஹீம்...
அதோ, ரஹீம் வருகிறான்!
தாய் தந்தையர் மகிழ்ச்சியோ
வரவேற்று..
என்ன கற்றுக் கொண்டாய்?
வெல்லம் காய்ச்சி!.. முதலாளி சந்தோஷப் பட்டுக் கழுதை பரிசளித்தார்!


போயும் போயும் கழுதையைத் தான் கொடுத்தாரா?
ஹூம், உங்களுக்கு இதன் மகிமை தெரியாது.. இதோ பாருங்க...
மந்த புத்திக் கழுதையே! தங்கக் காசு கொடுத்திடு!
கழுதையாவது, காசு கொடுக்கவாவது?... முட்டாள்!
கழுதை சிரிக்கவும் இல்லை; காசு கொடுக்கவும் இல்லை..
உங்களுக்கு நிறைய பொற்காசுகள் தர எண்ணினேன்....
போடா, போ! மடையா! போய் வேலையைப் பாரு, போ!
மூன்றாவது பிள்ளை அபு..
தச்சு வேலையில் நீ நல்ல தேர்ச்சி பெற்று விட்டாய்...
ஐயா! நான் வீட்டை விட்டுப் புறப்பட்டு நாலு ஆண்டுகள் ஆகின்றன.. பெற்றோரைப் பார்க்க ஆசையாயிருக்கு..


போய் வா.. இந்தா உனக்கு ஒரு பரிசு...
இந்தப் பைக்குள் ஒரு தடி இருக் கே... தெரியுதா?
யாராவது உனக்கு கெடுதல் செய்தால் அடி உனக்குப் பாது காப்புக் கொடுக் கும்... எப்படி என்று சொல்லி தருகிறேன்...
பையை எடுத்துக் கொண்டு புறப் பட்ட அபு, தன் சகோதரர்கள் தங்கிய அதே சத்திரத்துக்கு வந்து சேர்ந்தான்.
இராத் தங்க இடம் கிடைக் குமா?
ஓ!
இரவு உணவுக்குப் பிறகு அபு..
சற்றுக் காலார நடந்து விட்டு வருகிறேன்..
சரி
அப்போது...
அட! ரஹீம்! அப்துல்! நீங்களா? எங்கே இந்தப் பக்கம்?
அடடே! அபு!


சகோதரர்கள் நடந்ததை யெல்லாம் சொல்லி, வருந்தி...
ஒரு சாதாரண சத்திரம், அரண்மனை போல் மாறிய அதிசயத்தைப் பார்க்க வந்தோம்..
அபு அவர்களைத் தேற்றி..
கவலைப் படாதீர்கள், இங்கேயே இருங்கள்; இன்னும் பெரிய அதிசயத்தைப் பார்க்கலாம்..!
அபு சத்திரத்துக்குத் திரும்பினான். சத்திர முதலாளி...
பையை ஏன் தூக்கிட்டு அலையறீங்க..
ஆ! இது அற்புதப் பை! யாரிடமும் தர முடியாது... எங்கேயும் வைக்க முடியாது!
முதலாளி மனைவியிடம்..
அற்புதப் பையாம்!
மேஜை உணவு படைக்குது! கழுதை காசு கொடுக்குது! பை என்ன தருமோ? மாற்ற வேண்டியது தானே?
இரவு அபு உறங்குவது போல் பாசாங்கு செய்ய...
சாதா பையை வெச்சுட்டு மந்திரப் பையை எடுத்துக்கறேன்..



தலையணை அடியிலிருந்து சந்திர முதலாளி பையை உருவப் போகும் போது, ஐயோ...
கழியே, வெளியே வந்திடு பழியை நன்றாய் வாங்கிடு!
பையிலிருந்து வெளிப்பட்ட தடி, சந்திர முதலாளியை வாங்கு வாங்கு என்று வாங்க...
ஐயோ! ஐயோ! விட்டுடு! விட்டுடு!
கூச்சல் கேட்டு வந்த அவன் மனைவியையும் தடி தாக்கியது!
வேண்டாம்! ஐயோ! திருடினதை யெல்லாம் திருப்பித் தந்துடறோம்! நிறுத்து! நிறுத்து!
சகோதரர்கள் வீடு திரும்ப... அன்றிரவு அப்துல்...
அப்துலின் விருந்து பிரமாதம்!
ரஹீம் அனைவருக்கும் பொற்காசு கொடுத்தனுப்பினான்...
அபு, நீ என்ன கொண்டு வந்திருக்கே!
அது இப்ப வேண்டாம்! சமயம் வரும் போது சொல்றேன்!



GOKULAM, GUINDY, MADRAS - 600 032.

பிருந்தாவனக் கவியரங்கம்



என்ன படிக்கப் போகிறாய்?

மருத்துவக் கல்வி விரும்பிப் படித்தால்
மருத்துவர் ஆகலாம்
மக்களை வருத்தும்
பிணிகளைப் போக்கி
நற்பணி ஆற்றலாம்!
பொறியியல் கல்வி விரும்பிப் படித்தால்
பொறியாளர் ஆகலாம்
புதியன செய்து பிறந்த பூமிக்கு
அரும்பணி ஆற்றலாம்!

விருப்பம் இருந்தால் சட்டம் படித்து
வழக்குரைஞர் ஆகலாம்
வன்மை யாக நீதிக் காக
வாதம் புரியலாம்!
பொறுப்பு மிக்க பணியைப் புரிய
நிர்வாகம் படிக்கலாம்
பாப்பா நீயும் விரும்பி என்ன
படிக்கப் போகிறாய்?

- புலேந்திரன்.

ஐ.நா.மாமா வணக்கம்


வணக்கம், வணக்கம்
ஐ. நா. மாமா
வாண்டு எழுதும்
கடிதம் மாமா.

அணுக்குண்டு சண்டை
வேண்டாம் மாமா
அழகிய உலகம்
வேண்டும் மாமா.

சிரித்து வாழ
வைப்பீர் மாமா
சிறுவர் உலகம்
அற்புதம் மாமா.

கண்ணில் மகிழ்ச்சி
வேண்டும் மாமா
கடவுளாய்க் காப்பீர்
ஐ. நா. மாமா

- வரகூர். நாரண
மணிவண்ணன்.



ஒரே குலம்

குண்டு போட்டு உயிர்களைக்
கொள்ள வேண்டாம் வேண்டாமே!
சண்டை யின்றி அனைவரும்
சகோதர ராய் வாழ்வோமே!
பூமி வளம் போகுமே!
பொருளும் நாச மாகுமே!
மனிதர் வாழும் இடமெல்லாம்
மரணம் உறுதி யாகுமே.
என்றுமே நாம் ஒற்றுமை
எண்ணம் மனதில் கொள்ளுவோ
உறுதி யுடன் உலகெல்லாம்
ஒரே குலமென் றெண்ணுவோம்!

- தேனி. முருகே



மாதன் கிணறு

மூலம்: கன்னடம்
தமிழில்: தி. அருள்மணி

கர்நாடக மாநிலத்தில் குன்னிகால் என்ற ஊரில் சுப்பா சாஸ்திரி என்ற ஓர் ஆசிரியர் வாழ்ந்து வந்தார். அவர் தன்னுடைய வீட்டிலேயே ஒரு பள்ளியை நடத்தி வந்தார். அந்தப் பள்ளியில் பல புத்திசாலி மாணவர்கள் இருந்தனர். அவர்களுடன் கூடவே ஒருசில மக்கு மாணவர்களும் இருந்தனர். ஒருநாள் படிப்பில் மக்கான இரண்டு மாணவர்கள் ஆசிரியருக்குக் கோபம் வரும்படி நடந்து கொண்டார்கள். மனம் வருந்திய ஆசிரியர், ''கழுதையைக் கூட மனிதனாக மாற்றிக் கூடிய திறமை படைத்த நான், உங்கள் விஷயத்தில் தோற்றுப் போனேனே. என் திறமை பயனின்றிப் போனதே!'' என்று நொந்து போய்க் கூறிக் கொண்டார்.

அந்த நேரத்தில் சலவைத் தொழில் செய்யும் மாதன் என்பவன் ஆசிரியர் வீட்டிற்கு அருகாமையில் போய்க் கொண்டிருந்தான். தற்செயலாக அவன் காதில் ஆசிரியர், ''நான் கழுதையைக் கூட மனிதனாக மாற்றுபவன்'' என்று கூறியது விழுந்தது.

மாதனுக்குக் குழந்தைகள் கிடையாது. அவனிடம் நிறையக் கழுதைகள் இருந்தன. அவன் வீட்டிற்கு ஓடித் தனது மனைவியிடம், ''ஆசிரியர் சாதாரணமானவர் இல்லை. கழுதையைக் கூட மனிதனாக மாற்றி விடுபவர். அவர் தானே அப்படிச் சொன்னதை என் காதாலேயே நான் கேட்டேன்'' என்று சொன்னான்.

''நமக்கோ குழந்தைகள் இல்லை. நம்மிடம் உள்ள சிறந்த கழுதையான முத்துவை ஆசிரியரிடம் அழைத்துச் செல்வோம். மனிதனாய் மாற்றித் தரச் சொல்லும்படி கெஞ்சுவோம்'' என்று மாதனின் மனைவி மைதிலி கூறினாள். மாதனும் ஒப்புக் கொண்டான்.

அடுத்த நாள் காலை, மாதன் ஆசிரியரின் வீட்டிற்குச் சென்று அவரை வணங்கினான். ''ஆசிரியரே... எங்களுக்குக் குழந்தைகள் இல்லை. என்னிடம் நிறையக் கழுதைகள் உள்ளன. அதில் சிறந்த கழுதை ஒன்றை மனித





னாக மாற்றித் தருவீரா? நானும், எனது மனைவியும் இதை ஒரு பெரும் பாக்கியமாகக் கருதுவோம்,'' என்று மாதன் வேண்டிக் கொண்டான்.

ஆசிரியர் மாதனின் வேண்டுகோளைக் கேட்டு ஆச்சரியப்பட்டார். ''அறிவை நீ இழந்து விட்டாயா? எங்கேயாவது ஒரு கழுதையை மனிதனாக மாற்ற முடியுமா?'' என்று கேட்டார்.

''உங்களால் மாற்ற முடியும் என்று எனக்கு நன்றாகத் தெரியும். நீங்களே கூறியதை நான் கேட்டேன். பொய் கூறி நீங்கள் என்னைத் திருப்பி அனுப்பப் பார்க்கிறீர்கள். தயவு செய்து எங்களுக்கு உதவி செய்யுங்கள்'' என்று மாதன் மன்றாடினான்.

மாதன் வேண்டுவது இயற்கையானது அல்ல. ஒரு கழுதையை மனிதனாக மாற்றுவது என்பது மனிதனால் செய்யக்கூடிய செயல் அல்ல என்பதை ஆசிரியர் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். ஆனால் மாதன் எதையும் கேட்பதாக இல்லை. எனவே, மாதனின் முட்டாள்தனத்தைப் பயன்படுத்தியே அவனை மாற்ற ஆசிரியர் ஒரு திட்டம் வகுத்தார்.

சிறிது நேரம் யோசித்து விட்டு, ''மாதவா! வழக்கமாக, இம் மாதிரியான வேலைகளை நான் செய்வது இல்லை. ஆனாலும் நீ ஒரே பிடிவாதமாக இருப்பதால் சம்மதிக்கிறேன். ஆனால், இதை நீ யாரிடமும் வெளியே கூறக் கூடாது. கூறினால் உன் மண்டை வெடித்து சுக்கல் சுக்கலாகி விடும். கழுதையையும் தட்சிணையாக ஆயிரம் ரூபாயையும் கொண்டு வந்து கொடு. ஆறு மாதத்தில் உன் கழுதையை மனிதனாக மாற்றித் தருகிறேன்'' என்று கூறினார்.

மாதன் கழுதையும், பணத்தையும் அடுத்த நாள் ஆசிரியரிடம் கொண்டு வந்து கொடுத்தான். ஆசிரியர் கழுதையை வராந்தாவில் கட்டச் சொன்னார். ''இது ஒரு அழகான கழுதை. இந்தக் கழுதையிலிருந்து உருவாகும் மனிதன் உண்மையிலேயே



சிறந்தவனாக இருப்பான். நீ போய் ஆறு மாதம் கழித்து வா'' என்று ஆசிரியர் மாதனை அனுப்பி வைத்தார்.

மாதன் போனதும், ஆசிரியர் தனது மாணவர்களில் ஒருவனை அழைத்து, கழுதையை இரகசியமான ஓர் இடத்தில் கட்டி வைக்கும்படி கூறினார்.

ஆறு மாதங்கள் கடந்தன. சலவைத் தொழிலாளி மாதன், மனதில் மிக்க மகிழ்ச்சியுடன் ஆசிரியரைப் பார்க்கச் சென்றான். சாஸ்திரி அன்புடன் அவனை விசாரித்தார். ''நீ எப்படி இருக்கிறாய்? முன்னதாகவே நீ வருவாய் என்று எதிர்பார்த்தேன். உன் கழுதை முத்து சிறந்த மனிதனாக மாறி விட்டான். சிந்தாமணி என்ற ஊரில் நாகப்பன் என்ற பெயருடன் இப்பொழுது இருக்கிறான். நீயே அங்கு போய் அவனைப் பார்ப்பது நல்லது'' என்றார்.

''நான் அவனைச் சந்திக்கும் போது, அவன் என்னை அடையாளம் கண்டுகொள்வானா?'' என மாதன் வினவினான்.

''நிச்சயமாக, அடையாளம் கண்டு கொள்வான்'' என்ற ஆசிரியர் ''ஆனாலும் நீ எதற்கும் முத்து கழுதையாக உன்னிடம் வாழ்ந்த போது, அவனுக்குத் தானியங்கள் சாப்பிடக் கொடுக்கும் கோணிப் பையை எடுத்துச் செல். உன்னை மறந்தாலும், அவன் தானியம் உண்ணும் கோணிப் பையை மறந்திருக்கவே மாட்டான்'' என்றார். மாதன் வீட்டிற்கு வேகமாகச் சென்று மனைவியிடம் இந்த நல்ல செய்தியைக் கூறினான். அடுத்த நாள் காலை சிந்தாமணி கிராமத்திற்குச் சென்று முத்துவை வீட்டிற்கு அழைத்து வருவதாகச் சொன்னான்.

அடுத்த நாள் அதிகாலையில் மாதன் சிந்தாமணிக்குப் பிரயாணமானான். கிராமத்தை அடைந்த போது கிராமப் பஞ்சாயத்துக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. நாகப்பன் தான் தலைமை வகித்துத் தீர்ப்பு வழங்கிக் கொண்டிருந்தான்.

முதல் வழக்கு இரண்டு கிராமத்தார்களுக்கு இடையேயான பிரச்னை. மிகவும் கவனத்துடன் வழக்கைக் கேட்டான் நாகப்பன். பிறகு தன் தீர்ப்பை வழங்கினான். தன் கழுதை முத்து நாகப்பனாகி இத்தனை அற்புதமாகத் தீர்ப்பு வழங்கியுள்ளதே என்று மிகவும் பெருமிதம் அடைந்தான் மாதன்.

''ஆசிரியரை சும்மா சொல்லக் கூடாது. அதிபுத்திசாலியான மனிதர் அவர். முத்துவை, நன்கு கல்வி கற்ற அழகான நாகப்பனாக மாற்றியிருக்கிறாரே!'' என்று தனக்குள்ளாகவே புகழ்ந்து கொண்டான் மாதன்.

நாகப்பன் தன்னைப் பார்க்க வேண்டும் என மாதன் நினைத்தான். கூட்டம் நடந்து கொண்டிருந்த இடத்தில் குறுக்கும் நெடுக்குமாக அடிக்கடி போனான். நாகப்பனைப் பார்த்துப் புன்னகை செய்தான்; கைகளை அசைத்தான். நாகப்பன் கண்டு கொள்ளவில்லை. பிறகு கோணிப் பையைப் பற்றி ஆசிரியர் கூறியது நினைவுக்கு வரவே, எப்போதெல்லாம் நாகப்பன் நிமிர்ந்து பார்க்கிறானோ அப்போதெல்லாம் கோணிப் பையை எடுத்து இலேசாக அசைத்துக் காண்பித்துப் புன்முறுவல் பூத்தான் மாதன்.

நாகப்பனுக்கு மாதனின் செய்கைகள் விநோதமாக இருந்தன. என்ன, ஏது என்று அறிந்து கொள்ளும் ஆவலுடன் ஒரு ஆளை மாதனிடம் அனுப்பி வைத்தான். 'அப்பாடா, நாகப்பன் நம்மை அடையாளம் கண்டுகொண்டு விட்டான்' என்று மாதன் நிம்மதி அடைந்தான். அருகே சென்றான்.

நாகப்பன், மாதனைப் பார்த்து, ''நீ யார்? உனக்கு என்ன வேண்டும்? எதற்காக வந்திருக்கிறாய்?'' என்று கேட்டான்.

மாதன் மனமுடைந்து போய்க் கத்தினான். ''உனக்கு நன்றி என்பதே சிறிதும் இல்லை. உன்னுடைய அன்பான எஜமானனைக் கூட நீ மறந்து விட்டாய்! அதுதான் போகட்டும் என்றால், நீ தினமும் தீனி தின்னும் கேழ்வரகுக் கோணிப் பையைக்



கூடவா மறந்து விட்டாய்? நீ பெரிய மனிதன் ஆனதும், உன்னுடைய கடந்த கால வாழ்க்கையை மறந்து விட்டாயா? வா, முத்து! நம் கிராமத்திற்குத் திரும்புவோம். மைதிலி வீட்டில் நமக்காக ஆவலுடன் காத்திருப்பாள்.''

மாதன் சரியான ஒரு கோமாளி என்று முடிவு கட்டினான் நாகப்பன். மாதனோ அன்புடன் பேச முனைந்தான். ஆனால், இந்த முயற்சியும் கோபத்தில்தான் போய் முடிந்தது.

முடிவில், நாகப்பன் கிராம பஞ்சாயத்து உறுப்பினர்களிடம் ''இந்தக் கோமாளியைத் தூக்கி வெளியே போடுங்கள்'' என்று கட்டளையிட்டான்.

மாதன் எல்லோரிடமும், ''இவன் கடந்த காலத்தில் என் வீட்டில் ஒரு முட்டாள் கழுதையாக இருந்தவன். நான்தான் ஆசிரியரிடம் சொல்லி இவனை மனிதனாக்கினேன். இந்த நன்றி கெட்டதனத்திற்கு நிச்சயமாய் இவன் பிற்காலத்தில் வருத்தப்படுவான்'' என்று கத்திக் கொண்டே வெளியேறினான்.

மாதன் கிராமத்திற்குத் திரும்பி, ஆசிரியரிடம் நடந்த கதை அனைத்தையும் சொன்னான். ''நான் அந்த நன்றிகெட்ட முத்துக் கழுதைக்குத் தகுந்த பாடம் கற்பிக்க விரும்புகிறேன். எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தரத் தயாராக உள்ளேன். மறுபடி அவனைக் கழுதையாக மாற்றுங்கள்'' என்று சொன்னான்.

ஆசிரியர் தனக்குள்ளாகவே சிரித்துக் கொண்டார். மீண்டும் நாகப்பனைக் கழுதையாக மாற்ற தட்சிணையாக ஆயிரம் ரூபாய் கேட்டார். மாதன் இணங்கினான்.

ஒரு வாரம் கழித்து மாதன் ஆசிரியர் வீட்டிற்குப் பணத்துடன் சென்றான். அதே நேரத்தில் மறைவிடத்தில் வைக்கப்பட்டிருந்த கழுதையை ஆசிரியர் மாதனிடம் ஒப்படைத்தார்.

மாதன் கழுதையைப் பார்த்தான்.

''குறைந்தபட்சம் இப்போதாவது என்னை அடையாளம் தெரிகிறதா? என் ஆசையால்; ஆசிரியரின் முயற்சியால் நீ ஒரு பெரிய மனிதனாக இருந்தாய். உனது நன்றிகெட்டத்தனத்தால் இப்போது மீண்டும் கழுதையாகி விட்டாய். இனிமே, நீ பழையபடி எனக்குக் கட்டுப்பட்டாக வேண்டும்'' என்று கழுதையிடம் பேசி அதை வீட்டுக்கு இழுத்துக் கொண்டு போனான்.

மாதன் கொடுத்த தட்சிணையைக் கொண்டு ஆசிரியர் கிராமத்தில் மக்கள் பயனடைய ஒரு கிணறு வெட்டிக் கொடுத்தார். அதற்குப் பெயர் மாதன் கிணறு.



புன்னகை

அன்பு காட்டிப் புன்னகை
அள்ளி அள்ளி வழங்கினால்
என்றும் எங்கும் யாவரும்
இனிமை யாக வாழலாம்

கோபம் கொண்டு தீமைகள்
கூட்டி வைத்துக் கொள்வது
சாபம் சேர்க்கும் என்பதால்
சங்க டங்கள் வந்திடும்


புன்சி ரிப்பின் மேன்மையை
புரிந்து கொண்டால் யாவரும்
இன்னல் இன்றி உலகிலே
இனிமை யாக வாழலாம்

கேடு செய்ய எண்ணுவோர்
குறிப்ப றிந்து பழகினால்
நாடு போற்றச் செய்திடும்
நன்மை கோடி தந்திடும்

புன்சி ரிப்பின் உயர்வினை
போற்றும் இந்த உலகிலே
மேன்மை தேடி வந்திட
மெச்சும் வண்ணம் வாழலாம்!

- அழகனார்.

சோளக்கொல்லை பொம்மை



புதுச் சட்டை வேண்டாமாம்
போட்டுக் கொள்ள
பூதம்போல் இருந்தாலும்
புகைச்சல் இல்லை!
இது வேண்டாம் அது வேண்டாம்
என்னும் கோபம்
இறுமாப்பு அழிசாட்டம்
என்றும் இல்லை!

தின்பதற்கு என்றொன்றும்
செய்ய வேண்டாம்
தேன்பாகு இடியாப்பம்
தேட வேண்டாம்!
நன்றாகப் பகல் இரவாய்
நாயாய் காத்து
நகராமல் தவறாமல்
நாளும் காவல்!

பேசாமல் பதறாமல்
பேய் போல் நின்று
பிஞ்சாகும் கதிர்மணியை
பிய்த்து வீழ்த்த
கூசாமல் ஓடிவரும்
குருவிக் கெல்லாம்
கொடும்பாவி யாய் நின்று
கூற்ற னாகும்!

- அழகனார்.



மயிலாசனத்தின் மர்மம்

ஹரிசிங்



பொக்கிஷ அதிகாரி ஹம்ஜத் கான் குனிந்து சலாம் இட்டுப் பணிவாக ஒதுங்கி நின்றார்.

''என்ன விசேஷம்?'' என்ற கேள்விக் குறியோடு அவரைப் பார்த்தார் பேரரசர் ஷாஜஹான்.

''பாதுஷா அவர்களே, முகாலய சாம்ராஜ்யத்தின் கஜானா நிரம்பி வழிகிறது. நாட்டில் திறமையான நிர்வாகம் நடப்பதால், வரி வசூல் ஒழுங்காக நடக்கிறது. நட்பை வேண்டியும், வாணிபம் செய்ய அனுமதி கேட்டும் கடல் கடந்த நாடுகளிலிருந்து வரும் அயல்நாட்டினர் பரிசுப் பொருட்களையும், காணிக்கைகளையும் கொண்டு வந்து குவிக்கின்றனர். உலகத்தில் எந்த ஒரு அரசரிடமும் இல்லாத ஏராளமான நவரத்தினங்களும் அரிய மணிகளும் மொகாலயர் பொக்கிஷத்தில் சிறைப்பட்டுப் பெருமையூட்டி வருகின்றன!''

ஷாஜஹான் பெருமகிழ்ச்சியோடு பொக்கிஷ அதிகாரியை நோக்கினார். ஹம்ஜத்கான் தொடர்ந்தார்.

''மொகலே ஆஜாம் என்ற பட்டப் பெயர் பெற்ற தங்கள் அருமைப் பாட்டனார் அக்பர் பாதுஷாவுக்குக் கூடக் கிடைக்காத பெருமை இது. இவ்வளவுக்கும் தாஜ்மஹல் கட்டும் பணிக்காக ஏராளமான செல்வம் தினமும் செலவிடப்பட்டு வருகிறது. அப்படி இருந்தும் அரசாங்க பொக்கிஷம் நிறைந்து வழிகிறது. இனிமேல் சேர்கின்ற செல்வத்தைக் கணக்கிட்டுப் பாதுகாப்பாக வைக்க, பொக்கிஷ அறையில் இடமே கிடையாது. ஒன்று, குவிந்து கிடக்கும் தங்க, வெள்ளி, நவரத்தினக் கற்களுக்கு பாதுஷா அவர்கள் ஏதாவது செலவு வைக்க வேண்டும். இல்லை, புதிதாக ஒரு பொக்கிஷ நிலவறையை உடனடியாகக் கட்டித் தர உத்தரவிட வேண்டும்.''

''பாட்டனார் அக்பர் பாதுஷாவின் ஆட்சிக் காலத்தில் கூட நிகழாத அற்புதம் உங்கள் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்துள்ளது. எந்தப் பேரரசுகள் காலத்திலும் இப்படிப்பட்ட ஓர் அற்புதம் நிகழ்ந்ததில்லை. மெகாலய கஜானா நிரம்பி வழிந்த ஒரு செழிப்பான காலத்தில், பொக்கிஷ அதிகாரியாக இருக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருப்பதை எண்ணி நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.''

ஷாஜஹானைப் பணிந்து, மீண்டும் வந்து காண்பதாக உத்தரவு பெற்றுச் சென்றார் பொக்கிஷ அதிகாரி

ஹம்ஜத்கான்.

''எந்தப் பேரரசர்கள் காலத்திலும் நிகழாத அற்புத நிகழ்ச்சி இது என்றால், இதைக் குறிப்பிடும் வகையில் ஏதாவது செய்ய வேண்டும். அதுவும் கூட மொகாலயர்களின் பெருமையை மேலும் உயர்த்திக் காட்டுவதாக அமைய வேண்டும்'' என்று எண்ணினார் ஷாஜஹான். முக்கிய அதிகாரிகளை உடனே அழைத்து ஆலோசனை செய்தார். அதன் விளைவுதான் உலகப் புகழ்பெற்ற மயிலாசனத்தை உருவாக்குவது என்ற முடிவு.

கெம்பு, கார்னெட் என்ற உயர் வகை சிவப்பு ரத்தினம், முத்து, வைரம், மரகதம் ஆகிய நவரத்தினங்கள் குவியல் குவியல்களாகப் பெரும் தராசுகளில் நிறுத்து அரண்மனைப்



பொற்கொல்லர் களிடம் தரப்பட்டன. தனி உலைக் களங்கள் அமைக்கப் பட்டன. நூற்று எண்பத்தாறு கை தேர்ந்த கலைஞர்கள், காவலர்களின் தீவிரமான கண்காணிப்பின் கீழ் மயிலாசனத்தை உருவாக்கினார்கள். இரவு பகலாகப் பணிகள் நடந்தன. ஷாஜஹானே அடிக்கடி நேரில் வந்து பார்த்து, வேலைகளை விரைவு படுத்தினார். ஏழு ஆண்டுகள் இடை விடா உழைப்பிற்குப் பிறகு இறுதி யில் ஷாஜஹான் கனவு கண்ட ஒப்பற்ற மயிலாசனம் முழுமை பெற்றது.

உலக அதிசயங்களில் ஒன்றாகும் தகுதி பெற்ற மயிலாசனம் பல சிறப்பு களைப் பெற்றிருந்தது. இதைப் பன்னி ரண்டு மரகதத் தூண்கள் தாங்கி நின்றன. சாய்ந்து கொள்ளும் முதுகுப் பகுதியில் கண்கவர் வேலைப்பாடு களுடன் இரண்டு மயில்கள் ஒன்றை ஒன்று எதிர் திசையில் பார்த்தவண்ணம் வளைந்து நெளிந்து நின்றன. அவற்றின் இடையே வளைந்த கொடிகளுடன் இரத்தின, மரகத, வைர வளையங்கள்



சுழன்றன. மொகலாய மன்னர்களின் பரம்பரைப் பெயர்கள், அதில் பொறிக்கப்பட்டிருந்தன. இறுதியில் ஷாஜஹான் பெயர். இவற்றுக்கு நடுவே, உலகப் புகழ்பெற்ற ஷா வைரம் ஒளி சிந்தியது! இந்த அதிசய வைரத்தை பாரசீக மன்னர் ஷா அப்பாஸ், மொகாலய மன்னர் ஜஹாங்கீருக்குக் காணிக்கையாக அனுப்பியிருந்தார். இந்த அழகு கொஞ்சும் மயிலாசனத்தைப் பன்னிரண்டு மரகதத் தூண்கள் கொண்ட விதான மண்டபம் அடக்கிக் கொண்டு நின்றது.

குட்சி என்ற உருதுக் கவிஞரும், தகரா என்ற பாரசீகக் கவிஞரும் மயிலாசனத்தின் கண்கொள்ளா அழகைக் கவிதைகளில் வடித்துப் பெருமைப் படுத்தினர். மயிலாசனத்தின் அளவில்லாப் பெருமை கவிஞர்களின் பாடல்களால் அயல்நாடுகளுக்குப் பரவியது.

ஒரு சிம்மாசனத்திற்கே இவ்வளவு தங்கம் வெள்ளி நவரத்தினக் கற்களைப் பயன்படுத்தும் அளவுக்கு மொகலாயர்களின் பொக்கிஷம் செல்வச் செழிப்போடு இருந்தது என்றால், அதில் குவிந்து கிடக்கும் மற்ற வகைச் செல்வங்களின் மதிப்பு எவ்வ ளவு இருக்கும் என்று மலைத்தனர் அயல் நாட்டினர். இப்படி மலைத்த வர்களில் முக்கியமானவர் பாரசீகத் தின் பேரரசர் நாதிர் ஷா. மொகலா யச் செல்வங் களைக் கொள்ளையடிக்க வேண்டும் என்ற குறிக்கோளுட னேயே அவர் படையெடுப்புக்குத் திட்டம் தீட்டினார். பஞ்சாபைக் கைப்பற்றிக் கொண்டு முன்னேறிய அவரை யாராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை.

ஷாஜஹான் உருவாக்கிய விலை மதிப்பில்லாத கலைப் பொக்கிஷமான அற்புத மயிலாசனத்தை, நாதிர்ஷா கைப்பற்றி பத்திரமாக பெர்ஷியாவுக்குக் கொண்டு போனார்.

மயிலாசனத்தின் மேல் நாதிர்ஷாவுக்கு அளவிட முடியாத ஆசை. தான் எங்கு சென்றாலும் அதையும் அவர் தன்னோடு தூக்கிச் சென்றார். உணவுக் கூடத்துக்கு, வேட்டைக்கு, உல்லாசப் பொழுதுபோக்குக்கு என்று அவர் எங்கு சென்றாலும் மயிலாசனமும் கூடவே சென்றது! அதைத் தூக்கி வர இருபத்து நான்கு மணி நேரமும் பணியாளர்கள் அதன் கூடவே இருந்தனர்!

மலைவாழ் மக்களான முரட்டுக் கூட்டத்தினர் நாதிர்ஷா மேல் படையெடுத்து வந்தனர். நாதிர்ஷா போர்க்களம் சென்றார். இணை பிரியாத மயிலாசனத்தையும் அவர் தன்னோடு தூக்கிச் சென்றார். எதிர்பாராத விதத்தில் நாதிர்ஷாவின் படைகள் தோற்றன. நாதிர்ஷா போர்க்களத்திலேயே கொல்லப்பட்டார். கலையுள்ளம் இல்லாத மக்களிடம் மயிலாசனம் சிக்கிக் கொண்டது. அவர்கள் அதை உடைத்துப் பங்கு போட்டுக் கொண்டனர்.

நாதிர்ஷாவிற்குப் பிறகு, காட்டு மக்களை விரட்டி, பாரசீக நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றிய முகம்மது ஷா என்ற பாரசீக மன்னருக்கு, திடீரென்று ஏதோ சந்தேகம் தோன்றியது. 'அரிய பொக்கிஷமான மயிலாசனத்தை; எவ்வளவோ பாடுபட்டுக் கைப்பற்றியதை நாதிர்ஷா சர்வசாதாரணமாக அதைத் தான் செல்லும் இடங்களுக்கெல்லாம் உண்மையாகவே கொண்டு சென்றிருப்பாரா!' என்று சந்தேகப்பட்ட அவர், 'ஷாஜஹானின் மயிலாசனத்தை ஒளித்து வைத்து விட்டு, அதைப் போல் போலியான ஒன்றைத் தயாரித்து, அதையேதான் செல்லுமிடங்களுக்கெல்லாம் ஏன் நாதிர்ஷா கொண்டு சென்றிருக்கக் கூடாது?' என்று புத்திசாலித்தனமாக எண்ணினார். அவர் சேகரித்த தகவல்கள் அவரது சந்தேகத்தை உறுதி செய்தன. அதன் விளைவு...?

நாதிர்ஷாவின் எஞ்சிய குடும்பத்தினர் வரவழைக்கப்பட்டு சிறையிலடைக்கப்பட்டு, சித்ரவதை செய்யப்பட்டனர். அவர்கள் பாதுகாத்து ஒளித்து வைத்திருந்தபழைய ஒரிஜனல் மயிலாசனத்தைச் சேர்ந்தவை என்று கருதப்பட்ட சில பகுதிகள் மீட்கப்பட்டன. இதோடு இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட சில பொற்கொல்லர்களின் உதவியால், புதிதாகச்

செய்த சில பகுதிகளைச் சேர்த்து, புதிய மயிலாசனம் ஒன்றைச் செய்து கொண்டு மகிழ்ந்தார் முகம்மதுஷா.

ஒரிஜினல் மயிலாசனத்தின் இன்னும் சில பகுதிகள், தப்பி ஓடி ஒளிந்து வாழ்ந்து வரும் சில உறவினர்களிடம் உள்ளன என்ற இரகசியத் தகவலைப் பின்னால் வந்த ஆங்கில ஆட்சியாளர்கள் அறிந்து கொண்டனர். விலை மதிப்பற்ற வைரம் பதிக்கப்பட்ட சில பகுதிகளும் அதில் இருப்பதை அறிந்து, அவற்றைப் பெறக் கடுமையான முயற்சிகளை இரகசியமாக மேற்கொண்டனர். இறுதியில் விலை மதிப்பில்லாத அப்பகுதிகள் ஆங்கிலேயர் கையில் சிக்கின!

இப் பகுதிகள் டில்லியில் இருந்தால் ஆபத்து என்று அமைதிப் பூங்காவான தென்னிந்தியாவுக்கு, குறிப்பாக சென்னைக்கே அனுப்பி வைக்கப் பட்டன.

இந்த அரிய கலைப் பொக்கிஷத்தைத் தாங்கிய 'கிராஸ்வேனர்' என்ற கப்பல், சென்னைத் துறைமுகத்தை விட்டு இலண்டனுக்குக் கிளம்பியது. ஆனால், வழியிலேயே கிழக்கு ஆப்பிரிக்காவுக்கு அருகே இது புயலில் சிக்கி, 4.8.1782 அன்று இந்து மாக் கடலில் மூழ்கித் தன் முடிவைத் தேடிக் கொண்டது!

கடலடியில் உறங்கிக் கொண்டிருக்கும் இந்த அற்புதக் கலைப் படைப்பை அடைய, எவ்வளவோ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு விட்டன. பிரபல ஆங்கில நாவலாசிரியர் கானன் டயால் கூட இதில் தனிக் கவனம் செலுத்தினார். ஆனால் எதுவும் பயனளிக்கவில்லை.

ஒரிஜினல் பகுதிகளில் சிலவற்றை வைத்துக் கொண்டு முகமதுஷா உருவாக்கிய மயிலாசனம் இன்னமும் பெர்ஷியாவில், ஷாமன்னரின் பொறுப்பில் இருக்கிறது. இதுவே ஒரிஜனல் மயிலாசனம் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். இந்து மாக்கடலின் மடியில் உறங்கிக் கிடக்கும் பகுதிகளால் மட்டுமே இதை உறுதி செய்ய முடியும். காலம்தான் இதற்கு வழிகண்டு உதவ முடியும்.

விசில் பாஷை

★ துருக்கியைச் சேர்ந்த ஒரு கிராமம் 'கஸ்கோய்'. இங்கு வசிக்கும் மக்களுக்கு பாஷை கிடையாது. விசில் அடிப்பதன் மூலம் ஒருவருக்கொருவர் விஷயங்களைப் பரிமாறிக் கொள்கிறார்கள். இங்கு பல நூற்றாண்டுகளாக 'விசில்' பாஷைதான்!

- டி. எஸ். உசேன், செஞ்சி - 2.

முதல் குழந்தை நட்சத்திரம்



★ இந்திய சினிமாவில் முதல் குழந்தை நட்சத்திரம் பாலசந்திரா என்பவர்தான். இவர் வேறு யாருமில்லை. தாதா சாகிப் பால்கேயின் மகன்தான். 'ராஜா அரிச்சந்திரா' என்ற படத்தில் அரிச்சந்திரனுடைய மகன் லோகிதாசனாக நடித்துள்ளார். இந்திய சினிமாவின் முதல் பெண் குழந்தை நட்சத்திரம் என்ற பெருமை மந்தாகினி என்பவரைச் சாரும். இவர் 'கிருஷ்ண ஜனனம்' என்ற படத்தில் கிருஷ்ணனாக நடித்துள்ளார். இவரும் தாதா சாகிப்பின் பெண்தான்!

- சி. பன்னீர் செல்வன், செங்கல்பட்டு.


குறுகிய கால ஜனாதிபதி!



★ வில்லியம் ஹென்றி ஹாரிசன் அமெரிக்க ஜனாதிபதியாக 1841 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்று அவர் கொட்டும் மழையில் நனைந்தவண்ணம் நின்று மக்களின் எதிரே பிரசங்கம் செய்தார். எவ்வளவு நேரம்? ஒன்னே முக்கால் மணி நேரம்! பாவம்! அதனால் நிமோனியாக் காய்ச்சல் கண்டு ஒரே மாதத்தில் இறந்து விட்டார், ஹாரிசன்! அமெரிக்க ஜனாதிபதிகளில் மிகக் குறுகிய காலம் ஜனாதிபதி பதவி வகித்தவர்களில் ஒருவர் இவர்.

- கிதா, சென்னை - 61.

கேட்கட்டுமா டாக்டர்



டாக்டர் கு. கணேசன்

செ. சங்கர், பாணாம்பட்டு.

? சிராய்ப்புப் புண்களுக்கு தேங்காய் எண்ணெய் தடவலாமா, டாக்டர்?



! தடவலாம், தம்பி. தவறில்லை!

அ. நவ்சாத், மொரப்பூர்.

? மனிதன் எதன் பாதிப்பினால் பைத்திய மாகிறான்?



! பைத்தியமாவதற்குப் பல காரணங் களைச் சொல்லலாம். பரம்பரை, விபத்து, மூளைக் கோளாறு, உடலியல் கோளா றுகள், சில தீராத நோய்கள், குடும்பச் சூழ் நிலை, சுற்றுப்புறச் சமுதாயச் சூழ்நிலை, தோல்வியை எதிர்கொள்ளும் மன வலிமை இல்லாமை, தூக்க மாத்திரைகள், போதை மருந்துகள், மது போன்றவற்றுக்கு அடிமை யாதல்... இப்படிப் பல காரணங்கள் இருக் கின்றன. இவற்றில் ஒன்றோ, பலவோ சேர்ந்து ஒருவரைப் பைத்தியமாக்கலாம்! மூளையில் உள்ள சிந்தித்துச் செயல்படும் பகுதி பாதிப்பதே பைத்தியம் பிடிப்பதற்கு அடிப்படைக் காரணம்!

டி. நளினி, லால்குடி.

? நாம் சுவாசிக்கும் போது பிராண வாயு வை எடுத்துக் கொண்டு கரியமில வாயுவை வெளியேற்றுகிறோமல்லவா? இந்தக் கரிய மில வாயு எங்கிருந்து வந்தது?

! இக் கேள்விக்கான பதில் உங்கள் அறிவியல் பாடப் புத்தகத்திலேயே இருக் குமே! இன்னும் படிக்கவில்லையா? நாம் சுவாசிக்கும் காற்றில் பிராண வாயு மட்டு மல்ல,கரியமில வாயுவும் கலந்தே உள்ளது. ஆனால், நம் நுரையீரல்கள் ஆக்ஸிஜன் எனும் பிராண வாயுவை மட்டும் எடுத்துக் கொண்டு கார்பன்டை ஆக்ஸைடு எனும் கரி யமில வாயுவை வெளியேற்றி விடு கிறது. இது தவிர நம் உடல் திசுக்களில் மாற்றம் நடைபெறும் போதும் கரியமில வாயு வெளிப்படுகிறது. இதுவும் நுரையீரல் வழியாக வெளிமூச்சின் மூலம் வெளி யேற்றப்படுகிறது.

கே. செல்லத்துரை, மாத்தூர்.

? உடம்பில் வீக்கம் ஏற்படுவது ஏன்?

! உடம்பில் அடிபடும்போதோ அல் லது நோய்க் கிருமிகள் தாக்கும்போதோ உடல் திசுக்கள், இரத்த நாளங்கள் ஆகி யவை சேதமடைகின்றன. அப்போது சேத மடைந்த திசுக்களிலிருந்து சிதிலமான செல்கள், இரத்தம், திணநீர் போன்றவை வெளியேறுகின்றன. இரத்த நாளங்களி லிருந்து 'பிளாஸ்மா' எனும் நீர்ப் பொரு ளும் வெளியேறுகிறது. ஆக, இவை எல் லாமே மொத்தமாக சேதமடைந்த இடத்தில் தேங்குவதால் 'வீக்கம்' தோன்று

கிறது!

பி. எஸ். சுரேஷ்பாபு, பரங்கிப்பேட்டை.

? சிலருக்கு சில பொருட்கள் 'அலர்ஜி' என்று சொல்கிறார்களே... அப்படியென்றால் என்ன, டாக்டர்?

! பரம்பரை அம்சம் காரணமாகவோ, உடலியல் ரீதியாகவோ சிலருக்கு சில பொருட்கள் ஒத்துக் கொள்வதில்லை, தம்பி! அவ்வாறு ஒத்துக் கொள்ளாத பொருட்களை உண்ணும் போதும் நுகரும் போதும் 'ஒவ்வாமை' (அலர்ஜி) ஏற்படுகிறது. இதைக் கொஞ்சம் விளக்கமாகவே சொல்கிறேன், கேள். ஒவ்வாமை உள்ளவர்களுக்கு ஒத்துக் கொள்ளாத பொருட்கள் வேற்றுப் பொருட்களாகக் கருதப்படுகின்றன. அதனால், அவற்றை அவர்கள் உண்ணும்போது, அவர்கள் இரத்தத்தில் உள்ள வெள்ளையணுக்கள் 'வேண்டாம் இந்த வேற்றுப் பொருட்கள்; வெளியேறி விடுங்கள்' என்கிற மாதிரி போராடுகின்றன. அச் சமயம் சில இரத்த அணுக்கள் சேதமடைகின்றன. இவ்வாறு சேதமடைந்த இரத்த அணுக்களிலிருந்து ஹிஸ்டமின், சிரட்டோனின் எனப்படும் சில விஷப் பொருட்கள் வெளிப்படுகின்றன. இவை சரும உணர்வு நரம்புகளைத் தூண்டச் செய்து 'அரிப்பை' உண்டாக்குகிறது; சுவாசப் பையின் சிறு காற்றுக் குழல்களைச் சுருங்கச் செய்து 'ஆஸ்துமா'வை வரவழைக்கிறது; சிலருக்கு இரத்த நாளங்களை விரிவடையச் செய்து, இரத்தத்தின் நீர்ப்பகுதியை வெளியேற்றி சருமத்தில் தடிப்புக்களை உண்டாக்குகிறது. இவை எல்லாமே ஒத்துக் கொள்ளாத பொருள் உடம்பில் இருக்கிற வரைதான். அப்பொருள் உடம்பை விட்டு வெளியேறி விட்டால் இந்த ஒவ்வாமைக் குணங்களும் மறைந்து விடும்!

ஜெ. பலராமன், சீர்காழி.


? எனக்கு மயக்கமும், தலைவலியும் அடிக்கடி வருகிறது. இதற்கு ஒரு வழி கூறுங்கள் டாக்டர், ப்ளீஸ்!



! தலைவலியும் மயக்கமும் சேர்ந்து வருவதாக இருந்தால் அது மூளை மற்றும் அதைச் சார்ந்த நரம்பு மண்டலக் கோளாறாகவே இருக்க வேண்டும். உன் உடம்பை நேரிடையாகப் பரிசோதிக்காமல் தீர்வு சொல்வது சிரமம். எனவே, நீ காலம் தாழ்த்தாமல் நரம்பியல் மருத்துவரைக் கலந்தாலோசித்தால் நல்ல வழி கிடைக்கும்.

ஆர். திலீப்குமார், வெள்ளம்பி.


? எனக்குப் புண் வந்தால் சீக்கிரம் ஆறுவதில்லை; புண் சீக்கிரமாகவும் சுலபமாகவும் ஆறுவதற்கு வழி கூறுங்கள், டாக்டர்!



! உடம்பைச் சுத்தமாக வைத்துக் கொண்டாலே போதும். புண்கள் சீக்கிரம் ஆறி விடும். அதே சமயம் புண்களின் மேல் ஈக்கள் மொய்க்காமலும், மண், தூசி போன்ற அழுக்குப் பொருட்கள் படாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். தினமும் புண்ணைத் துடைத்து மருந்து கட்ட வேண்டும். புண்ணில் சீழ் பிடித்திருந்தால் கிருமிக் கொல்லி மாத்திரைகளையும், வைட்டமின் 'சி' மாத்திரைகளையும் சாப்பிட வேண்டும். புண்கள் வரும் போது புரதச் சத்து நிறைந்த உணவுகளையும், கீரை, காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றையும் தாராளமாக உணவில் சேர்த்துக் கொண்டால் புண்கள் சீக்கிரமாகவும் சுலபமாகவும் ஆறி விடும்.

எஸ். ஆர். சாந்தி, சென்றாயரெட்டியூர்.

? 'ஓ' குரூப் இரத்தம் உடையவர்கள் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள் என்பது உண்மையா, டாக்டர்?



இல்லை!

துப்பாக்கியைத் தொடமாட்டேன்!

யானையைப் போலவும், கரடியைப் போலவும் பாதி உலக உருண்டையைப் போலவும் பல்வேறு பாறைகள் மலையின் அடர்ந்த வனத்தில் ஆங்காங்கு இருந்தன. நெடிதுயர்ந்த மரங்களின் கிளிகள் தாறுமாறாக விரவி, வெயிலைக் கூட வடிகட்டி அனுப்பிக் கொண்டிருந்தன.

ஆங்காங்கு விழுதுகள் நீண்டு தரையைத் தொட்டும், வளைந்து ஊஞ்சல் போல அடுத்த மரத்தோடு இணைந்தும் இருந்தன. அமைதியைக் கிழித்து வரும் வண்டுகளின் மெல்லிய கீதம் கேட்டுக் கொண்டிருந்தது. இடையிடையே மந்திகளின் 'குக்குக்' ஒலிகள் தூரத்திலிருந்து கேட்டன.

கிராமத்துப் பெரிய வீட்டுப் பொன்னையா மலையில் வேட்டைக்கு வந்திருந்தார். முதலில் வேலையாள் வீரன் துப்பாக்கியோடும், இடையில் பொன்னையா மகன் பிரபுவும், கடைசியில் அவருமாக ஒற்றையடிப் பாதையில் நடந்தனர். வழிகாட்ட வந்த ஆதிவாசிச் சிறுவன் நீலன் சிறிது தூரத்தில் சுற்று முற்றும் பார்த்தவாறு சென்று கொண்டிருந்தான்.

காய்ந்த இலைச் சருகுகளில் கால்கள் படுவதால் 'சரக் புரக்' கென்ற ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. சத்தமில்லாமல் வருமாறு நீலன் சைகை காட்டி விட்டுச் சென்று கொண்டிருந்தான்.

நாளை தன் வீட்டுக்கு விருந்துக்கு வரும் அரசு அதிகாரிக்கு மான் கறி தேவை என்று பொன்னையா வேட்டைக்குப் புறப்பட, மகன் பிரபுவும் தானும் வருவதாக அடம்பிடிக்க, முதலில் மறுத்த அவர் அவனும் பின்னால் வேட்டைக்கு வந்து அனுபவப் படட்டுமே என்று கடைசியில் ஒப்புக் கொண்டார்.

பள்ளி விடுமுறை நாளாகவும் இருந்ததால் மலை, வனங்களின் அழகைக் காணலாம். வேட்டையாடுவதையும் நேரில் பார்க்கலாம் என்ற ஆசையில்தான் பிரபு அவ்வாறு அடம் பிடித்து வெற்றியும் கண்டான்.

அடிவாரம் வந்து வழிகாட்ட ஆதிவாசிகளின் குடிசைகள் இருந்த பக்கம் ஆள் தேடிய போது நீலன்தான் தென்பட்டான். அவனை அழைத்த போது, ''சாமி, இப்பல்லாம் இங்க வேட்டையாடக் கூடாதுன்னு வனத்துறை அதிகாரிகள் உத்தரவு போட்டு எங்களைப் பாத்துக்கிடச் சொல்லியிருக்காங்க சாமி'' என்று பணிவுடன் கூறினான். அவருக்கு உடனே கோபம் வந்து விட்டது. ''டேய் பொடிப் பயலே! யாரைப் பார்த்து வேட்டையாடக் கூடாதுன்னு சொன்னே! என்னைத் தடுக்க இவங்க யார்? இப்ப நீ என் கூட வரலேன்னா ஒங்க குடிசைகளுக்கெல்லாம் இப்படியே தீயை வச்சுட்டு ஒன்னையும் சுட்டுப் போட்டுட்டுப் போயிருவேன்,'' என்று அதட்டியதும் வேறுவழியில்லாமல் நீலன் மான்கள் உள்ள இடத்திற்கு வழிகாட்டி வர ஒப்புக் கொண்டான்.

வ ன வி ல ங் கு க ள் சுடப்பட்டுச் சாவதை எண்ணி நீலனுக்கு வருத்தம்.

கொ.மா.கோதண்டம்



அடிவாரத்து கருப்பச்சாமி கோவிலில் வீரன் சாமிக்குப்பக்கத்தில் துப்பாக்கியை வைத்து ஊதுவத்தி கொளுத்தியதும் அனைவரும் வணங்கி விட்டு மேலே ஏறி நடந்தனர். நீண்ட தூரம் வந்தும் ஒரு மிருகமும் தென்படவில்லையாதலால் பொன்னையா 'கடுகடுவென்று முகத்தை வைத்திருந்தார்.

''அப்பா கால் வலிக்குது. திரும்பிப் போவோம்ப்பா'' முழங்காலைப் பிடித்துக் கொண்டு மகன் பிரபு சொன்னதும் கோபத்தோடு அவனைப் பார்த்தார்.

''மானைச் சுட்டோமுன்னா அதன் குட்டி கஷ்டப்படும்பா? பாவம். எதையும் சுட வேண்டாம்பா. திரும்பிப் போயிடலாம்'' - பிரபு கெஞ்சினான்.

''பேசாம எங்க கூட வாரியா, இல்லே ஒன்னை இங்கேயே விட்டுட்டுப் போகவா?'' - தந்தை அதட்டியதும் பிரபு பேசாமல் நடந்தான்.

முயல் அளவு இருந்த மர அணில் ஒன்று கிளையில் இருந்து கொண்டு வாலை ஆட்டியவாறு இவர்களைப் பார்த்தது.

''சாமி இந்தாங்க துப்பாக்கி. அந்த அணிலச் சுடலாங்க.'' வீரன் கூறியதும்,

''போடா பேசாம! கண்டுபிடிச்சுட்டான் பெரிய அணில! ஒரு வாய்க்கு வருமா அது? ஏதாச்சிம் பெரிய மிருகத்தக் காட்டுவானா, அணிலாம் அணிலு!'' பொன்னையா எரிச்சலுடன் கூற மேலும் நடந்தனர்.

அலுப்பாக இருக்கவே பொன்னையா பாறையில் அமர்ந்து கொண்டார். பிரபுவும் அருகில் உட்கார்ந்தான். வீரனும் நீலனும் கைகளைக் கட்டியவாறு எதிரில் நின்றனர். காற்று பலமாக வீசியது.

''டேய் நீலா. என்னடா இது! வேணுமின்னே மான் கூட்டம் வராத இடத்துக்குக் கூட்டிப் போறியாடா! எங்கேயும் ஒரு மானைக் கூடக் காணோமே.''

''நெசம்மா அப்படி இல்ல சாமி. கொஞ்ச நேரத்துல எப்படியாச்சும் ஒங்களுக்கு மான்களைக் காட்டிருவேன் சாமி'' - நீலன் பயந்தபடியே கூறினான்.

''மானோ இல்ல மந்தியோ கெடக்கல்ல...அப்பப் பாத்துக்க. துப்பாக்கி சும்மாபோகாது. பெறகு வேட்டைக்குறி நீதான்.'' அவர் கூறி முடிப்பதற்கும் தூரத்திலிருந்து யானையின் பிளிறல் சத்தம் கேட்பதற்கும் சரியாக இருந்தது.

'' ஏய்...ஏய்! யானைச்சத்தமில்ல கேட்குது...'' – அவர் வார்த்தைகள் நடுங்கின. பிரபு அவரோடு ஒட்டிக் கொண்டான்.

வேலையாள் வீரன் ஏதும் புரியாமல் பேந்தப் பேந்த விழித்தான். நீலன் சற்று நின்றான்.

''சாமி இது யானைச் சரத்து இல்ல. இந்த வழில யானை வராது சாமி. சும்மா வாங்க போவோம்.''

''சரத்துன்னா என்னப்பா''? பிரபு கேட்டான்.

''அதுக நடமாடுற பாதை சாமி. யானை நடமாடுற எடம் யானைச் சரத்து. புலிக நடமாடுற இடம் புலிச்

சகாரா என்றால் என்ன?



★ உலகிலேயே மிகப் பெரிய பாலைவனம் 'சகாரா' பாலைவனம் என்பது நம் அனைவருக்கும் தெரியும். அதற்கு அப்பெயர் எப்படி வந்ததென்று தெரியுமா? சக்ரா என்றால் அரேபிய மொழியில் 'மிக அகன்றது' என்று பொருள். சக்ரா என்ற சொல்தான் நாளடைவில் சகாரா என ஆகி விட்டது.

- தா. ஷேக் உசேன், செஞ்சி.

சரத்து.''

''டேய், புலியப் பத்தி இப்ப எதுக்குச் சொல்றே? இது புலிச் சரத்தா?''

''இல்லசாமி . பேச்சுக்குச் சொன்னேன்.''

மெல்லிய மேகக் கூட்டம் படிந்து பின் விலகிச் சென்றது. பாதை தெரியவில்லை. பின் லேசாகத் தூறல் விழுந்தது.

அவர்கள் ஒரு பாறைக்கடியில் ஒதுங்கினர். வெளிச்சம் பரவியதும் நடந்து சென்றனர். இடப்பக்கம் ஒரு சரிவை நோக்கி பாதை பிரிந்து செல்வது தெரிந்தது.

''டேய் நீலா இப்படிப் போகலாமா?''

''வேணாம்சாமி . அந்தப் பக்கம் சதும்புலு இருக்கு.''

''சதும்புலுன்னா?''

''சதும்பலுன்னா, புதை சேறு சாமி. ஆளையே உள்ள இழுத்துக்கிடும். அந்தப் பக்கம் போக வேணாம்.'' தூரத்தில் சென்ற நீலன் நின்றான். திரும்பி மேல் பக்கம் வேகமாக வந்தான்.

''சாமி பன்னிக் கூட்டம் வர்றாப் பலத் தெரியுது. மலைப் பன்னி ஆபத்தானது. மரங்கள்ல ஏறிக் கோங்க.''

''அய்யோ எனக்கு மரமேறத் தெரியாதே!'' பிரபு அலறினான்.

அவனை ஒரு பாறையில் ஏற்றி விட்டான் நீலன்.

பொன்னையாவும் ஒரு சிறிய பாறையில் ஏறிக் கொண்டார். வீரனும் நீலனும் மரத்தில் ஏறிக் கொண்டனர்.



சிறிது நேரத்தில் ஐந்தாறு மலைப் பன்றிகள், குட்டிகளோடு 'உட்கும் உட்கும்' என்ற சத்தமிட்டவாறே வந்து கொண்டிருந்தன. கொழுத்த மிகப் பெரிய பன்றிஒன்று வாயிலிருந்து வெளியே வளைந்த கொம்புப் பற்களுடன் முன்னால் நடந்து வந்தது. அது தான் அந்தக் கூட்டத்திற்குத் தலைவனாக இருக்க வேண்டும். வெளிறிய செம்மண் நிறத்தில் பார்ப் ப தற்கே

அது பயங்கரமாக இருந்தது.

''டேய் ஒத்தப் பன்னியச் சுட்டுரலாமா..?''

மனதில் பயம் இருந்தாலும் துப்பாக்கி இருப்பதால் பொன்னையா மெல்லக் கேட்டார். ''வேணாம் சாமி. குட்டி போட்ட பன்னியும் கூட வருது. அதனால, ரொம்பக் கோபமா இருக்கும். தனிப்பன்னி வந்தா சுடலாம். இதுக போவட்டும்'' - நீலன் சொன்னான்.

'என்ன! எல்லாத்துக்கும் இவன் ஆலோசனைப் படி நடந்தா, அப்புறம் நம்ம கௌரவம் என்னாகுறது? பாறக்கி மேலதான் இருக்கோம்? இது என்னதான் செஞ்சுடும்?' என்று நினைத்தவாறே துப்பாக்கியைச் சரி செய்தார் பொன்னையா.

ப ன் றி க ள் ஒன்றையொன்று மோதிக்கொண்டு வேகமாக வந்து கொண்டிருந்தன.

'படீர்....' என்று துப்பாக்கி வெடித்தது. பன்றிகள் நாலாபக்கமும் சிதறி ஓடின.

முன்னால் வந்த தலைமைப்பன்றி சுற்றும் முற்றும் பார்த்தது. சுட்டவர்கள் பாறையில் இருப்பதைப் பார்த்துக் கொண்டது.

பெரிய உறுமலுடன் பொன்னையா இருந்த பாறையை நோக்கித் தாவிப் பாய்ந்தது! தாவிப் பாய்ந்த வேகத்தில், பொன்னையாவின் கால்களில் அடித்து வழுக்கி அப்படியே கீழே சரிந்து விழுந்தது.

பயந்தாலும், பன்றி அடித்த வேகத்தாலும் பொன்னையா தன்னை மறந்து பின் பக்கம் விழுந்து உருண்டார். பன்றி எழுந்து ஓடி விட்டது.

'ஐயோ! எங்கப்பா உருண்டு போறாரே!'

''எசமான்!''

பிரபு பாறையிலிருந்தும், நீலனும் வீரனும் மரத்திலிருந்தும் குதித்துச் சரிவை நோக்கி ஓடி வந்தனர்.

பொன்னையா சரிவில் உருண்டவாறே சென்று பள்ளத்தில் விழுந்தார்.

''கீழே சதும்பலு இருக்கு. நீங்க கவனமா பாத்து மெல்ல வாங்க'' என்று எச்சரித்தவாறே நீலன் ஒரு ஓரமாக ஓடி, பள்ளத்தை நோக்கிக் கீழே இறங்கினான். எச்சரிக்கை பிந்திக் கொண்டது. பொன்னையா புதை குழியில் சிக்கிக் கொண்டு விட்டார்.

''ஐயோ'' என்று அலறிய பொன்னையாவின் கால்கள் புதை சேற்றில் அழுந்தின. இந்தக் காலை அசைத்தால் அந்தக் கால் மேலும் உள்ளே சென்றது. அந்தக் காலை அசைத்தால் இந்தக் கால், இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக அவர் உடல் புதை சேற்றில் உள்ளே உள்ளே சென்றது. ஏதோ மண்பொம்மை மாதிரி இருந்தார். கைகளை அசைத்து அலறினார்.

கீழே வந்து விட்ட பிரபுவும் வீரனும் செய்வதறியாது அலறிக் கொண்டு இருந்தனர்.

நீலன் என்ன செய்வதென்று சிறிது யோசித்தான். வீரன் அருகில் செல்ல முயற்சித்தான். அவனைத் தடுத்த நீலன் ''யாரும் அந்தப் பக்கம் போகக் கூடாது'' என்று கூறி விட்டு,'' ஐயாவைப் பாத்துக் கோங்க'' என்று வீரனிடம் கூறிவிட்டு விருட்டென்று ஒரு மரத்தில் ஏறினான். தொங்கிக் கொண்டிருந்த நீண்ட விழுதை வெட்டிக் கீழே போட்டான். அவன் இறங்குவதற்குள் பொன்னையா மார்பு அளவு புதைந்து விட்டார். இன்னும் சிறிது நேரத்தில் முற்றிலுமாகப் புதைந்து போய் விடப்போகிறோம் என்ற பயத்தில் அவர் கடவுளை வேண்டிக் கொண்டிருந்தார்.

தூரத்தில் நின்றவாறே விழுதின் ஒரு பக்கத்தைத்தான் பிடித்துக் கொண்டு மற்றொரு பக்கத்தை அவரை நோக்கி வீசிய நீலன், ''சாமி, இத நல்லாப் புடிச்சுக்கோங்க'' என்றான்.

அவருக்கு விழுது எட்டவில்லை. மீண்டும் இழுத்து வீசினான். கழுத்தளவு புதைந்த சமயத்தில் கைகளால் விழுதைப் பிடித்துக் கொண்டார். வீரனும் பிரபுவும் நீலன் அழைத்ததும்

ஓடி வந்தனர். மூவரும் விழுதைப் பலங்கொண்ட மட்டும் இழுத்தனர். புதை சேற்றில் இருந்து பொன்னையா அங்குலம் அங்குலமாக இழுத்துத் தரைக்குக் கொண்டு வரப்பட்டார்.

சொதபுதவென்ற சகதியோடு பொன்னையாவின் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. அவர் அப்படியே மயங்கிப் போனார். மூவரும் அவரைத் தூக்கினர். நீலன் சிறிது தூரத்தில் தண்ணீர் இருக்கும் இடத்தருகே கொண்டுவந்து இறக்கி அவரைக் கழுவி, படுக்க வைத்து உடைகளை அலசிப் பிழிந்து காய வைத்தான்.

பொன்னையாவுக்கு மெல்ல உணர்வு வந்தது. எழுந்து உட்கார்ந்து கொண்டார்.

''நீலா...! ஒன்னை நா எவ்வளவு இம்சை செஞ்சேன். நீதாம்பா தெய்வமா இருந்து என்னைக் காப்பாத்திட்டே...'' - அவர் நா தழுதழுக்க, சொற்கள் வெளிவரவில்லை.

''எனக்கு இந்த யோசனை வரலையே! ஒரு மலைக்கார சின்னப் பையன், நம்ம மொதலாளியயே காப்பாத்திட்டானே!'' - வீரன் வியந்து போய் நீலனைப் பார்த்தான்.


பிரபு நீலனைக் கட்டித் தழுவிக் கொண்டான்.

'நீலா, உயிரின் அருமையை நான் நன்றாகவே உணர்ந்து கொண்டு விட்டேன். எனக்கு என் உயிர் எப்படியோ, அப்படித்தானே மற்ற மிருகங்களுக்கும் இருக்கும். எந்துப்பாக்கி எங்கன விழுந்ததோ! இனி அதை நான் தொடமாட்டேன். எந்த உசுருக்கும் இனிமே நா தீங்கு நெனக்கமாட்டேன். ஊருக்குப் போனதும் உனக்கு வேண்டிய உதவிகளைச் செய்வேன்.''

நீலனின் கைகளைப் பிடித்துக் கொண்ட பொன்னையாவின் கண்களில் கண்ணீர் வழிந்தது. நீலனின் கண்களிலுந்தான்!




குளிர்கால வெப்பநிலை பூஜ்யத்திற்கு கீழே 40 டிகிரிக்குச் சென்றுவிட்டால் பெங்குவின் பறவைகள் ஒன்றோடொன்று அணைத்துக் கொள்ளும். இதனால் அதன் உடலில் வெப்பநிலை குளிரால் பாதிக்கப்படாது.



பறவைகளின் கண்கள் அவற்றின் மூளையைப் பார்க்கிலும் மிகப் பெரியவை. அவற்றின் பார்வை மிகக் கூர்மையானவை. மனிதனின் பார்வையைப் பார்க்கிலும் 8 மடங்கு கூர்மையானது. ஒரு கழுகு 2 மைலுக்கு அப்பால் உள்ள தனது இரையைக் கூடக் கண்டு பிடித்து விடும்!

சுறாமீனுக்கு எலும்புகள் கிடையாது. சுறாமீனின் எலும்புக் கூடு என்பது, கிரிஸ்டைல் போன்று மிகக் கடினமான எலாஸ்டிக் தன்மை உடையது.




வண்ணந்
தீட்டுங்கள்!

நான் திருடலே!

காலை இறைவணக்கம் முடிந்து பள்ளி சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பித்தது. ஒன்பதாம் வகுப்பு 'அ' பிரிவிற்கு முதல் பிரீயட் தமிழ்.

தமிழாசிரியர் குறள் ஒன்றைக் கரும்பலகையில் எ ழு தி அதன் கருத்தை ஆழமாக விளக்கிக் கொண்டிருந்தார்.

''ஐயா... ஐயா...'' என்ற குரல் கேட்டது.

கடைசி பெஞ்சில் அமர்ந்திருந்த அழகுமணிதான் நின்று கொண்டிருந்தான். குரலைப் போலவே முகத்திலும் பதட்டம் தெரிந்தது. இந்த வருடம்தான் பக்கத்துக் கிராமத்திலிருந்து அப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பில் புதிதாகச் சேர்ந்திருக்கிறான்.

' ஐயா! பள்ளிக்கூட சொசைட்டியிலே இன்னிக்குக் காலையில்தான் புது புத்தகம் ஒரு செட் வாங்கி, டெஸ்க்குக்குள்ளே வச்சேன். நீங்க போர்டிலே எழுதிப் போட்ட குறள், தமிழ்ப் புத்தகத்திலே இருக்கான்னு பார்க்க டெஸ்க்குக்குள்ளே கையை விட்டேன். தமிழ்ப் புத்தகம் மட்டுமல்ல, எல்லாப் புத்தகங்களையும் காணோம். வீட்டுக்குத் தெரிஞ்சா எங்க அப்பா முதுகுத் தோலை உரிச்சுடுவாரு '— இன்னும் கொஞ்சம் நேரம் போனால் அழுகுமணி அழுதே விடுவான் போல் இருந்தது.

''நீ புத்தகங்கள் வாங்கியதற்கு ரசீது இருக்கா?''

மறுபடியும் டெஸ்கிற்குள் கையை விட்டுத் தேடினான் அழகுமணி. கிடைக்கவில்லை. எங்கே போச்சோ! கையைப் பிசைந்தான்.

' நீ புத்தகம் வாங்கியதை யார் பார்த்தார்கள்?'

''ஐயா! நான் பார்த்தேன். நான் பார்த்தேன்.. நான்... நான்...''- நான்கைந்து பையன்கள் எழுந்து கூறினர்.

''சரி.. புத்தகங்களில் உன் பெயரை எழுதினாயா?''

''இல்லீங்க ஐயா! வாங்கி அப்படியே கொண்டு வந்து வச்சுட்டேன்.''

''அழகுமணி, நீ போய் ஒவ்வொரு மாணவனின் இருக்கையையும் பையையும் சோதனை போடு. இன்று எத்தனை நேரம் ஆனாலும் இதைக் கண்டுபிடிக்காமல் யாரையும் வெளியே அனுப்பப் போவதில்லை''

ஆசிரியரின் குரலில் கண்டிப்பும் மிரட்டலும் கலந்திருந்தது.

அழகுமணி ஒவ்வொரு மாணவனின் புத்தகப் பையையும் ஆராய்ந்தான். புதுப் புத்தகம் வாங்கியவர்கள் பெயரை எழுதி வைத்திருந்தனர். கடைசியாக சக்திவேலின் பை. அதில்... ஒன்பதாம் வகுப்புக்கான பழைய புத்தகங்கள் ஒரு செட்டும், பெயர் எழுதப்படாத புதிய புத்தகங்கள் ஒரு செட்டும் இருந்தன.

''ஐயா! இதோ... சக்திவேலின் பையில் என்னோட புதுப் புத்தகங்கள் இருக்கு'' — உரக்கக் கூவினான் அழகுமணி.

தி டு க் கி ட் ட ா ன் சக்திவேல்.

டி.ஜானகி



''இவனுக்குப் பூ என்றால் ரொம்பப் பிரியம்.''

''அப்படியா! இவன் பேர் என்ன?''

''பூபதி!''

- கபிஸ்தலம் ஏ. கே. ஆனந்தப்ரியா.

'இந்தப் புதுப் புத்தகங்கள் என்னிடம் இருப்பது யாருக்கும் தெரியக் கூடாது என்று நினைத்தேன். புத்தகங்களில் பெயரை எழுதி வைத்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்.. இப்ப.. என்ன சொல்வது....?'

சக்திவேலின் புத்தகப் பையை எடுத்து வரச் சொல்லிப் பார்த்தார் ஆசிரியர். பழைய புத்தகங்கள் எல்லாவற்றிலும் செந்தில்குமார் என்ற பெயர் இருந்தது.

' செந்தில்குமார் என்பது யார்?'

''அவனோட அத்தை மகன் சார். நம்ப ஸ்கூல்லே இப்ப பத்தாவது படிக்கிறான்''—அழகுமணியின் அதே தெருப் பையன் முருகேசன் சொன்னான்.

' அத்தை மகன் உனக்குப் பழைய புத்தகங்களைக் கொடுத்திருக்கும் போது, அழகுமணியின் புதுப் புத்தகங்களை ஏன் எடுத்தாய்?'

''ஐயா! இவை இவை அழகுமணியோடது இல்லீங்க. என்னோட புத்தகங்கள்தான் ஐயா'' - சக்திவேல் பணிவோடு பதில் சொன்னான்.

' புதுப் புத்தகங்களை எங்கே வாங்கினே?'

'புத்தகக் கடையிலே.'

'உனக்கு எதுக்குடா இரண்டு செட் புத்தகம்? உங்கப்பாவுக்கு என்ன வேலை?'

''அவனுக்கு அப்பா இல்லே சார். ரொம்ப ஏழை. அம்மாதான் வேலைக்குப் போய் சம்பாதிக்கறாங்க'' - முருகேசன் விளக்கம் அளித்தான்.

'சாப்பாட்டுக்கே கஷ்டப்படற உன்னாலே, எப்படிப் புதுப் புத்தகம் வாங்கியிருக்க முடியும்? அதுவும் பழைய புத்தகம் இருக்கும் பொழுது. மரியாதையா உண்மையைச் சொன்னா உன்னை அடிக்க மாட்டேன்.'

உண்மையைச் சொல்லி விடலாமா? அடிவாங்குவதிலிருந்து தப்பித்து விடலாமா.? எப்படிச் சொல்வது..? அழகுமணி ஒரு நிமிடம் யோசனையில் ஆழ்ந்தான்.

அதற்குள்...

'திருடி விட்டுப் பதில் பேசாம ஏண்டா நிக்கறே? எத்தனை முறை சொல்லியும் பொய்யா சொல்றே? வாடா இங்கே.'

ஆசிரியர் கோபத்தோடு பிரம்பால் சக்திவேலின் முதுகில் சுரீர் என்று ஒருமுறை அடித்தார்.

அழகுமணி அப்படியே துடி துடித்துத் துள்ளி நகர்ந்து அருகில் இருந்த டெஸ்க்கைப் பிடித்துக் கொண்டான்.

அதற்குள், ''சார்'' என்ற கணீரென்ற குரல் கேட்டது.

அனைவரின் பார்வையும் வாசற் பக்கம் சென்றது.

பள்ளிப் பணியாளன் கையில் ஒரு செட் புதுப் புத்தகங்களோடு நின்று கொண்டிருந்தான்.

''அழகுமணி என்பவன் இந்தப் பிரிவில் இருக்கானா?'' - தன் கையில் வைத்திருந்த ரசீதைப் பார்த்தபடி கேட்டான் பணியாளன்.

'ஆமாம்... என்ன... வேண்டும்?'

' சார், இது அவனோட புத்தகச் செட்டான்னு பார்க்கச் சொல்லுங்க. சொசைட்டி ரூம் டேபிள் மேல இருந்தது. அந்த ஆசிரியர் கொடுத்து விட்டு வரச் சொன்னார்.'

அழகுமணி அருகில் சென்று வாங்கிப் பார்த்தான்.

அவை அவன் வாங்கிய புத்தகங்கள்தான்! பிரேயர் மணி அடிக்கவே தலைமை ஆசிரியர் கோபித்துக் கொள்வாரோ என்ற பயத்திலும், அவசரத்திலும் பரபரப்பிலும் சொசைட்டி ரூமில் உள்ள டேபிளின் மீது அப்படியே புதுப் புத்தகங்களை ரசீதுடன் வைத்து விட்டுச் சென்றது இப்பொழுதுதான் அவனுடைய நினைவுத் திரையில் பளிச்சென்று மின்னியது.

நடந்தது என்னவென்று ஆசிரியருக்குப் புரிந்து விட்டது.

''இந்தச் சின்ன வயதிலேயே இப்படி இருந்தால், பெரியவனாக வளர்ந்த பிறகு எப்படி இருப்பாயோ? உன்னுடைய ஞாபக மறதியால் ஏற்பட்ட விபரீதத்தைப் பார்த்தாயா?'' ஆசிரியரின் குரலில் சூடு ஏறிக் கொண்டிருந்தது.

அழகுமணிக்குத் தன் அவசரத்தின் தவறு புரிந்தது. குற்றமற்ற சக்திவேல் அடி வாங்கியது அவன் நெஞ்சைத் தொட்டது.


''தப்பு என்னோடதுதான் ஐயா. தயவு செய்து என்னை மன்னிச்சுடுங்க. இனி இப்படி நடந்துக்கவே மாட்டேன்...'' – சொல்லும்போதே அழகுமணிக்கு அழுகை வந்து விட்டது. தலையைக் குனிந்து கொண்டான்.

''இப்படிச் செய்வது இதுவே கடைசி முறையாக இருக்கட்டும்'' ஆசிரியர் உறுமினார்.

தள்ளாடியபடி அழகுமணி தன் இருக்கைக்கு வந்தான்.

''சக்திவேல் நீ சொன்னதை இப்பொழுது நம்புகிறேன். ஆமாம்! உனக்கு எதற்கு இரண்டு செட் புத்தகங்கள்?'' - ஆசிரியர் கனிவோடு வினவினார்.

''ஐயா! நேற்று நீங்கள் கர்ணனைப் பற்றி வி ள க் க மா க ச் சொல்லறப்போ நாமும் நம்மால முடிஞ்ச அளவு மற்றவங்களுக்கு உதவி செய்யணும். உதவி செய்ய வாய்ப்புக் கிடைத்தால் அதை ஆண்டவன் நமக்காகக் கொடுத்த இனிய சந்தர்ப்பம் என்று நினைத்துச் செய்ய வேண்டும் என்று சொன்னீங்களே... அது என் மனசிலே பதிஞ்சு போச்சு. அதனால...''



"அதனால?"

"எங்கம்மா வேலை செய்யற வீட்டிலே நேத்திக்கு எனக்குப் புதுப் புத்தகம் ஒரு செட் வாங்கிக் கொடுத்தாங்க. நேத்து ராத்திரி எங்க அத்தை மகன் திடீர்னு எங்க வீட்டுக்கு வந்து நல்லா படின்னு அவன் புத்தகத்தையும் எங்கிட்டே கொடுத்தான். இந்த வகுப்பிலே ஏ - பிரிவிலே முத்துசாமின்னு ஒரு பையன். ரொம்பவும் நல்ல பையன். என்னை விட இன்னும் பரம ஏழை. ஆனா வகுப்பிலே அவன்தான் ஃபர்ஸ்ட் ரேங்க். நான் எட்டாவது பாஸ் பண்ணறதுக்கு தினமும் அவன் வீட்டுக்குப் போய்த்தான் படிச்சேன். அவன் இன்னைக்கு லீவு. அவனுக்கு என்னோட புதுப் புத்தகத்தைக் கொடுக்க விரும்பினேன். தன் அழகான கையெழுத்தால் முத்துசாமி தன் பேரைத் தானே எழுதிக் கொள்ளட்டும் என்று தான் நான் பேரைக் கூட எழுதாம வச்சிருந்தேன்."

ஒரு வினாடி திகைத்து நின்ற ஆசிரியர் மீண்டும் கேட்டார்.

"இதை முன்னாடியே சொல்வதற்கு என்ன?"

"ஐயா! நாம செய்யற உதவி மத்தவங்களுக்குத் தெரியக் கூடாது. வலது கை கொடுப்பது இடது கைக்குக் கூடத் தெரியக் கூடாதுன்னு சொல்லியிருக்கீங்களே! மத்தவங்க யாருக்கும் தெரியாம, முத்துசாமிகிட்டே கொடுத்து அவனை சந்தோஷப்படுத்தணும்னு ஆசைப்பட்டேன். ஆனா... இப்ப... நீங்க கேட்டதால் உண்மையைச் சொல்லும்படியான ஒரு நிலைமை உண்டாயிடுத்து."

ஆசிரியர் கண் இமைக்காமல் அவனைப் பார்த்தார். அவர் விளக்கிய ஒரு சிறு பொறியை இந்தத் தங்க மாணவன் எவ்வளவு பெரிய ஒளி வீசும் சுடராக்கி விட்டான்! அவர் மனம் பெருமிதத்தால் விம்மியது.

"சக்திவேல் வருங்காலத்தில் நிச்சயம் நீ நல்லவன் என்ற பெயரோடு உன்னத நிலைக்கு உயர்வாய். உன்னை மாணவனாக அடைந்ததில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்" என்று கூறியபடி. அவன் முதுகை; அடி விழுந்த முதுகை அத்தனை மாணவர்களுக்கும் நடுவே, ஆதரவோடு இதமாகத் தடவிக் கொடுத்தார் ஆசிரியர்.


தன் முதுகு வலி எல்லாம் பறந்து விட்ட மகிழ்ச்சியில் திளைத்தான் அந்தத் தங்க மாணவன்.

"சமையல் குறிப்பைப் பார்த்தா சமையல் செஞ்சே! இப்படி வேகாமல் இருக்கே!"

"அடுப்பைப் பத்த வைக்கும் படி அதுல சொல்லலே. அதனால தான்!"

- ஸ்ரீரங்கம் ரா. ராகவன்.






"தேள் கொட்டிடுச்சு டாக்டர்."

"எந்த இடத்துல?"

"நம்ம வீட்டுத் தோட்டத்துல தான்."

- சீர்காழி. வி. ரேவதி.


தூண்டிலில்
சிக்கியுள்ள மீன்கள்
இரண்டுதான்.
கண்டு பிடியுங்கள்.

கேளுங்கள் சொல்லப்படும்!

ஆசிரியப் பெருமக்கள் மிக அதிக அளவில் இந்தப் பகுதிக்கு எழுதிக் கேட்கிறார்கள். இவை எல்லாம் 'குழந்தை இலக்கியம்' தொடர்பானவை என்பதைக் கவனிக்கும் போது பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் உள்ளது. குழந்தைகளுக்கும் சுவையளிக்கக் கூடிய கேள்விகளுக்கு அவற்றில் மட்டும் இதே பகுதியில் பதில் தரப்படுகிறது. முழுக்க முழுக்கக் குழந்தை இலக்கியம் தொடர்பான கேள்விகளுக்கு, போதிய தபால் தலை அனுப்பினால் பதில் எழுதப்படுகிறது. இப்பகுதி குழந்தைகளுக்கானது என்பதை மறந்துவிட வேண்டாம்!



✱ வ. சரவணப் பெருமாள், கல்லிடைக்குறிச்சி.

உலகம் முழுவதும் கிருஸ்துமஸ் ஒரே நாளில் (டிசம்பர் 25)தான் கொண்டாடப்படுகிறதா?

இல்லையே. அமெரிக்கன் சர்ச் ஜனவரி 6 ஆம் தேதிதான் கிருஸ்துமஸைக் கொண்டாடுகிறது.

✱ க. முஸ்தபா, கரூர்.

இந்தியாவின் தலைநகராக டெல்லி எப்பொழுது ஆக்கப்பட்டது?

1911 இல். அதுவரை கல்கத்தாதான் தலைநகராக இருந்தது.

✱ வி. பெருந்தேவி மற்றும் பலர், விருத்தாசலம் - 1.

கௌரவ ஆசிரியரை எங்கள் ஊருக்குப் பேச அழைத்தால் வருவாரா?

அது நேரத்தையும், எந்த நிகழ்ச்சி என்பதையும் பொறுத்தது.

✱ எல். லத்தீப், மற்றும் நண்பர்கள், தாராபுரம்.

சர்க்கரை வியாதியைக் கட்டுப்படுத்த உதவும் 'இன்சுலின்' எதிலிருந்து தயாரிக்கப்படுகிறது?

ஆட்டின் பாங்கிரியாஸ் (கணையம்) உறுப்பிலிருந்து இதற்கான மூல மருந்து எடுக்கப்படுகிறது.

✱ பு. முத்துக்காளத்தி, திருத்தணி.

விமானப் பயணத்தின் போது பேனாவில் உள்ள இங்க்கைக் காலி செய்யும் படி கூறுகிறார்களாமே, ஏன்?

உயரே செல்லச் செல்ல, காற்றின் சுற்றுப்புற அழுத்தம் அதிகமாகிறது. அதனால் பேனாவுக்குள் உள்ள காற்றின் அளவும் அதிகரித்து, அழுத்தம் கூடி, இங்க்கைப் பொங்க வைக்கிறது. பொங்கினால், நம் உடை என்னவாகும்? இதன் காரணமாகவே விமா

ளப் பயணத்தில் இங்க் பேனா வைக் காலியாக்கி வைத்துக் கொள்ளச் சொல்கிறார்கள்.

✱ ந. நர்மதா, புதுக்கோட்டை.

குழந்தைக் கவிஞரும், புத்தனேரி சுப்ரமணியன் என்பவருமாகச் சேர்ந்து



ஒரு கவிதை நூல் வெளியிட்டிருக்கிறார்களாமே அது என்ன?

அப்படி ஒரு நூல் வெளிவந்ததாகத் தெரியவில்லை. ஆனால், நீங்கள் குறிப்பிட்ட இருவருமாகச் சேர்ந்து, பாரதி பாடல்களில் குழந்தைகளுக்கான பாடல்களை மட்டும் எடுத்துத் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்கள். வெளியிட்டவர்கள்: 'வானதி பதிப்பகம்' சென்னை.17.

✱ சுப. முத்துக்காளத்தி, அந்தியூர்.

குழந்தைக் கவிஞரின் "பாட்டிலே காந்திகதை" போல், பாட்டிலே இராமாயணம் ஏதாவது வெளிவந்திருக்கிறதா?

இருக்கிறதே. அருணாசலக் கவிராயரின் "எனக்கு உன்னிருபதம்" என்று ஒரு பாடல். இராமாயணம் முழுவதயும் 80 வரிகளில் (சரணங்களில்) தந்திருக்கிறார்கள். மிக எளிய நடையில். கவிஞர் இளையவன் எண்பது வரிகளில் இராமாயணத்தைக் குழந்தைகளுக்காகத் தந்திருக்கிறார். 'பூமியிலே ஒரு புண்யகதை' என்று தொடரும் ஒரு அருமையான பாடல். 48 வரிகள். தஞ்சை ராமையாதாஸ் என்ற கவிஞர் எழுதியது. இது ஏதோ ஒரு திரைப்படத்தில் கூடப். பின்னால் வந்தது. இவற்றைத் தவிர நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவில் முழுக்க முழுக்கக் குழந்தைகளுக்காக

சோதம்பி

எழுதப்பட்டது. 'பால ஸ்ரீராமாயணம்'. எழுதியவர் வானொலி அண்ணா அமரர் ர. அய்யாசாமி. இது வாரா வாரம் சென்னை வானொலி சிறுவர் நிகழ்ச்சியில் தொடராக ஒலி பரப்பப்பட்டது. பின்னர் வண்ணப் படங்களுடன் கூடிய அழகிய நூலாகவும் வெளி வந்தது.

✱ குமரவேல், திருவரங்கம்.

'மீன் குழம்பு வகைகள் செய்வது எப்படி?' என்ற நூலை எழுதிய ரேவதிக்கு, கோகுலத்தின் கௌரவ ஆசிரியராக என்ன தகுதி இருக்கிறது?

தம்பி, தம்பி, மீன் குழம்புப் புத்தகத்தை எழுதிய ரேவதி வேறு! கோகுலத்தின் கௌரவ ஆசிரியர் ரேவதி வேறு. பின்னவரின் குழந்தை இலக்கியப் பணி 1952 இல் தொடங்கியது. இன்னும் தொடர் கிறது.

✱ சுபா, வஜ்ரேஸ்வரி, மீரா - அண்ணாமலைநகர்.

'ஜன கண மன' கீதம் முதலில் எப்பொழுது மேடையில் பாடப்பட்டது?




1911, டிசம்பர் 11 ஆம் தேதியன்று தான் பாடப்பட்டது.

✱ து. தம்புசாமி, அருப்புக்கோட்டை.

சிலர் பெயருக்குப் பின்னால் (PUGIL) என்று போட்டுக் கொள்கிறார்களே, இதற்கு என்ன பொருள்?

பாக்சிங் (குத்துச் சண்டை) ஆட்ட



இயலில் கரைண்டவர் என்பது பொருள். PUGILIST என்பதன் சுருக்கமே இது. இப்பட்டம் பெற்றவர் குத்துச் சண்டை ஆடுபவராக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆமாம், இந்தப் பட்டத்தை அயல் நாடுகளில்தானே தருகிறார்கள்! இதை எங்கே பார்த்தாய்?

✱ கு. பட்டம்மாள், கு. செல்லம் மாள் குழுவினர், கோட்டையூர்.

If I am Assacinated என்ற புத்தகம் இந்திரா காந்தியால் எழுதப்பட்டது என்று என் சிநேகிதி கூறுகிறாள்.



கென்னடி எழுதியது என்று அண்ணா கூறுகிறான். யார் சரி?

இருவர் கூறுவதும் தவறு. இந்தப் புத்தகத்தை எழுதியவர் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் புட்டோ.

✱ கு. சரவணன், குன்னூர்.

'மைலைப்ஃ மை மியூசிக்' என்ற புத்தகம் மிகவும் பிரபலமானது என்று கூறுகிறார்களே... இதை எழுதியது யார்?

யெகுதி மெனுஹின் என்ற வயலின் இசை மேதை.



✱ வ. மல்லிகா, குணசேகரன் பேட்டை.

உலகப்புகழ் பெற்ற முதல் இரட்டையர்கள் யார்?

மகாபாரத்தில் வரும் பாண்டவர்களில் இருவரான நகுலனும் சகாதேவனும்.

✱ பு. ராஜாபாதர், கனம்மா சத்திரம்.

கைத்துப்பாக்கியை ஏன் பிஸ்டல் என்கிறார்கள்?

காரணமாகத்தான். இதை இத்தாலியைச் சேர்ந்த பிஸ்டோயா என்பவர் கண்டுபிடித்தார். இதை ஒட்டியே பிஸ்டல் என்று பெயர் தரப்பட்டது.

✱ வ. முத்து நாராயணன், காரைக்குடி.

உலகப் புகழ் பெற்ற 'டார்ஜான்' பாத்திரத்தை உருவாக்கிய ஆசிரியர் யார்?


எட்கர் ரைஸ் பரோ.

டி. பாபு, டி. ரமேஷ், உதகை.

இந்தியாவில் உள்ள அருங்காட்சியகங்களில் (மியூசியம்ஸ்) மிகப் பெரியது எது?

கல்கத்தா நெஷனல் மியூசியம்.

கேள்வி கேட்போர் முழு முகவரியையும் தர வேண்டும். ஒரு கார்டில் ஒரு கேள்வியை மட்டும் கேட்கலாம். அனுப்ப வேண்டிய முகவரி: ஆசிரியர் கோகுலம், ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032.



இறந்து மீண்டவர்!

கல்கத்தாவின் மிகப் பிரபல டாக்டரான கிருஷ்ண தன்கோஷ் மிகவும் பரபரப்போடு இருந்தார். இங்கிலாந்தில் படித்துக் கொண்டிருந்த அவரது செல்ல மகன் ஐ. சி. எஸ். தேர்வை எழுதியிருந்தான். அந்த வாரம், முடிவுகள் வர வேண்டிய நிலை.

மகனின் நல்வாழ்வில் அக்கறை கொண்ட ஒரு இலட்சியத் தந்தைக் குப் பரபரப்பு இருக்காதா? அதிலும்

அட்டை வண்ணப்படம் : உத்ரா

தன் மகன் இலண்டனில் ஐ. சி. எஸ் தேர்வு எழுதி, இந்தியாவில் ஆங்கில அதிகாரிகளுக்குச் சமமாக உயர்ந்த பதவி வகிக்க வேண்டும் என்பதே அந்தத் தந்தையின் இலட்சியமாக இருந்தது. மகனும், தந்தையின் இலட்சியத்தை நிறைவேற்றக்கூடிய திறமை பெற்ற அறிவாளியாக இருந்தான்.

பிற்பகலில் தகவல் வந்தது. இலண்டனில் உள்ள டாக்டரின் நண்பர் ஒருவர் தகவல் அனுப்பி யிருந்தார். அவரது மகன் எல்லாப் பிரிவுத் தேர்வுகளிலும் வெற்றி பெற்று விட்டதாகவும் இன்னும் குதிரைச் சவாரித் தேர்வு ஒன்று மட்டுமே பாக்கியென்றும், அதில் அவரது மகன் எளிதில் வெற்றி பெற்று விடுவான் என்றும் தெரிவித்திருந்தார். தனது மகன் அப்பொழுதே கலெக்டராகி விட்டதைப் போல் மகிழ்ந்தார் தந்தை.

அடுத்த வாரம் டாக்டருக்கு அதிர்ச்சியளிக்கும் கடிதம் ஒன்று வந்தது. எழுதியிருந்தவர் அவரது மகன்தான். குதிரையின் மேல் சவாரி செய்வதை ஒரு பாவச் செயலாகக் கருதுவதால், தான் குதிரைச் சவாரித் தேர்வில் கலந்து கொள்ள விரும்ப வில்லை என்றும், மறுத்து விட்ட தாகவும், அதனால்தான் ஐ. சி. எஸ். தேர்வில் தேர்ச்சி பெறவில்லை என்றும் மகன் எழுதியிருந்தான்! மகனது பிடிவாதத்தை அறிந்திருந்த தந்தை, உடனே புறப்பட்டு இந்தியா வுக்கு வரும்படி தந்தி கொடுத்தார். மகனும் உடனே கிளம்பி விடுவதாகப் பதில் அனுப்பினார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு டாக்டருக்கு இன்னொரு அதிர்ச்சி யான தகவல் கிடைத்தது. மகன் வருவதாக இருந்த கப்பல், மூழ்கிவிட்ட செய்தியே அது! கப்பல் கம்பெனியோடு தொடர்பு கொண் டார். செய்தியை அவர்கள் உறுதி செய்தனர்.


மகனின் மேல் அளவற்ற பாசம் வைத்திருந்த டாக்டருக்கு, அந்தத் துயரச் செய்தியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. உடனே மயங்கி விழுந்தார். அடுத்த 4 வது நாள் அவர் இறப்பைத் தழுவிக் கொண்டார். புத்திரபாசம் அவரது உயிரை வாங்கிக் கொண்டது.

ஆனால், இறைவனது திட்டம் வேறாக இருந்தது. பயணம் செய்யத் திட்டமிட்டிருந்த கப்பலில், அவரது மகன் எதிர்பாராதவிதமாக ஏறவே இல்லை; உயிர் பிழைத்துக் கொண்டார்! இந்தியா வந்த பிறகுதான் தன் இறப்புச் செய்தி கேட்டுத் தந்தை மாண்டதையும், தான் இறந்து விட்டவர்களில் ஒருவனாகக் கருதப்பட்டதையும் மகன் அறிந்து கொண்டார்.

இறந்து மீண்ட இந்த அதிசய மனிதர் வேறு யாருமல்ல. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தீவிர வாதியாக இருந்து, சிறைக் கொடு மையை அனுபவித்து, துறவியாகி, பாண்டிச்சேரியில் ஆசிரமம் அமைத்து அறம்வளர்த்த அரவிந்தர்தான். அவர் பிறந்த நாளும் இந்தியா சுதந்திரம் பெற்ற நாளும் ஒன்றுதான். இந்தியா சுதந்திரம் பெற்றதைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்த பிறகு உயிர்நீத்த விரல் விட்டு எண்ணக்கூடிய ஒருசில சுதந்திரப் போராட்ட வீரர்களுள் அர விந்தரும் ஒருவர்.


சுதந்திரம் என்ற பெயர் முழங்கும் வரை அரவிந்தரின் பெயர் நிலைத் திருக்கும்!

மழை பெய்யாத போது குடை பிடிப்பார்கள்!




★ ஜப்பானைச் சேர்ந்த கியூஷி தீவி லுள்ள துறைமுக நகரமான ககோஷிமாவில் வசிக்கும் மக்கள், மழை பெய்யாத போதும் கூடக் குடைபிடித்துக் கொண்டுதான் நட மாடுவார்கள்! அருகில் உள்ள சகுராஜிமா எரிமலையிலிருந்து வெளிப்படும் சாம்பலி லிருந்து பாதுகாத்துக் கொள்ளவே இது.

- டி. எஸ். உசேன், செஞ்சி - 2.



சூரியன் தோன்றாவிட்டால்...



★ சூரியன் தோன்றுவது திடீரென்று நின்று விட்டால் பன்னிரெண்டு நாட்களில் பூமியில் உள்ள எல்லாப் பொருட்களும் உறைந்து விடும். அச் சமயத்தில் பூமியின் வெப்ப நிலை உறை நிலைக்கு 60 டிகிரி சென்டிகிரேடுக்கும் கீழே 48 மணி நேரத்தில் வந்து விடும் என்று ஆஸ்திரேலிய விஞ்ஞானி 'பேரிஹண்ட்' கண்டறிந்துள்ளார்.

- டி. எஸ். உசேன், செஞ்சி - 2.



குரங்கு கட்டிய வருமான வரி..!

★ குரங்கு வரி கட்டுமா? அமெரிக்காவில் உள்ள டெட்ராய்ட் மிருகக் காட்சி சாலையைச் சேர்ந்த ஜாமண்டி என்ற 'ஊராங் ஊடாங்' என்ற குரங்கு 1933 ஆம் ஆண்டு 360 ரூபாய் வருமான வரி கட்டியது. அந்த குரங்குக்கு அதன் குரங்குத்தனத்தால் கிடைத்த ஆண்டு வருமானம் 19,000 ரூபாய் என்றும் அதில் டாலருக்கு உரிய வரிவிலக்கு போக மீதித் தொகைக்கு உரிய வரியைக் கட்டியிருப்பதாகவும், குரங்கு எழுதியது போலவே அதன் மேனேஜர் அதிகாரிகளுக்கு எழுதிப் பணத்தை கட்டினார்.

- சா. இரா. மணி, வந்தவாசி.



தூள் தூள் கண்ணாடி எதால் ஆனது?

★ ''டிஷ்ஷு¬ங்! டிஷ்ஷு¬ங்!'' ஸ்டண்ட் படங்கள், ஜேம்ஸ் பாண்ட் படங்கள் போன்ற திரைப் படங்களில் ஸ்டண்ட் நடிகர்கள், சண்டைக் காட்சியின் போது அனாயசமாக சுவர்; கண்ணாடி சன்னல்கள் முதலியவற்றை உடைத்து நொறுக்கி அவற்றின் மீதே சண்டை செய்து நடித்து, பிரமிக்க வைக்கின்றனர். இருந்தும் அவர்களுக்குத் துளியும் காயம் ஏற்படுவதில்லை. காரணம்? அவை உண்மையாக வாட்லோடு - கண்ணாடியில் உ ரு வா க் க ப் ப ட் ட வை யல்ல. பூரா கல்கண்டு சர்க்கரையினால் அப்ப்டிப்பட்ட 'செட்'களைச் செய்கின்றனர். ஹாலிவுட்டில். அவற்றிற்கு 'காண்டி கிளாஸ்' (Candy glass) என்று பெயர்! நம் நாட்டில் எப்படிச் செய்கி றார்களோ?!

- கீதா, சென்னை - 61.

பாடத்தை மட்டும் படிடா!

காட்சி : 1

(ராமலிங்கத்தின் வீடு. காலை நேரம். நமசிவாயம், கண்ணம்மா, ராமலிங்கம்.)

கண்ணம்மா : டேய் ராமலிங்கம்... சொன்ன பேச்சையே கேட்க மாட்டேங்கறியே.. உன்னை எப்படித் திருத்தறதுன்னே தெரியலயே!

ராமலிங்கம் : அம்மா... எப்பவாவது நீங்க சொல்ற பேச்சை நான் மீறியிருக்கேனா?

கண்ணம்மா : மீறாம என்னடா பண்றே? காலையில தினமும் ஒரு மணி நேரம் ஊரைச் சுத்திகிட்டு வர்ரே. உங்க அப்பாவும் கண்டிச்சுப் பாத்துட்டாரு. நீ கேக்கறவழியா இல்லே. அந்தப் பழக்கத்தை மாத்திக்கறவழியா இல்லையே?

ராமலிங்கம் : அம்மா... நான் ஊரைச் சுத்தப் போகலம்மா. ஊரைத் தெரிஞ்சுக்கப் போறேன்.

நவசிவாயம் : (வந்து கொண்டே) இப்படி எதாவது இடக்குப் பேசறதுக்குத்தான் உன் மகன் லாயக்கு. உருப்படாதப் பயல். படிச்சா மட்டும் போதுமா? அப்பா அம்மா சொல்படி நடக்க வேணாம்?

கண்ணம்மா : சரி... சரி... காலையிலேயே திட்டாதீங்க. இனிமே இப்படிச் சுத்தப் போக மாட்டான்.

ராமலிங்கம் : நீங்க ரெண்டு பேருமே என்னை சரியாய் புரிஞ்சுக்கலே. நான் தினமும் நம்ம கிராமத்துல இருக்கிற வாசக சாலைக்கு செய்தித்தாள் படிக்கிறதுக்குத்தான் போறேன்.

நமசிவாயம் : ஆமா. இவரு செய்தித்தாள் படிச்சுத்தான் நம்ம கிராமத்துல நெல்லும் கரும்பும் விளையப் போகுது. ஒழுங்கா ஸ்கூல் பாடத்தை மட்டும் படிச்சாப் போதும்டா.

கண்ணம்மா : என்னமோ... போ. நாங்க ரெண்டுபேரும் ரெண்டாவதோட படிப்பை முடிச்சவங்க. நீயாவது பெரிய படிப்புப் படிக்கணும்னு ஆசைப்படறோம். ஊம்.... நீ என்னடான்னா தர்க்கம் பண்ணிக்கிட்டேயிருக்கே.

ராமலிங்கம் : அம்மா... சரிம்மா. இனிமே நான் வாசக சாலைக்குப் போகலை. ஆனா... இன்னிக்கு ஒரு நாள் மட்டும் போய் செய்தித்தாள் பார்த்துட்டு உடனே வந்துடறேம்மா...

கண்ணம்மா : என்னங்க... இன்னிக்கு மட்டும் போயிட்டு வந்துரட்டும். திட்டாதீங்க.

நமசிவாயம் : எ ப் ப டி யோ தொலையட்டும். நான் வயக்காட்டுக்குப் புறப்படறேன்.

காட்சி : 2

(தெரு .காலை நேரம். கார்மேகம்.

கமல வேலன்

ராமலிங்கம்)

கார்மேகம் : (கையில் ஒரு பில் புக்கோடு தனக்குள்.) இது பரந்தாமன் சீட்டுக் கம்பெனி 'பில்புக்'. அந்தப் பரந்தாமன் கருணையினால... இந்த 'பில்புக்' நம்ம கையில கிடைச்சிருக்கு. அருமையான சந்தர்ப்பம். இந்த மாத வசூலை, பண்ணையார் வீட்டுல யிருந்தே தொடங்குவோம்.

ராமலிங்கம் : (வந்து கொண்டே) வணக்கம் கார்மேகம் அண்ணே! வழக்கமான வசூலா?

கார்மேகம் : ஆமா... தம்பி. எங்க கம்பெனியிலே ஒவ்வொரு மாசமும் டாண்ணு 5-ம் தேதி வசூல் பண்ணிடுவோம். டாண்ணு 6-ம் தேதி குலுக்கல். டாண்ணு 7-ம் தேதி பணத்தை எண்ணிக் கையில கொடுத்திட்டு....

ராமலிங்கம் : டாண்ணு 8-ம் தேதி அடுத்த மாச வசூலுக்குப் புறப் பட்டுடுவீங்க. அப்படித்தானே? அண்ணே.. போற வழியில எங்க அப்பாவிடமும் சீட்டுப் பணத்தை வாங்கிட்டுப் போயிருங்க. இல் லேன்னா... அவரு காசைப் பொடி யாய் போட்டு தும்பித் தள்ளிடுவாரு!

கார்மேகம் : உங்க அப்பா என்ன.... ஒருத்தர் பாக்கியில்லாமல் எல்லார் கிட்டேயும் டாண்ணு வசூலிச்சிட மாட்டேன்!

ராமலிங்கம் : அண்ணே.. அந்த பில்புக் அழகாயிருக்கே. கொடுங்க பார்த்துட்டுத் தர்ரேன்.

கார்மேகம் : அதுக்கென்ன தாரா ளமாப்பாரு....

ராமலிங்கம் : (வாங்கிப் பார்த்து விட்டு) 1501......, 1502...., என் னண்ணே... இது 1502, 1502 ன்னு நம்பர் போட்டிருக்கு?

கார்மேகம் : அது சீரியல் நம்பர். அதெல்லாம் உனக்கெதுக்கு..... வசூலுக்கு நேரமாச்சு.... நான் வர்ரேன்.

ராமலிங்கம் : பார்த்துப் போங் கண்ணே... எதுத்தாப்பல..... செம்மறி ஆட்டுக் கூட்டம் வருது!

கார்மேகம் : (கோபமாக) நான்



ஏற்கனவே கண்ணாடி போட்டிருக்கி றேன். எனக்கு நீ சொல்றியா. செம்மறி ஆடு வருதாம். செம்மறி ஆடு. பொடிப்பய.... பொடிப் பயன்.

ராமலிங்கம் : கோவிச்சுக்காதீங்க அண்ணே. நா.... வாசக சாலையில் போயி பேப்பர் படிச்சுட்டு பள்ளிக் கூடம் கிளம்பணும். நான் வர்ரேன்.

கார்மேகம் : காலம் கெட்டு போச்சு. சின்னப் பயலுளெல்லாம் செய்தித் தாள் படிக்க ஆரம்பிச்சுட்டா னுங்க. ஊம்... படிப்பைக் கோட்டை விட்டுடாதே...

காட்சி : 3

(ராமலிங்கத்தின் வீடு, காலை நேரம். நமசிவாயம், கண்ணம்மா, ராமலிங்கம், கார்மேகம்.)

கார்மேகம் : (வந்து கொண்டே) ஐயா... ஐயா...

கண்ணம்மா : வாங்க.... வாங்க....

கார்மேகம் : அம்மா நமஸ்காரம். இந்த மாதம் சீட்டுப் பணத்தை வசூலிக்க வந்திருக்கேன்.

கண்ணம்மா : உட்காருங்க. ஐயா அவர் வந்துடுவாரு. (பணம் எடுக்கச் செல்கிறாள்)

நமசிவாயம : (வந்து கொண்டே) வாங்க... கார்மேகம். சௌக்யம் தானே.

கண்ணம்மா : இந்தாங்க நூறு ரூபாய் இருக்கு. இந்த மாசமாவது நமக்குச் சீட்டு விழுமா?

கார்மேகம் : கட்டாயம் விழும்.

நமசிவாயம் : எப்படி அவ்வளவு உறுதியாச் சொல்றீங்க?

கார்மேகம் : எம் மனசுல அப்ப டித் தோணுதே! பகவான் பரந்தாமன் அருள் உங்களுக்குப் பூரணமாயிருக்கு. நேரமாகுது. இன்னும் நிறைய வீடு போகணும். நான் வரட்டுமா.

நமசிவாயம் : போயிட்டு வாங்க கார்மேகம்.

காட்சி : 4

(ராமலிங்கத்தின் வீடு. காலை நேரம். நமசிவாயம், கண்ணம்மா, ராமலிங்கம்.)

ராமலிங்கம் : (மூச்சிரைக்க ஓடி வந்து) அப்பா... அந்த சீட்டுக் கம்பெனி கார்மேகம் வந்தாரா...?

கண்ணம்மா : வந்து இப்பத்தான் சீட்டுப் பணத்தை வசூலிச்சுட்டுப் போனாரு...

நமசிவாயம் : இந்த மாசம் சீட்டு நமக்கு விழுந்தாலும் விழும்னு கூடச் சொன்னாரே.

ராமலிங்கம் : அப்பா.. அந்த ஆளு ஒரு மோசடிப் பேர்வழி. அவரை உடனே பிடிக்கணும்.

நமசிவாயம் : என்னடா உளர்றே?

கண்ணம்மா : நீங்க முதல்ல நம்ப பண்ணையாட்களை அனுப்பி அவனைப் பிடிக்கச் சொல்லுங்க...

நமசிவாயம் : அதுவும் சரிதான். டேய் முனியாண்டி, கருப்பையா ரெண்டு பேரும் ஓடிப் போயி அந்தக் கார்மேகத்த மடக்கிப் பிடிங்க. (வேலையாட்கள் விரைகிறார்கள்)

கண்ணம்மா : அதுசரி... அவன் ஒரு மோசடிப் பேர்வழின்னு நீ எப்படிக் கண்டு பிடிச்சே...?


ராமலிங்கம் : எல்லாம் இந்த செய்தித்தாளைப் படிச்சாத் தெளிவாகத் தெரியும். வாசக சாலை யில் அனுமதி வாங்கி பேப்பரையே கையோடு எடுத்துகிட்டு வந்தேன். வாசிக்கிறேன் கேளுங்க.

நமசிவாயம் : எங்களுக்குத்தான் படிக்கத் தெரியாதே... நீ படிச்சு சொல்லு...

ராமலிங்கம் : (படிக்கிறான்) இப்பவும் எங்கள் கம்பெனியில் ''பில்புக்'' சில காணாமல் போய் விட்டன. அவைகளின் விபரம் கீழே கொடுத்துள்ளோம். அந்த எண் உள்ள புத்தகங்களில் யாரேனும் பில் போட்டுத் தந்தால் அதற்குக் கம்பெனி பொறுப்பாகாது என்று தெரியப் படுத்துகிறோம். I) வரிசை எண் 1501 முதல் 1600 முடிய. II) வரிசை எண் 3301 முதல் 3400 வரை.

நமசிவாயம் : நல்ல நேரத்துல நீ படிச்சுப்பார்த்துட்டே. இல்லே நம்ப பணம் பூரா போயிருக்கும்.

கண்ணம்மா : அது சரி! இவன் தான் அந்த மோசடிப் பேர்வழின்னு நீ



எப்படிக் கண்டுபிடிச்சே?

ராமலிங்கம் : நான் பேப்பர் படிக்கறதுக்காக வாசக சாலைக்குப் போகும் வழியில் கார்மேகத்தைப் பார்த்தேன். அப்ப.... எதேச்சையா அவர் கையிலயிருந்த ''பில்புக்கை'' வாங்கிப் பார்த்தேன். அது ஒரு வகைக்கு நல்லதாப் போச்சு!

கண்ணம்மா : பாத்திங்களா! ராமலிங்கம் தினசரி பேப்பர் படிக்கிறதனால... நம்ம ஊர்ல ரொம்பப் பேருடைய பணம் போயிடாம... காப்பாத்திட்டான்.

(பண்ணையாட்கள் கார்மேகத்தை இழுத்து வருகிறார்கள்.)

கார்மேகம் : ஐயா... ஐயா... அடிக்காதீங்க. இனிமே அடிதாங்க மாட்டேன். எனக்கு வேணும். பத்து நாளைக்கு முன்னாலதான் என்னை வேலைய விட்டுத் துரத்திட்டாங்க. அந்த விஷயம் இராமத்து ஜனங்களுக்குத் தெரியறதுக்குள்ளே கிடைச்சதை சுருட்டிட்டுப் போயிடலாம்னு திட்டம் போட்டேன்!

ராமலிங்கம் : அந்தப் பரந்தாமன் திட்டம் வேற மாதிரி ஆயிடுச்சு!

நமசிவாயம் : கார்மேகம்.... அழகிய மங்கலத்துக்காரங்களெல்லாம் அசடுன்னு நினைச்சிங்களா?

கண்ணம்மா : எப்படியோ எல்லாருமா... சேர்ந்து அவனைப் பிடிச்சுட்டீங்க. நம்ம பணமும் கைக்கு வந்துட்டுது. இனிமேலாவது நம்ம பையனை சோம்பேறி, ஊர் சுத்தின்னு திட்டாதீங்க.

ராமலிங்கம் : ''புத்தக அறிவு மட்டும் போதாது. பொது அறிவும் வேணும்னு'' எங்க ஆசிரியர் அடிக்கடி சொல்லுவாரு. அதனாலதான் நீங்க சொல்றதை மீறிப் படிக்கப் போனேன். அது தவறுன்னா மன்னிச்சுடுங்கப்பா...

நமசிவாயம் : ராமலிங்கம் உன் மேல எந்தத் தப்பும் கிடையாது. இனிமேல் தினமும் நானே செய்தித்தாள் வாங்கித் தர்ரேன். சரிதானே.

கண்ணம்மா : அது நல்ல யோசனைங்க. அப்படியே செய்யுங்க.

தண்டனை

கோபாலும், செல்வனும் இணைபிரியா நண்பர்கள். பிறரைக் கேலிசெய்வது ஏமாற்றுவது, பொய் சொல்வது எல்லாம் அவர்களுக்கு அல்வா சாப்பிடுவது போல. அன்று விடுமுறை நாள். ஆனால் பாவம் கையில் காசு இல்லை. வருத்தத்துடன் இருந்தனர்.

அந்த நேரம் பார்த்து கோபாலை அவன் அம்மா அழைத்து ''டியூப் லைட் ஃபீசாகி விட்டது புது டியூப் ஒன்று வாங்கி வா,'' என்றாள். டியூப் லைட்டை வாங்கிக் கொண்டு வந்தான் கோபால். அவனைப் பற்றி நன்றாகத் தெரிந்த அம்மா ரசீதைப் பார்த்து மீதிப் பணத்தை ஒருபைசா குறையாமல் வாங்கிக் கொண்டாள். செல்வனிடமும் மூன்று ரூபாய்தான் இருந்தது.

பழைய டியூபைக் கழற்றி விட்டுப் புது டியூபைப் பொறுத்தும் போது கோபாலின் மூளையில் 'பளிச்' சென்று ஒரு ஐடியா தோன்றியது. பழைய டியூபைத் துடைத்துப் புதிய டியூப்லைட் வாங்கி வந்த நீண்ட அட்டைக் குழலில் வைத்தான். மேஜையின் மேல் இருந்த ரசீதையும் எடுத்து சட்டைப்பையில் வைத்துக் கொண்டு செல்வனுடன் சென்றான்.

செல்வனுக்கு ஆவலை அடக்க முடியவில்லை. ''என்னடா செய்யப் போறே!'' என்று அடிக்கடி கேட்டுக் கொண்டே வந்தான்.

கோபால் பதில் கூறாது சிரித்த படியே சாலையில் நடந்தான்.

எதிரே சைக்கிளில் ஒரு பெரியவர் வந்து கொண்டிருக்க, கோபால் வேண்டுமென்றே அவர் சைக்கிளில் மோதிக் கீழே விழுவது போல் நடித்தான். அவன் கையில் இருந்த டியூப் லைட்டும் உடைந்தது.

உடனே அங்கே நாலைந்து பேர் கூடிவிட்டனர். ''என்ன தம்பி, பலமா அடிபட்டிடுச்சா?'' என்று ஒருவர் கேட்க, கை, கால்களை உதறியபடி எழுந்து முகத்தைப் பரிதாபமாக வைத்துக் கொண்டான். கோபால் ''ஐயா எனக்கு அடிபட்டாலும் பரவாயில்லை. எங்க வீட்டுக்காக நான் புது டியூப்லைட் வாங்கிக்கிட்டு ஓரமா வந்திட்டிருந்தேன். இவர் சைக்கிளில் வேகமா வந்து மோதிட்டார். டியூப் உடைஞ்சு போச்சு. எங்க அப்பா நல்ல அடிப்பாருங்க'' என்று கண்களைக் கசக்கினான்.

''ஐயோ பாவம்! சின்னப் பையன் மேல இப்படி முரட்டுத்தனமா வந்து சைக்கிளை மோதிட்டியே? நீயெல்லாம் ஏய்யா சைக்கிளை ஓட்டறே?'' என்று பெரியவரைத் திட்டினர். ஒருவர் அந்தப் பெரியவர் ஏதோ சொல்ல முயன்றார். ஆனால் யாருக்குமே அதைக் கேட்கும் பொறுமை இல்லை. தலைக்குத் தலை திட்டினர்.

''அவரைத் திட்டாதீங்க ஐயா,'' என்ற கோபால் ''இதோ பாருங்க டியூப் வாங்கின ரசீது. முப்பது ரூபா, இதைக் கொடுத்துருங்க பெரியவரே'' என்று ரெடியாக சட்டைப் பையில் வைத்திருந்த ரசீதை எடுத்துக் காட்டினான். பக்கத்தில் நின்றவர்களும் ரசீதைப் பார்த்து விட்டு ''ஆமாங்க பணத்தைக் கொடுப்பதுதான் நியாயம்'' என்று தீர்ப்பு வழங்கினர். வேறு வழியின்றித் தன் கையில் இருந்து முப்பது ரூபாயை எடுத்துக் கொடுத்து விட்டுப் பெரியவர் நகர்ந்தார். கூட்டமும் கலைந்தது.

கோபால் செல்வனைப் பார்த்துக் கண் சிமிட்டினான். எப்படி என் சாமர்த்தியம் என்பது போல, 'மூணு படம் பார்க்கலாம்', என்று செல்வன்

எஸ். சரவணலதா



மகிழ்ந்தான். சினிமாவிற்கு நேரமாகி விட்டதால் இருவரும் ஓட்டமும் நடையுமாக விரைந்தனர்.

அந்தத் தெரு முனையில் அவசர மாகத் திரும்பும் போது, எதிரே வந்து கொண்டிருந்த ஒரு பெண்ணின் மேல் கோபால் மோதிவிட அவள் கையி லிருந்த கண்ணாடி பாட்டில் கீழே விழுந்து 'சிலீர்' என்ற சத்தத்தோடு உடைந்தது. பாட்டிலில் இருந்த எண்ணெய் தரையில் கொட்டிப் பரந்தது. அந்தப் பெண் கோபத் துடன் கோபாலின் சட்டையைப் பிடித்து இழுத்தாள். உடனே கூட்டம் சேர்ந்துவிட்டது.

''ஏண்டா, இப்படியா மாடு மாதிரி வந்து மேல விழுவே! இப்ப ஒரு லிட்டர் தேங்கா எண்ணெயும் கொட்டிப் போச்சே? என்ன பதில் சொல்றே? மரியாதையா பதிலுக்கு எண்ணெயை வ ா ங் கி க் கொடு. இல்லை உங்களை விடமாட்டேன்'' என்று கத்தினாள்.

''இவனுங்களுக்கு ஏதோ ஆகாசத் தில மெதக்கறதா நெனப்பு'', என்று ஒரு கிழவி, அந்தப் பெண்ணை மேலும் உசுப்பிக் கொடுத்தாள். கோபாலுக்கு மிகவும் அவமானமாக இருந்தது. பையிலிருந்த முப்பது ரூபாயை எடுத்துக் கொடுத்தான். எண்ணிப் பார்த்த அந்தப் பெண், ஒரு லிட்டர் எண்ணெய் முப்பத்தைந்து ரூபா. இன்னும் அஞ்சு ரூபாய் எடு'' என்றாள். கோபால் செல்வத்தைப் பரி தாபமாகப் பார்த்தான்.

''செல்வன் த ன் னி ட மு ள் ள மூன்று ரூபாயை எடுத்துக் கொடுத்து விட்டு, ''வேறு பணம் ஏதும் என்னி டம் இல்லைங்க'' என்றான் பரிதாப மாக.

''உன்னால பாட்டிலும் உடைந்து ரெண்டு ரூபாயும் நஷ்டம்'' என்று வெறுப்புடன் கோபாலைப் பார்த்துக் கரித்துக் கொண்டே போனாள் அந்தப் பெண்.

செல்வனும் கோபாலும் ஒருவரை ஒருவர் பார்க்க அவமானப்பட்டுத் தலை குனிந்தபடி வீட்டை நோக்கி நடந்தனர்.



★ 'சீதா கல்யாணம்' படக்கதை, திருநெல்வேலி அல்வாவைச் சுவைத்துச் சாப்பிடுவது போல் வெகு சூப்பராக இருந்தது.

சிந்தாமணி, போ. கோபாலகிருஷ்ணன்.

★ ''கேளுங்கள் சொல்லப்படும்'' பகுதி விஞ்ஞான அறிவை வளர்க்கும் சிறந்த பகுதியாகத் திகழ்கிறது. நன்றி!

கருமத்தம்பட்டி, ஆ. அருண்பிரகாஷ்.

★ வெற்றியூர். சுப. திருஞானம் அவர்களின் காலத்தை வென்றனர் கவிதை இனிமை.

சேலம், எம். கே. சக்திவேல்.

★ குழந்தைகளோடு நேரு, ராஜீவ் காந்தி கலந்து கொண்ட படங்களைப் பார்த்த போது எங்கள் வீட்டுக் குழந்தைகள் கண்ணீர் சிந்திக் கதறி விட்டனர்.

மதுரை - 6, கடல்வண்ணன்.

★சர்க்கரை வியாதி பற்றிய டாக்டரின் விளக்கம் சந்தோஷத்தை ஏற்படுத்தியது.

சிறுவர் சங்கங்களை கண்டு நீங்கள் பிரமித்து விட்டீர்கள்! ஆனால்... சிறுவர் சங்கப் பணிகளைப் படித்து நாங்கள் மலைத்து விட்டோம்!

மொரப்பூர், அ. நவ்சாத்.

★ மணி திருந்தினான் படக்கதை அருமை. பாராட்டுக்கள்!

மகிழஞ்சேரி, கே. கணேசன்.

★ 'எறும்போ எறும்பு' எறும்பு பற்றிய தகவல் வித்தியாசமாக இருந்தது.

குத்தாலம், ஜி. வெங்கி.

★ இத்தனை சின்ன வயதில், ஊனத்துக்கே சமாதி கட்டி, சாதனை நிகழ்த்திய விமலாவின், தன்னம்பிக்கை எங்களை வியக்கவே வைத்தது!

கும்பகோணம், புலவர். எஸ். கே. மூர்த்தி.

★ பூனையைப் பற்றிய பல அறிவியல் உண்மைகளை கோகுலத்தின் மூலம் அறிந்து கொண்டேன்.

நல்லாலம், ந. நவமணி.

★ ''தோல்விக்குக் காரணம் சிறு கதையில் இறுதியில் மனம் திருந்தியது. அம் மாணவன் மட்டும் இல்லை நாங்களும்தான். இன்று சமுதாயத்தில் மாணவர்கள் நடக்கும் உண்மை நிலையை யதார்த்தமாய்ச் சொல்லிய பார்த்தசாரதியின் பள்ளிக்கு முழுக்கு அபாரம்.''

தக்கோலம், அ. முஸ்தபா கமால்.

★ ஒரு பம்பரத்தைக் கொண்டே அறிவியலை அழகுபட விவரித்த ஜி. எஸ். சுப்ரமணியனின் கட்டுரை மிகவும் அருமை.

வந்தவாசி, கே. எஸ். பாஸ்கரன்.

★ மீன்களிடையே இவ்வளவு விசித்திர குணங்களா, நம்ப முடியவில்லையே...!

விசலூர், க. கோகுலகிருஷ்ணன்.

★ ''அவசரப்பட்டு'' கதை வெகு அருமை. இதுபோன்ற கதைகளைத் தொடரவும். மொத்தத்தில் கோகுலமே சூப்பர் தான்.

சிறுகன்பூர், அய்யா. முத்துக்குமார்.

★ மாணவர்களின் அறிவுப் பசியைப் போக்கும் கோகுலத்திற்கு நிகர் கோகுலம் தான்.

கும்பகோணம், ம. கணேசன்.

★ அமரர். கி. வா. ஜ. வின் 'கூடும் ஓடும்' கதை அருமை.

குத்தாலம், பி. பிரசாத்.

★ கேள்வி - பதில் பகுதியில் வெள்ளைக் காகம் உள்ளதா என்ற கேள்விக்கு இல்லை என்று பதில் கூறியிருந்தீர்கள். வெள்ளைக் காகம் திருவனந்தபுரம் 'ஜூ'வில் உள்ளது. நான் பார்த்துள்ளேன்.

கோவை - 11, மா. கந்தசாமி.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.


முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. தொலைபேசி: ஆசிரியர் குழு அலுவலகம்: 2344145: சர்க்குலேஷன் மானேஜர்: 2344190: விளம்பரம் — சந்தா: 2344157: டைரக்டர்: 2341543.

ஆறு மாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/-: வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 60/-: விமானத் தபால்: ரூ. 135/-

ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/-: வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 120/-: விமானத் தபால் ரூ. 270/-

In a class of its own

Exclusive pencils for one and all,



LION PREMIER®
HB PENCILS


Sleek, Elegant, meant for executives and others, who like style A consistent dark tone for effortless writing - micronized lead for unbreakable points are what adds to its superiority.






LION PINKY®
PENCILS


Lion 'PINKY' Pencils Pretty Perfect, Ideal for children because of its pretty designs & colours.Strongly bonded lead for unbreakable points and super smooth writing add to its attraction.





LION Geematic®
DRAWING PENCILS

Lion Geematic Drawing Pencils. A unit for all Professionals like artists, architects, designers & engineers. Give expertise an edge. Available in 14 grades from H to 6H and B to 6B HB and F



LION PENCILS LTD
95, Parijat, Marine Drive
BOMBAY 400 002

REGISTERED NO. 1M 88 (S) 281
Registered as Newspaper in Srilanka

பாரீஸ் பிஸ்கட்டுகள்

"வாழ்க்கை சுவையாக இருக்கவேண்டும்"
இதைச் சொல்லப் பல வழிகள் உண்டு...



வாழும் வாழ்வில் சுவை இருக்கவேண்டும். மனத்துக்கினிய மணம் இருக்கவேண்டும். அதற்கு பாரீஸ் காட்டும் வழி: ☐ சாறுள்ள பைனாப்பிள் கிரீம் ☐ சாறு செறிந்த ஆரஞ்சு கிரீம் ☐ கெட்டியான சாக்கலேட் கிரீம் ☐ புத்துணர்ச்சி தரும் காரட்மம் கிளாஸிக் ☐ சத்து நிறைந்த குளுக்கோஸ் ☐ உடல்நலத்திற்கு மில்க் பிஸ்கட்டுகள் ☐ எந்நேரத்திற்கும் ஏற்ற மாரி வாழ்வில் சுவை கூட்ட இவை எல்லாம் சேர்ந்து சிறந்த சுவையை அள்ளித் தருகின்றன.

பாரீஸ் – அனைவரும் விரும்பும் தரமான பிஸ்கட்டுகள், மிட்டாய்கள்.

PARRY'S

Parry's
FRESH & CRISP BISCUITS